உ

கணபதிதுணை.

கவிச்சக்கரவர்த்தியாகிய

கம்பர்குமாரர்

அம்பிகாபதி

இயற்றிய

# அம்பிகாபதிகோவை

இஃது

திருநெல்வேலி

சரஸ்வதிவிலாசசபையார்களது

வேண்டுகோளின்படி

மேற்படி ஜில்லா அரிகேசவநல்லூர்

இராமையரவர்கள்குமாரர்

அரிகரமையரால்

திருநெல்வேலி
ஆரியப்பிரகாசினிஅச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

விளம்பி௵ தைமீ.

1899.

*Copy Right Registered.*

இதன்விலை [redacted]

# அறிவிப்பு.

இப்புத்தகம் வேண்டுபவர்கள் திருநெல்வேலி சரஸ்வதிவிலாச புஸ்தகசாலை காரியதரிசி மகா-ா-ஸ்ரீ பால்வண்ணமுதலியாரவர்களிடத்திலும் ஷையூர் மேலரதவீதி புஸ்தகடிப்போ மக-ா-ா-ஸ்ரீ சிவராமபிள்ளையவர்களிடத்திலும் திருநெல்வேலி ரெயில்வேஸ்டேஷனில் புஸ்தகடிப்போ மக-ா-ா-ஸ்ரீ K. இராமச்சந்திராயரவர்களிடத்திலும் இந்நூலையச்சிற்பதிப்பித்த அரிகேசவநல்லூர் அரிகரமையரவர்களிடத்திலும் கிரயத்திற்குப்பெற்றுக்கொள்ளலாம்.

இங்ஙனம் அரிகரமையர்.

சிவமயம்.

# முகவுரை.

நிலமகள் திலதம்போன்ற சோழவளநாட்டில் அரசுபுரிந்த குலோத்துங்கசோழமகாராஜாவின் சபையிலுள்ள வித்வான்களிற் சிறந்தவரும், இராமாயணம் பாடியவருமாகிய கவிச்சக்கரவர்த்தியென்னுங் கம்பருக்கோர் புத்திரர் பிறந்தனர். அவருக்கு கம்பைநதிபாயுங் கம்பநாட்டிலெழுந்தருளிய ஏகம்பநாதரென்ற சிவபிரானது திருநாமத்தை முன்னோர் தமக்கிட்டழைத்ததுபோற் றமும்முறை வழுவாது அம்பிகாபதியென்று நாமகரணஞ்செய்தனர். அவர் சிறுவயதிலேயே முத்தமிழையும் ஐயந்திரிபறக்கற்றுத் தன் பிதாவைப்போற்றாமுங் கண்டசுத்தி பாடும்வன்மையெய்தினர். இவர் இக்கோவையுள் 36-வது செய்யுளில் (மாதவிபெற்றமணிமேகலை நம்மை வாழ்விப்பதே என்றும்) ௱௫௰௬-வது செய்யுளில்(அன்றே தவிர்தலன்றேயறிவார்) என்றுங் கூறியிருத்தலாற் றமிழிற் பஞ்சகாவியங்களையும் குறண்முதலிய நீதிநூல்களையு நன்குணர்ந்தவரென்று விளங்குகின்றது. (உ௰உ-வது செய்யுளில்) (அருந்தியவாறெங்ஙனே யெம்பிரானுமமரருமே என்றும்) ௱௰-வது செய்யுளில்) தன்னிற்கடவுளரில்லாததன்மை தரித்தகங்கைச் சென்னிக்கடவுள் செயலனையாய்) என்றுமிவை போன்ற பலசெய்யுட்களுங் கூறியிருத்தலாலிவர் சிவபிரானையே முதற்கடவுளாய்க்கொண்ட சைவரென்றும் (அருளம்பிகாபதி) என்ற துடக்கத்து அவையடக்கச்செய்யுளாலிக் கோவையையச் சிவபிரானார்க்கேயர்ப் பித்தனரென்பதுந் தெற்றெனவிளங்கும்.

பொதுவாய்க் கோவைகட்குச் சிங்காரரசப்பொருளோடு நாயகநாயகியரைப் பதிபசுக்களாக ஞானூர்த்தங் கூறலுமுளதாகலின் அங்ஙனங்கூறுழி, தலைவனிடம் பெயர்குணுதிகளை விலக்கலாவசியமும் விலக்காவுழி நேரிடுமிடர்ப்பாடும்நோக்கித் துறைகூறிய விடையமுஞ் சுவையும் பொலிந்து நிலவச் செய்யுண்முழுமையு மிலக்கியமாகவுரைத்தன ரெனலே சால்புடைத்தாம். தொல்காப்பிய அகப்பொருளிலக்கணத்தைப் பெரும்பாலுந்தழூஉமிலக்கியமாகிய இக்கோவை கற்பனாலங்கார நவரசங்களான்மிக்க பொலிவுடைமையாற் கற்பார் யாவருக்கு மின்பம்பயக்கும் மென்பதற் கோரையமில்லை.

இந்நூலாசிரியர் சரித்திரத்தைப் பிறநூல்களாற்றெளிந்துகொள்க.

---

## அகப்பொருள்விளக்கச்சுருக்கம்.

அமிழ்தினுமினிய தமிழ்மொழிக்குரிய இலக்கியத்தினமைதியைக் காட்டுமிலக்கணங்களைந்து இவற்றுண் மூன்றாவதாகிய பொருளிலக்கணம் அகப்பொருளும் புறப்பொருளுமென இருதிறத்தனவாகும் இவைமுறையே அகத்

திணையெனவும் புறத்திணையெனவும் வழங்கும். ஈண்டு அகப்பொருளென்பது யென்னையெனில் அறம் பொருள் இன்பம் என்னுமிம்மூன்றனுளிறுதிக்கட்கூறப்பட்ட இன்பமென்னும்பொருளாம் அஃது ஒத்தவன்பினால் ஒருவனும் ஒருத்தியுங் கூடுங்கூட்டத்திற்பிறந்து அவருள்ளத்தின்கண்ணிகழ்வதாதலின் அகப்பொருளெனப்பட்டது. மேற்கூறிப்போந்த அகப்பொருள் கைக்கிளை ஐந்திணை பெருந்திணை யென்னுமிவ்வேழையும்பற்றி நிகழும். அவற்றுள், கைக்கிளையென்பது ஒருதலைக்காமம் ஐந்திணையென்பது அன்புடைக்காமம் பெருந்திணை யென்பது பொருந்தாக்காமம் இவற்றுள் ஐந்திணையென்பது குறிஞ்சிமுதலாகிய ஐவகைப்பட்ட நிலனுமாம் இவ்வைவகை நிலமருங்கிலும் களவு கற்பு என்னும் இரண்டொழுக்க நிகழும். இவற்றுட் களவாவது வேதத்திற்சொல்லப்பட்ட எண்வகை மன்றலுளைந்தாவதாகிய காந்தர்வ மன்றலின் பாலதாம். காந்தர்வமாவது கொடுப்போருங் கேட்போருமின்றித் தலைமகனுந் தலைமகளும் தனியிடத்தெதிர்ப்பட்டு, தாமே கூடுதலாம். இனிகற்பென்பது, குரவராற்புணரும் புணர்ச்சி வாயில்களாற் புணரும் புணர்ச்சி என விருதிறத்தனவாம். இவை முறையேவதுவைகூடிப்புணரும் புணர்ச்சி புலவிதீர்த்துப்புணரும் புணர்ச்சியென்றுஞ் சொல்லப்படும். இனி இக்கோவையுட் கிளவிக்கொத்துகள் முறையே இயற்கைப்புணர்ச்சிமுதல் பொருள்வயிற்பிரிதலீறாகவுள்ள இருபத்தெட்டுப்பகுதியினையுடையனவாம். **முதற்கண்ணின்ற காட்சிமுதல் குறிப்பறிதலீறாகவுள்ள** செய்யுட்கணான்கும் கைக்கிளைப் பாலவாம். அகத்திணையிற் கைக்கிளைவருதல் திணைமயக்காமென்னில் கைக்கிளைமுதற் பெருந்திணையிறுவாயெழுதிணையினுள்ளுங் கைக்கிளையும் பெருந்திணையும் அகத்தைச்சார்ந்த புறமாயினும் கிளவிக்கோவையிற் காட்சிமுதலாயின எடுத்துக்கூறல், சிறப்புடைமைநோக்கி கைக்கிளையைத் தழுவினா, பெருந்திணை தழுவுதல் சிறப்பின்மையானீக்கினார். இனி யீண்டுரைப்பிற் பெருகுமாதலினிவ்வளவின் விடுத்தாம்.

விருதைநகர்

**சிவஞானசுவாமிகள்.**

இந்நூலாசிரியரியற்றிய

## அவையடக்கச்செய்யுள்.

அருளம்பி காபதி பொன்னடித் தாமரை சூட்டியகப்
பொருளம்பி காபதி கம்புனைந் தேனிப் புனைந்தசெஞ்சொற்
றெருளம் புலவர்முன் செப்பிய போதுள தப்புளையார்
மருளுங் குழவி மழலைக்கென் றேபொருண் மற்றிங்கன்றே.

# பிழை திருத்தம்.

| பக்கம். | பாட்டு. | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|---|
| க | ச | க | மகிழ்திங் | மகிழ்ந்திங் |
| ரு | உச | ங | குயில | குயில் |
| எ | ஙரு | உ | மெவியென்னை | மேவியென்னை |
| ௰க | ருக | ச | மவையவ | மவயவ |
| ௸ | சு௰ | ச | யய்ய | ஐயய |
| ௰உ | சுச | க | வழியிணை | விழியிணை |
| ௸ | கூச | துறை | அவையவ | அவயவ |
| ௰ரு | எக | உ | தந்தனிர் | தந்தநிர் |
| ௰எ | கூரு | ரு | புள்ளிள் | புள்ளின் |
| உரு | ௱உகூ | ரு | காரண | காரணம் |
| உஅ | ௱ருஎ | உ | விருந்தென்னை | யிருந்தென்னை |
| ஙஅ | உ௱௰ச | ச | யெரிக்கும் | யெறிக்கும் |
| ஙகூ | உ௱உ௰ | துறை | மாண்டமை | மருண்டமை |
| சரு | உ௱சரு | ரு | செல்வி | செல்வி |
| ருக | உ௱கூஉ | ச | பேரமி | போமி |
| எஎ | ச௱சக | ரு | பெருந்தன்மை | பெறுந்தன்மை |
| ௸ | புட்கோ | - | ௸ | ௸ |
| அஉ | ச௱கூக | ரு | விளைகமழ | விளைகமழ் |
| அஎ | ச௱கூஎ | ரு | விளங்கெழு | வளங்கெழு |

இந்நூலை ஊக்கத்தோடு யான் அச்சிடும்படி வாக்களித்துப் பொருளுதவி செய்த எட்டயபுரம்சமஸ்தானம் மகராஜராஜமானியராஜஸ்ரீசின்னமஹாராஜா அவர்களாகிய வெங்கிடேசுர எட்டப்பபூபதி அவர்கள் பெருங்கருணைத்திறத்தை யாவரும் வியக்கத்தக்கதே.

பொருளுதவிசெய்தகனவான்கள்.

மக-ா-ா-ஸ்ரீ எட்டயபுரம் சமஸ்தானம் கனந்தங்கிய சின்னமஹாராஜாஅவர்கள்.

,, திருநெல்வேலி டிஸ்த்ரிக்டு முனிசீபு வாசுதேவசாஸ்திரிகள்.

,, கிர்ஷ்ணசாமியையரவாகள் கைலாசபுரம்.

,, திருநெல்வேலி கல்லத்திமுடுக்குத்தெரு சோமசுந்தரம்பிள்ளையவர்கள்.

,, ஷை தெரு சோணாசலம்பிள்ளையவர்கள்.

,, ஷையூர் சிவமதம் கமிட்டி மெம்பர் பிரமநாயகம்பிள்ளையவர்கள்.

,, ஷையூர் சரஸ்வதி விலாசம் காரியதரிசி பால்வண்ணமுதலியாரவர்கள்.

,, ஷையூர் வைக்கீல் தையல்பாகம்பிள்ளையவர்கள்.

,, ஷையூர் வைக்கீல் டி. எஸ். சுப்பிரமணியபிள்ளையவர்கள்.

,, ஷையூர் கவிராஜ வேலாயுதம்பிள்ளையவர்கள்.

,, ஷையூர் வ. கா. மீனாக்ஷிசுந்தரம்பிள்ளையவர்கள்.

,, ஷையூர் தா. ந. பழனிக்குமாருப்பிள்ளையவர்கள்.

,, ஷையூர் ஆர். சம்மந்தம்பிள்ளையவர்கள்.

,, பாளையங்கோட்டை பென்ஷன் டிப்டி கலெக்கட்டர் கணபதியப்பபிள்ளையவர்கள்.

,, ஸ்ரீவைகுண்டம் வைக்கீல் சுப்பராயமுதலியாரவர்கள்.

---

எனக்குக்கிடைத்த அம்பிகாபதிகோவை எட்டுப்பிரதிகளின் விவரம்

கும்பகோணம் காலேஜு தமிழ்ப்பண்டித ஸ்ரீமத். வே. சாமிநாதையரவர்கள் பிரதி 1. திருநெல்வேலி மகராஜராஜஸ்ரீ கவிராஜ நெல்லையப்பபிள்ளையவர்கள் பிரதி 1. சேரன்மகாதேவி சப்ரிஜிஸ்தர் சொக்கம்பட்டி ஜமீந்தாரின் குலதிலகராகிய மகராஜராஜஸ்ரீ சிவத்த சின்னணைஞ்சபாண்டியனவர்கள் பிரதி 1. ஆகப்பிரதிகள் 3

ஷை பிரதிகளைப் பரிசோதிக்கும்பொழுதும் அச்சிற்பதிப்பிக்கும்பொழுதும் உடனிருந்துதவிபுரிந்த மகராஜராஜஸ்ரீ கவிராஜ நெல்லையப்பபிள்ளையவர்கள் திருநெல்வேலி சரசுபதிவிலாசசபையின் காரியதரிசி மகராஜராஜஸ்ரீ பால்வண்ணமுதலியாரவர்கள் இவர்களது நன்றியை ஒருநாளுமறக்கற்பாலதன்று.

உ

சிவமயம்.

# அம்பிகாபதி கோவை.

## கைக்கிளை.

### காட்சி.

மாவின் கொழுந்தளி ரீன்றுபொற் கோங்கிடை வந்தரும்பி
மேவுங் கமல மலர்ந்தல்லி வாய்விம்மு தேன்பொதிந்து
தாவுஞ் சிறைவரி வண்டினங் கொண்டு தழையவிழ்பூங்
காவின் புறம்படர் வல்லிகண் டேகண் களிகொண்டதே. க

### ஐயம்.

திருவோ வரையுறை தெய்வங்கொ லோதெண் டிரையமுதி
னுருவோ வளர்கொல்லி யோவிய மோவுயர் வானிடையில்
வருவோர் சிலவிஞ் சையர்மக ளோவன்றி மானிடமோ
தருவோடு வல்லி தழுவுந்தண் சாரலிற் றாழ்குழலே. உ

### துணிவு.

மூசிய வண்டு முரல்கின்ற தாம முகங்கருகும்
பூசிய சாந்தும் புலருகம் போற்பொரு நீர்க்கயலை
யேசிய கண்களு மிவ்வா றலமரு மிந்திரவிற்
கூசிய நன்னுதற் கொம்பைவம் பேயென் குறித்தனமே. ௩

### குறிப்பறிதல்.

ஒருகா லுமையவ ருண்டது பொய்யெனு முண்மகிழ்திங்
கொருகா லிமையவ ருண்டது பொய்யெனு மூதைபுகுந்
தொருகா லசைய வொசியுமின் சாய லுருவவஞ்சி
யொருகா னிறைவுங் குறைவுமில் லாமதி யுற்பலமே. ௪

கைக்கிளைமுற்றும்.

# இயற்கைப் புணர்ச்சி.

## கலந்துழி மகிழ்தல்.

கருகிய பைங்கயல் செங்கய லாயன்ன கண்மலர்கள்
செருகிய பைங்குழல் வஞ்சிமென் கிஞ்சுகச் செங்கனிவாய்
பருகி முயங்கி மயங்கியிவ் வாறு படுமெழுகி
லுருகிய வன்பையென் னேயிங்ங னின் றுணைசெய்வதே ரு

## நலம்பாராட்டல்.

தள்ளா வளமையுந் தாவா விளமையுந் தங்குமின்பக்
கள்ளான் மயங்கிவெங் காமா னலஞ்சுட க்காய்ந்துருகி
யுள்ளா ருயிர்கலந் தொன்று யுடம்பி னுடம்பொளித்து
விள்ளா நலமிங்ங னியாவர்பெற் றார்மண்ணில் விண்ணிலுமே. சு

## ஏற்புறவணிதல்.

தூசுங் கலையுந் தொலையா வழகெறிக் குந்தொடியும்
வாசங் கமழு மதுமல ரோதியும் வண்களபம்
பூசுங் கனதனம் பூணுமுத் தாரமும் பூங்குழையு
மாசும் பழுதில்பொன் னேபண்டு போல வணிந்தனமே. எ

## மென்மொழி விரும்பல்.

தோளானும் வெய்ய துணைமுலை யானுந் துவக்கிநம்மை
யாளா தவரினின் றுண்டுகொண் டாரன்ன மென்னடையும்
வாளார் விழியு மெழுதவொண் ணுத வடிவுங்கண்டாற்
கேளா ததுமொழி யேயளி யேமுன ங்கேட்குதுமே. அ

## பெருநயப்புரைத்தல்.

சுருங்கா விரிசினை ச்சூதமு நீள்சுர புன்னையுஞ்சூ
ழிருங்கா வியலு மிசையினங் காளிவ் விருஞ்சிலம்பின்
மருங்காவி யின்கண் மலர்வதுண் டோசொல்லும் வாசியறக்
கருங்கா வியுஞ்செங் குமுதமுந் தோயுங் கமலமொன்றே. கூ

## தெய்வத்திறம்பேசல்.

யாங்காணு மாவியொன் றுயிரு வேமு மெழுபிறப்பு
நீங்கா நிலைபெற்ற நேயமுந் தந்து நினைவறவிப்
பூங்காவி லிங்ஙனம் புல்லும் புணர்ச்சி புணர்த்தவெல்லாங்
கோங்கார் வனமுலைக் கோமள மேநங் குலதெய்வமே, ௰

## பருவரலுணர்த்தல்.

கறியுறு சாரற் களியுறு தோகைக் கணகடஞ்செய்
வெறியுறு சோலை விழைவுற நாடி வெருவுறுமான்
மறியுறு செங்கண் மதுமலர்க் கோதை கொதுமலர்வக்
தறியுதல் கூடுமென் றேதிரு மேனி யழுங்குவதே. ௰௩

## பிரிவச்சம்.

நீங்கிற் சிறிது பொழுதுநில் லாவுயிர் நேரிழைக்கின்
றீங்கிப் படிகமை யெய்தும் பழியதற் கென்றுசிந்தித்
தோங்கற் சிலம்பிடை நின்றாச லாடி யுயங்குகம்மைத்
தாங்கத் தகுந்துணை யாதுகொல் லோவென் றனிநெஞ்சமே. ௰௪

## பிரியேனென்றல்.

நினையோ மறந்தும் பிரியப் பிரிய நினையினுமித்
தனையோ பொழுதுந் தரிக்ககி லேன்றடஞ் சூழுமன்றி
லனையோ மிருவர்க்கு மாவியொன் றேயென் றறிந்திருந்தும்
வினையோ மலரணங் கேதிரு மேனி மெலிகின்றதே. ௰௫

## பிரிந்துவருகென்றல்.

சுரியேர் கறுங்குழ றுஞ்சிய வின்பத் துயில்பயில
வுரியே னெழிந்து முறைவதுண் டோகெண்டை யோடவென்ற
வரியேர் மதர்விழிய ன்னமுன் னேகுபின் யானுமந்தச்
சரியே வருகுவ னீவண்ட லாடுமெத் தண்டலைக்கே. ௰௬

## இடமணித்தென்றல்.

குன்ற மழைக்கக் குயிலழை யாநிற்பர் கூடியெதிர்
நின்ற மழைக்குழ னேரிழையா ய்நின்னை யான்பிரிவ
லென்று மழைக்க ணிரும்பனி கூர்வ தெவன்கொனம்மூர்
மன்றன் மலர்ப்பொழி லும்மலை ச்சாரலும் வாழ்பவரே. ௰௭

## நலந்தெரிந்துரைத்தல்.

கரும்புண்ட ரீக மணியகண் ணீர்வ ரக்காமருதேன்
சுரும்புண் டெழுநன் மலரிற் றெரிலைகலஞ் சூதொடுகோங்
கரும்புண்ட மென்முலை யாயுலை வாய்வெவ் வழல்குளித்த
விரும்புண்ட நீரல்ல வோநீயு நானு மியைந்தவன்பே. ௰௮

## தீராத்தேற்றம்.

வரியேர் நெடுங்கண் வரும்பனி கூர மனந்தளர்வுற்
றெரியேர் தளிரன்ன நின்னெழில் வாட விசையளிசூழ்
புரியேர் நறுங்குழற் பூவையன் னாயிமைப் போதுநின்னைப்
பிரியேன் மறந்தும் பிரிவுறின் மாய்கவென் பேரிசையே. ௰௭

## நெஞ்சுறுவலியுறுத்தல்.

நினையாம னல்வினை தந்தவி க்கூடலை நீடிலன்ன
மனையார் வரிநெடுங் கட்புல னாமெனி னாமகவிற்
சுனையார் மலர்க்கண்ணி சோருமென் றூவி துளங்குநமக்
கினையா வருமுன மஞ்சிநெஞ் சேயிங் கிரங்கனின்றே. ௰௮

## உயிரெனக்கூறல்.

வடக்குங் குமக்கொங்கை வம்பற வேவிம்ம மல்குமைநீ
ரடக்குங் கயலு மடங்கா வெயர்வு மியாவும்பின்னே
கிடங்குங் கடைக்கண்ணுஞ் சோருங் கலாபமுங் கேசமுமாய்
நடக்கின் றதுமெல்ல மெல்லவென் னாருயிர் நன்னெஞ்சமே. ௰௯

## எய்தலருமையுரைத்தல்.

உய்யா மடநெஞ்ச மேவரு மேயிரு தோள்வளைச்செங்
கையாய வெள்ளங் கடந்தொரு வாறு கனவெனவே
பொய்யாய நுண்ணிடை புல்லிய காதற் புணர்ச்சியெல்லா
மெய்யாக வந்தரு மோதெரி யாது விதிவசமே. ௨௰

## ஆங்கவன்காதற்பாங்கியையறிதல்.

புல்லத் தருவதுங் பொற்குழை யோட ப்பொருநெடுங்கண்
செல்லத் தருவதுந் தேமென் குமுதந் திறந்தினிய
சொல்லத் தருவதுஞ் சூழ்கின்ற யாழ்மொழித் தோகைக்குழாத்
தல்லொத்த பூங்குழல் பாங்கது போலு மணங்கினுக்கே ௨௧

## பண்புபாராட்டல்.

திருந்திய திண்பொருப் பாற்றிருப் பாற்கடன் முன்கடைந்து
வருந்திய நாள்வந்த நஞ்சு மமுதும லர்க்கமலம்
பொருந்திய தன்முகத் தேகொண்டு போந்தனள் போலுமென்னி
லருந்திய வாறெங்ங னேயெம்பி ரானு மமருமே. ௨௨

### பயந்தோர்ப்பழிச்சல்.

தூயசெந் தாமரைப் பொன்னையென் னாவித் துணையைத்தந்த
தாயருந் தந்தையுந் தாரணி மேலுந்தி தந்தவண்ண
லாயுவுந் தந்தை யருளும் புராரி யழகெறிக்குந்
தேயுவு மிந்திரன் செல்வமுங் கூடிச் சிறக்கவின்றே. ௨௩

### கண்படைபெறாது கங்குனோதல்.

மயில்போ லினியமென் சாயனல் லாருடன் வல்வினையேன்
றுயில்போன தின்னமுந் தோன்றவுங் காண்கிலன் சோலையினங்
குயில்போன் மொழியவர் தங்குழல் போலிருள் கூர்ந்துகொற்ற
வயில்போன் மறஞ்செய்கண் போலற நீளு மருங்கங்குலே. ௨௪

இயற்கைப்புணர்ச்சி முற்றும்.

---

## இடந்தலைப்பாடு.

### தலைவியிறைவனை நினைத்தல்.

புறவார் நறுமுல்லை போனகை யாப்பொய்த லாடுஞ்சிற்றி
னறவாடு சந்தன நாறுதண் சார னயந்தவின்ப
மறவாத நெஞ்சும் வனமுலை தோயு மணிப்புயமு
முறவாடி நிற்பர்கொல் லோவென்னை யாளு மொருவர்வந்தே. ௨௫

### தலைவன்றலைவியை நினைத்தல்.

நீடுங்கொல் லோகொண்ட நேயமென் னையத் தவர்நிலையிற்
றேடுங்கொல் லோவந்து செல்லுங்கொல் லோவந்த செவ்வியின்னுங்
கூடுங்கொல் லோவிதி கூட்டுங்கொல் லோவென்று கொம்பினுள்ளம்
வாடுங்கொல் லோவறி யேன்மலைச் சாரலில் வந்துநின்றே. ௨௬

### தந்ததெய்வந்தருமெனச்சேறல்.

குருந்த நரந்தங் குராமர மாமகிழ் கோங்குபுன்னை
பொருந்தி பொருந்துஞ் செழுமலர்க் காவிடைச் சென்றுவிண்ணோ
ரருந்து மருந்தன்ன வன்னமன் னாளை யளித்ததெய்வ
மிருந்தது காணமக் கின்னமென் னேநெஞ் சிளைக்கின்றதே. ௨௭

### பொழில்கண்டுவியத்தல்.

கரிதாகி மென்குழற் போனிழற் போர்க்கலங் தால்விடுதற்
கரிதா யுறவி லறவினி தாயர வல்குலினிற்
பெரிதாய் விரும்பின வெல்லா நுகரப் பெருவதற்கே
*யுரிதா யளியுடைத் தாயவர் போலு முயர்பொழிலே. ௨௮

### தலைவன்றலைவியைக்காண்டல்.

இடமாஞ் சிறுகுடி யின்னுயி ராய மிகந்துவந்தித்
தடமாம் பொதும்பர் தனிநின்ற வாதறு கட்சிறகட்
கடமாம் பிடிபுணர் வேழலஞ் சாரற் கலைபிரிந்த
மடமான் பிணையன்ன வேமருங் கோட மழைக்கண்களே. ௨௯

### மருங்கணைதல்.

அறுகால் படவிரு ளைம்பா லிருக்கி லளியினங்காள்
மறுகால் வருக்க மருங்கிலுண் டோமணி முத்தணிகொண்
டுறுகால் வருந்தன பாரம் பொறுதயங் கிதயங்குஞ்
சிறுகா லசைய வொசியுமென் சாயற் றிருந்திழைக்கே. ௩௰

### மெய்தொட்டுப்பயிறல்.

அளகந் திருத்தி மதிநுத னீவி யணியகற்றிப்
புளகஞ்செய் தோளிற் புரிவளை யேற்றிப் புதியதென்றற்
கிளகுங் கொழுந்தளிர் மெல்லடி தைவந்த வின்பமுறக்
களபஞ் செறிதனத் தாய்பெற்ற வாவென் கரதலமே. ௩௧

### பொய்பாராட்டல்.

ஒருதனி யேநின் றிரவும் பகலு முறுவெயிலும்
வருபனி யோடு மழையுமெண் ணாது வனாயினுமா
வெருவரு கானினு மெய்த்தவஞ் செய்வது வேய்களெல்லாந்
திருவனை யார்தடந் தோள்செற்ற நீள்பகை தீரவென்றே. ௩௨

### இடம்பெற்றுத்தழாஅல்.

இளவேய் பொருமிரு தோளுஞ் செவ்வாயு மிளமுலையுங்
களவே செயுமரிக் கண்ணும் பதமுங் கலைமதியின்
பிளவே யனைய திருநுதல் வேர்வும் பிறக்குநல்ல
வளவே யினியிந்த மானொன்ற றுவிக் கருள்செய்யவே. ௩௩

---

*உரித்து என்பதில் எதுகைநோக்கி இடை குறைந்தது.

### கொடியிடம்புகுதல்.

வழிகின்ற வெள்ள ருவிமலைச் சாரலில் வண்டருந்தப்
பொழிகின்ற தேன்கமழ் பூங்கொடி யேபுதி யாரொருவர்
மொழிகின்ற காதலின் முன்னமென் னாவி முடியுமென்று
கழிகின்ற நாணமு நெஞ்சமு நானுமுன் கையடையே. ௩௪

### கண்புதை.

தோளுந் தொடியுந் துடிசே ரிடையுந் துணைமுலையும்
வேளுந் திறையிடு மென்மயிற் சாயலு மெவ்வென்னை
யாளும் புதிய வழகுமெல் லாநல் லமுதமன்னீர்
வாளுங் கணையு மறலியும் போலு மலர்க்கண்களே ௩௫

### நீடுநினைந்திரங்கல்.

காதன் மடந்தயர் கையகல் காலையு மெய்யகலா
மேதகு நாணு மெலியவென் றேவிழி போலுநெய்தற்
போதவிழ் மென்மலர்ப் புன்னையங் கானற் பொருந்துமிந்த
மாதவி பெற்ற மணிமே கலைநம்மை வாழ்விப்பதே ௩௬

### நணிநாண்விடுத்தல்.

வெங்கோ னடாத்திய வேந்தன் றிருவினு மேதகைய
செங்கோ லரசன் பகையினுந் தேய்ந்த திரைமுழங்கச்
சங்கோ லிடம்புனற் றண்ணந் துறைவன்வண் ணங்கவர்ந்த
வெங்கோ னறிவினன் றேமட நாண மெனக்கினியே. ௩௭

### வறிதுநகைதோற்றல்.

பூணுந் தரள நிரையவிர் தோற்றமும் பூந்தளவின்
சேணுங் கமழு முகையின் றகையுஞ் செழுஞ்சிலம்பிற்
காணுங் கலாப மயினெடும் பீலியின் காலுஞ்சிந்தை
நாணுங் கெடவறி தேநகைத் தாண்மதி நன்னுதலே. ௩௮

### முறுவற்குறிப்புணர்தல்.

மிகலே யொழியக் குறைவின்றி நீடிய வெந்துயர்க்கோர்
புகலேது மின்றிப் புலம்பநெஞ் சேபொருந் தார்வருந்த
விகலே செயுமயி லன்னகண் ணார்முகத் தெல்லியன்றிப்
பகலே நிலவும் பவளத்துள் ளோவந்து பாரித்ததே. ௩௯

### முயங்குதலுறுத்தல்.

சுரிகுழல் வண்டுஞ் சுரும்பொடு தேனும் விருப்புநெஞ்ச
மரிபொருங் கண்ணு மலமரு கின்றன வன்றிவண்ணை
மெரிபுரை மாவி னிளந்தளி ரீன்றன போன்றதினி
முரிபுரு வச்சிலை யார்முலை யார முயங்குதுமே. ௪௰

### புணர்ச்சியின்மகிழ்தல்.

சுரும்பெழு கூந்தலுஞ் செவ்வாய் மழலையுஞ் சோதிநுத
லரும்பிய வேர்வு மலமரு நோக்கு மசைந்தொசியுங்
கரும்புரு வச்சி லையுமிலை சோருங் கலையுங்கண்டு
விரும்பின மேமன மேகளி கூரின்ப வெள்ளத்திலே. ௪௧

### புகழ்தல்.

கனமே கருங்குழல் கங்குலன் றேகண் கருங்கயலி
னினமே குவளையு நெய்தலு மல்ல விவற்கிடையென்
மனமே வளரிளம் வஞ்சியன் றேவஞ்ச மாரன்வைத்த
தனமே தனங்கன கத்தட மேருச் சயிலமன்றே. ௪௨

### ஆயத்துய்த்தல்.

விலையாக்கி வேளை விழிக்கடை யால்நல மிக்ககொங்கை
மலையாக்கி யென்னை மருங்காக்கி வைத்தநிர் வங்கமுந்நீ
ரலையாக் கியவமுத ன்னநல் லீரினி யம்பவனக்
குலையாக் கியதண் டலைவண்ட லாயங் குறுகுகவே. ௪௩

இடந்தலைப்பாடுமுற்றும்.

---

## பாங்கற்கூட்டம்.

### பாங்கனைநினைத்தல்.

அணங்குந் தெரிவையு மின்னரு ளால்முன் னளித்தசெவ்வி
மணங்கொண் டுளமகிழ் தூங்கும் பரிசினி வாய்ப்பதென்றென்
றுணங்குந் தனிநெஞ்ச மேயஞ்ச லீநம் முயிர்மருந்தா
யிணங்குந் துணைவ னிருபிறப் பாள னிருந்தனனே. ௪௪

## பாங்கன் வினாதல்.

தென்செய்த பண்ணின் றிறந்தெறிந் தோதெய்வப் பாவலர்தா
முன்செய்த நூலின் முறைதெரிந் தோசெம் முகங்கருகிப்
பொன்செய்த மேனியும் புல்லென்று வாடிப் புலம்பவென்னோ
வென்செய்த தோவறி யேன்றிரு மேனி யிறைவனுக்கே. ௨௫

## தலைவனுற்றதுரைத்தல்.

சொல்லே னுனக்கு மெனவிருந் தேனெங்ஙன் சொல்லுகேனம்
வல்லேன் வருந்தவு மாட்டுகில் லேன்வரி வேட்டையிற்சென்
றல்லோர் குழலொ ரணங்கெதிர்ப் பட்டன ளவியன்றுப்
செல்லே னறியி லதுதடஞ் சாரற் *றிரிவதுவே. ௨௬

## பாங்கன் கழறல்.

முன்னே யறிஞர் மொழியுங் கலைகண் முழுதுணர்ந்து
மின்னே யனைய நலம்பொருட் டாகமெய் வேட்கையுற்றுக்
கொன்னே யறிவுங் குறையா நிறைவுங் குலைந்துநின்று
மென்னே தகுவன வோவெம் பிரானுக் கிவையுமின்றே. ௨௭

## கழற்றெதிர்மறுத்தல்.

என்போல் மலரம்பி லேவுண்ட நாளி லெனக்கினிய
நின்போ லொருவரு நின்றில ரோவெண்ணி லாவெறிக்கு
மின்போ லொளிர்கொன்றை வேணிப்பி ரானுக்கு மெய்த்துணையாய்த்
தன்போ லரிய தவங்குலை யாவகை சாற்றுதற்கே. ௨௮

## பாங்கன் கிழவோற்பழித்தல்.

இளங்கொம் பொருதனி நின்றிருஞ் சாரலி லென்னையிங்ங
னுளங்கொண் டுறுதுயர் செய்ததென் றுய்மின் னொளிர்வதுபோல்
விளங்குங் கதிர்வடி வேலண்ண லேதென் றன் மீதசையத்
துளங்குஞ் சிறுகொடிக் கோமத வேழந் துவக்குண்பதே. ௨௯

## கிழவோன் வேட்கை தாங்கற்கருமை சாற்றல்.

சுழிக்கே யழுந்து நதிக்கொரு வான்புனை தோன்றிலன்னீர்
வழிக்கே யொழுகி வருந்துவ ரோவருந் தாவமுதின்
விழிக்கே யகப்பட் டழிந்தழி யாவுயிர் மீண்டுமென் றன்
மொழிக்கே படிவென் செய் வேன்முன்செய் பாவ முடியதின்றே. ௩௰

---

* திருவதுவே யென்றும் பாடம்.

## பாங்கன்றன்மனத்தழுங்கல்.

யானு மறிவு கொளுத்துகிற் பேனிங்ங னேறனையான்
றானு மறிவு தளர்ந்துநிற் பான்செந் தளவரும்புந்
தேனு மினிய குதலைச்செவ் வாயிளஞ் செவ்விநவ்வி
மானு மிவனை மயங்கவிவ் வாறு வருத்துவதே. ௫௧

## தலைவனோடழுங்கல்.

நீறாக வேலை நெருப்பெழுங் காலையு நீர்மைசற்று
மாறா வுணர்வுமதியுங் கலங்கி மழைவள்ளலே
தேறாத விங்குனைத் தேற்றுவ தொன்றுந் திருவுளத்தி
லேறா தொழிவதென் னோவென்ன மாய மெதிர்ப்பட்டதே. ௫௨

## பாங்கனெவ்விடத்தெவ்வியற்றென்றல்.

பேரோத ஞாலம் பெயரினு மொற்றைப் பெருந்திகிரித்
தேரோ னுதிக்குந் திசைதடு மாறினுஞ் செய்யகொன்றைத்
தாரோன் வரிசிலை சாயினுஞ் சாயாத் தறுகணினை
யாரோ வணக்கின ரெங்கே யவர்வந் ததிர்ப்பட்டதே. ௫௩

## அவனஃதிவ்விடத்திவ்வியற்றென்றல்.

தோற்றந் திருவென்று சொல்லத் தகினுந் துணை முலைகள்
கூற்றங் கொடிய கொலைவிட மேகண் கொடியிடையு
மூற்றம் பிறிதொன்று மின்றியென் போனின் றுயங்குமென்னோ
மாற்றங் கடலமு தேமலை வாணர் மடமகட்கே. ௫௪

## இறைவனைத்தேற்றல்.

திருவே யனைய வுருவமுஞ் செவ்வித் திருநகையும்
பொருவே லனைய விழிகளுங் கொண்டுன் புலனழிய
வருவே தனைசெய்த வாவியன் றோவை யறிந்துவல்லே
வருவேன் வருந்துனை யும்வருந் தேலென் மழைவள்ளலே. ௫௫

## பாங்கன்குறிவழிச்சேறல்.

சிலைக்கே பயிலுந் திருநெடுந் தோளண்ணல் செப்பியவந்
நிலைக்கே தனிவந்து நிற்குங்கொல் லோவெங்கை நீள்களிற்றின்
கொலைக்கே புரிந்தவெங் கோடுங் குரும்பையும் போனெருங்கு
முலைக்கே பழிவைத் தழியுநுண் ணேரிடை மொய்குழலே. ௫௬

## தலைவன்பாங்கற்கிரங்கல்.

பாடுங் குலமின வண்டுக ளாக பளிக்கரங்கி
லாடுங் கலாப மயிலன்ன சாயலென் னாரணங்கைத்
தேடுங்கொ றேடித் திசையறி யாமற் றிகைத்துநின்று
வாடுங்கொல் காணில் மதிக்குங்கொ லோவென்னை மன்னுயிரோ. ௫௭

## எய்தியபாங்கன்றெய்வம்வியத்தல்.

மைவைத்த வேலண்ண லுண்ணிறை வாரி மயலளித்த
நெய்வைத்த கூந்த னிறைவனை மானை நெடுங்கடல்போற்
கைவைத்த வாயங் கடந்திங்ங னேவரக் காட்டியவத்
தெய்வத்தை யல்லது வேறில்லை யேயென்றுஞ் சிந்திப்பதே. ௫௮

## குறிவழிக்காண்டல்.

நவரோகை யன்ன மருங்குலுஞ் செவ்வி நகைநிலவுங்
கவரோ செயுமரிக் கண்களுங் கொண்டவன் கல்விசெற்று
ஔவரோ யெனநின் றிடைநெஞ்ச மேயெம்பி ரான்மொழிந்த
வவரோ யிவரு மவையே யிவையு மவையவமே. ௫௯

## பாங்கன்றலைவியைவியத்தல்.

முன்னாள் வருந்தி முழங்கும் பரவை வழங்கவந்த
பொன்னார் கமலமென் பூந்திரு வேயிவர் போந்திருந்த
வின்னாக வெற்பி னெதிர்ப்பட்ட காலையி லென்னுயிரை
யன்னா ளிவருக்கு மாலாவ தும்மினி யய்யமின்றே. ௬௰

## பாங்கனிறைவனைவியத்தல்.

மகரஞ் செறியு மறிகட லீந்தி வடமலையின்
சிகரங் கடந்து வரியரி தாவுஞ் செறியிருள்கூர்
தகரஞ் செறிவனந் தள்ளியென் னாவி தனிவந்தவா
பகருந் தகைமைய தோபெரி யோர்தம் பரிசுகளே. ௬௧

## இகழ்ந்ததற்கிரங்கல்.

பண்ணார் பணிமொழி வண்ணமுந் தண்ணறும் பைங்குவளைக்
கண்ணா லருள்செய்த காதலுங் காமக் கனல்கொளுந்திப்
புண்ணான நெஞ்சமுந் தஞ்சமில் லாதவன் வன்பொறையு
மெண்ணா தருவினை யேனிகழ்ந் தேனென் னிறைவனையே. ௬௨

## தலைவன்றனக்குத் தலைவிநிலை கூறல்.

வாவிகண் டேன்மலர்ச் சோலைகண் டேன்மருங் கேமருங்கில்
பாவிகண் டேன்முலைப் பாரங்கண் டேன்பனி நீரரும்புங்
காவிகண் டேன்கண்ட நின்வழி யேதன் கருத்துவைத்த
வாவிகண் டேன்கண்டி லேனண்ணலே நின் னறிவின்மையே. ௬௩

## அவையவந்தோற்றல்.

வெயிலே விடுநமை மேற்சென் றடரும் வழிபிணைக
ளயிலே மடமென் னடையன்ன மேயமு தூறுமின்சொற்
குயிலே தருநிறங் கோமள மேயயிற் சாமளமே
மயிலே மருங்குன் மின்னேமதி யேயவர் வாண்முகமே. ௬௪

## தலைவன்குறிவழிச்சேறல்.

ஊனென் றிபவின் னுயிரனை யாயுற்ற தீவினைவ
யானின் றுனைக்கிங் கியம்பிய வண்ண மிமயவர்கள்
வானின்று வந்து வரைநின்ற தோர்தெய்வ மென்னவஞ்சி
தானின்ற தோதனி யேயினி யான்சென்று சார்குவனே. ௬௫

## தலைவன்குறிவழிக்காண்டல்.

மறக்கும் பரிசறி யாவண்ட லாய மறந்துவந்து
சிறக்குங் கமலத் திருநின்ற வாசெங்கண் முத்தரும்ப
நிறக்கும் பசலையு மேனியு மாய்நெஞ்சு நீடுயிர்ப்பும்
பிறக்கும பெருநலமும் மடநாணும் பிறங்கவிட்டே. ௬௬

## குறிப்பறிந்துகூறல்.

வண்டலை யும்பொன் மணியூ சலையு மறந்துநறுந்
தண்டலை நீழற் றமியணின் றுளிடந் தாமரையோ
விண்டலை யோமலை யோவிசும் போவின்றென் வேட்கைவெள்ளங்
கொண்டலை யன்னமென் பூங்குழல் மான்விழிக் கொத்ததுவே. ௬௭

## முகம்புகுகிளவி.

தேரோ திருவல்குன் மேனகை யோமலர்ச் செந்திருவோ
யாரோ யிவரிங் கறியப் பெருகில மாடசப்பொன்
வரோ டியலி வளர்கின்ற பார வனமுலைக்கு
நேரோ மருங்குறு நெஞ்சமு நாணு நிறையுமின்றே. ௬௮

### புணர்ச்சியின் மகிழ்தல்.

மெய்வாய்கண் மூக்குச் செவியென்னு நாமங்கண் மேவப்பெற்ற
வைவா யினுநின் றருந்தின ரோவருந் தானவர்முன்
னுய்வான் மலைகொண் டொலிநீர்க் கடல்கடைந் தும்பபொன்போன்
மைவாரளக மடந்தைநின் போலு மருந்தினையே. ௬௯

### பாங்கியொடுவருகெனப்பகர்தல்.

முன்னாவி வந்த முருகன்வை வேற்கண் முனைகவர்ந்த
வென்னாவி நல்கு மிதுநினை யேலின்று போலினிய
நன்னாவி வாச நறுங்குழ லாய்வரில் நாளையிங்கு
நின்னாவி யன்னவள் முன்னாக வன்றி நிலையிலையே. ௭௰

### ஆயத்துய்த்தல்.

முற்றும் பழுதற்ற மொய்முலை யாக முயங்குமின்பம்
பெற்றும் பெறாத பெருநலந் தந்தனிர் பேரளிகள்
சுற்றும் பரிமளச் சோலையி லாயந் தொழுவருவி
யெற்றும் பனிவரைச் சீறூர் நலம்பெற வெய்துகவே. ௭௧

### நீங்கற்கருமைசாற்றல்.

நடைபோற் குறுகு நலிவா ரிடைச்செல்லு நாணயனக்
கடைபோ னெடுகுங் களிர்படர் கூர்தருங் காமர்வஞ்சி
யிடைபோன் மெலிய விருவினை யேனையிங் கீடழித்து
புடைபோய் வளர்கள பத்தன மாகப் பொருப்பிடமே. ௭௨

### பாங்கற்புகழ்தல்.

வாளா நமக்கு வழங்கிய தன்றிநம் வாட்டமுயிர்க்
கேளாகி வந்துபின் கேட்டது வோகண்டு கேட்டபின்னுந்
தாளால் வருந்தியு நெஞ்சா லழுங்கியுந் தாமுயன்று
கோளாக வின்னலங் கூட்டிய தோநங் குலதெய்வமே. ௭௩

பாங்கற்கூட்ட முற்றும்.

# பாங்கி மதியுடன்பாடு.

## அவ்வகையெழிலுமையமுற்றோர்தல்.

பூங்கேச மன்றல் புனையா வெழில்வெண் புதுமதிகண்
டாங்கே யிகழ்த லருகிய வுண்டி யருஞ்செலவு
தீங்கே தங்காத்த லொருவயி னேசென்று சென்றுநிற்ற
றுங்கே வலமல்ல வந்ததென் றோவிந்தத் தையலுக்கே. ௭௪

## ஐயங்கரந்துதையலைவினாதல்.

தழங்கு மருவியுந் தாம்பணி யூசலுங் கந்துகமுங்
கழங்கும் பெரிதுநின் றுடினை யோகளி மாமயில்கள்
வழங்குங் கரிய வரிக்குயி லோடு வரவழைத்தோ
பழங்கண் பசலை புரிந்துபைங் கோதை பரிவுற்றதே. ௭௫

## கரந்துறை.

கோடிய தண்பிறை தோய்குன்ற மீதுபைங் கொண்டலன்ன
நீடிய பைங்குழ னேரிழை யாய்நென்ன லுன்னையொழிந்
தாடிய பூஞ்சுனை வாயினி தாக வழித்தவண்ணம்
வாடிய தன்றி வருந்திய காரண மற்றில்லையே. ௭௬

## ஆடியசுனையினணிநலம்வியத்தல்.

நீலம் பவளம் படரப் பவள நிறந்தரளக்
கோலம் புணைய நுதற்குறு வேர்வெழக் கோமளமே
போலு திருநிறம் பொன்னிற மாக விப் பூஞ்சுனைநீ
ரோலங் கமழ்குழ லாய்கிடை யாதுகொ லெங்களுக்கே. ௭௭

## பிறைதொழுகென்றல்.

மருமாந் தளிர்புரை வண்ணமுஞ் செவ்வி வடிவுங்கண்டு
திருமான் பணிமலர்ச் சிறடி யாய்தொழு செங்கணவ்வி
யொருமான் கரத்து மொருமான் புடையு முடையவெங்கள்
பெருமான் சடையொக்கு மேசெக்கர் வானும் பிறையுமின்றே. ௭௮

## தகையணங்குறுத்தல்.

கைவால் வளைகறங் கக்கழங் காடியென் காதல்வஞ்சி
மைவாவி யந்தண் மலர்கொய்ய ச்சென்றனள் வண்பவளச்
செவ்வாய் வெளுப்புங் கருங்கட் சிவப்பு நுதல்வியர்ப்பு
மொவ்வா தொழிந்தவெல் லாமணங் கேநின்னை யொக்குமின்றே. ௭௯

## நடுங்கநாட்டம்.

மருவிய செங்கதி ரொன்றினை வாங்கி வகிர்ந்துமுகஞ்
செருகிய திண்கிரி செல்வது போலுந் தினையிருவிக்
குருவி யினங்கண் மகளிர்பந் தாடிய கொள்கையொப்ப
வெருவி யெழுந்து விழுங்குளிர் சாரலில் வேழமொன்றே. ௮௰

## பிரிவுழிக்கலங்கல்.

தனியே யிடந்தலைப் பட்டுமென் றருயிர் தந்தவந்தண்
பனியேர் நறுமலர்ப் பாவையை மேவிநம் பாரநெஞ்சே
யினியேது சென்றெய்து மாறென்று நீநின் றிரங்கலென்றோ
கனியே யிதழ்வஞ்சி கண்சொன்ன வாருயிர் கண்டுவந்தே. ௮௧

## பாங்கியையிரவுவலியுறுத்தல்.

குளிக்குஞ் சுனையினுங் கொய்மலர்க் காவினுங் குன்றுநின்று
விளிக்குஞ் சிலம்பினும் வெண்மணற் சோற்றினும் வேரியந்தேன்
றுளிக்கும் பனிமலர்க் கொம்பைவி டாதவத் தோகையையின்
றளிக்குந் தனிநெஞ்ச மேயினி நாம்சென் றடைகுவமே. ௮௨

## புனங்கண்டுமகிழ்தல்.

உவரும் புலவு மொழிக்குங் கழிப்புன்னை யொண்மலர்த்தா
திவருந் துறையன்ன மென்னடை யாரித ணேறமுல்லைப்
பவருங் கறியும் படர்கொழுஞ் சாரற் பசுந்தினையைக்
கவருங் கிளியினுக் கின்றுகை மாறென்றுங் கண்டிலமே. ௮௩

## ஊரும்பெயருந்தாரையும்வினாதல்.

உரைக்கும் பெயரு முறையும் பதியுமெம் மூர்க்குமுங்கள்
வரைக்கு பெயரும் வழியுஞ்சொல் வீர்மணி வாய்திறக்கில்
விரைக்குங் குமுத மலரிற்செந் தேனை விரும்பிவண்டு
நிரைக்குஞ் சுரிகுழ லீருரு மோமணி நித்திலமே. ௮௪

## மான்கேடுவினாதல்.

விண்போய் வளரிள வேங்கையுங் காந்தளும் பூங்குவளைத்
தண்போ துடன்கமழ் தண்ணறுஞ் சாரலிற் றங்குமுங்கள்
கண்போற பிணையுங் கலையுமிங் கேவரக் கண்டதுண்டோ
பண்போன் மொழிகொண்டு பைங்கிளி யோடு பகைத்தவரே. ௮௫

### யாரேயிவர்மனத்தெண்ணமியாதெனத்தேர்தல்.

ஈங்கா ரிவர்நினை வேதென் றறிந்தில மெப்படியுந்
தாங்கா ரிபமுள்ள தன்மையர் போல்வர் தழையவிழும்
பூங்கா ரனைய புரிகுழல் காவற் புனத்தைவிட்டு
நீங்கா ரணுகல்செய் யார்நின்று நோவர் நெடிதுயிர்த்தே. ௮௬

### எண்ணந்தேர்தல்.

கடமலை யென்பர் கலையென்பர் மானென்பர் கன்னிகொங்கை
வடமலை தாங்க மருங்குலெங் கேயென்பர் வாளருவித்
தடமலை மேலுங்கள் சீறூ ரெதுவென்பர் தாமையென்ப
ரடமலை வேலவ ரெண்ணமென் னோவிங் கறிகிலமே. ௮௭

### இதுவுமது.

புனத்தே வருவர்நல் லோர்குறை போலப் புகலவென்று
மனத்தே யெழுஞ்சொல்ல மாட்டார் வருந்துவர் வண்டழைகொண்
டினத்தே பிரிந்த கலைவின வாநிற்ப ரீங்கிவர்தா
நினைத்தே யுழல்கின்ற தென்னறி யேனென்று நேரிழையே. ௮௮

### தெளிதல்.

தேருங் கருங்கலை பொய்யுழை பொய்மழைச் செங்குருதி
வாருங் கடமலை பொய்வழி பொய்நம் வளயலையிற்
சாரும் புதியவர் வேட்டையெல் லாமித் தளிரியலார்
பேரும் பதியு மருங்குனு மானது பின்புவந்தே. ௮௯

### கையுறையேந்திவந்தவகைவினாதல்.

சாந்தகிற் போதுந் தழையுந் தருகுவன் சாற்றும்வென்றி
விந்ததுப் போதொரு வேழங் கணைபட்டு வெண்டரளஞ்
சேந்தநுப் போதுமென் செவ்வாய் முறுவற் றிருந்திழையீர்
போந்ததிப் போதிங்கு வந்ததுண் டோநும் புனத்திடையே ௯௰

### எதிர்மொழிகொடுத்தல்.

உடுக்குங் கலையன்றி யீங்கொரு நாளு மொருவர்வந்து
கெடுக்குங் கலைகண் டறிகிலம் யாங்கிளர் வானுலகை
யடுக்குங் கலைமதி துஞ்சுமஞ் சார லருகுவெற்பா
தொடுக்குங் கலையினி வேறுமுண் டாயினுஞ் சொல்லுகவே. ௯௧

### இறைவனை நகுதல்.

மின்னே தழைகொண்டு வேழமெய் தாரந்த வேழம்வந்து
பின்னே பிணைபிரி யுங்கலை யானது பேசிலின்னக்
கொன்னே புகழுங் குறமுய லாகவுங் கூடுங்கொல்லோ
யென்னே யுலகி லிவளையொப் பாரில்லை யேவினுக்கே. ௧௨

### மதியிலவரவர் மனக்கருத்துணர்தல்.

உள்ளங் களிப்ப விழியிணை யாலொரு வர்க்கொருவர்
கொள்ளுங் குறையொரு கோடிசொல் லாநிற்பர் கூர்வளைவாய்ப்
புள்ளின் றவமுடி யப்புன மேயிவள் காத்ததுவுந்
துள்ளுங் கருங்கலை யேயவர் நாடத் துணிந்ததுமே. ௧௩

பாங்கிமதியுடன்பாடு முற்றும்.

---

# பாங்கியிற்கூட்டம்.

### முன்னிலையாக்கல்.

தழைக்கின்ற சந்தனத் தண்ணறுஞ் சாரற் றவழுங்கொண்டல்
மழைக்குன்ற வாணர் மடவிய ரேறும் மழைக்கண்களா
லுழைக்கன் றையுமொழி யாலொரு கோடிபைங் கிள்ளையையு
மழைக்கின்ற வுங்களை யோபுனங் காவலு மாக்குவதே. ௧௪

### அவர்க்குத் தோழி கூறல்.

ஆக்குஞ் செயலென் னழியிலென் னோகல் லரியபகல்
காக்குந் தொழிலெம்மைக் கற்பித்தல் காணவர் கங்குலுநாண்
வீக்குஞ் சிலையி லிருங்கணை கோத்து வெகுண்டுமனந்
தூக்குங் களிறு துறப்பரென் னீரினிச் சொல்வதுவே. ௧௫

### உட்கோள்சாற்றல்.

பொருதுன் றனைய புணர்முலை யீர்நும் புனங்குறித்து
வருகுஞ் சரங்கெட வெஞ்சரங் கோத்தெய்வன் மானுமுச்சி
திருகுங் கவைநெடுந் திண்கோ டிரலையுஞ் செந்தினையி
னருகுஞ் செறியவொட் டேனனு காம லகலநின்றே. ௧௬

## தோழிக்குத் தலைவன் கூறல்.

இருளும் புயலு முயலுந் தவமிய லாதழுங்கச்
சுருளுங் கருங்குழற் றோகையன் னீர்சொரி தேன்பருகி
மருளுஞ் சுரும்பொடு வண்டறை பூந்தழை கொண்டுவந்தோற்
கருளுங்க ணெஞ்சிற் பிறப்பதென் னாவி னறிகிலனே. ௧௭

## குலமுறைகிளத்தல்.

தாரூர் குழலிக்கு மாமலை நாடு தனித்திகிரித்
தேரூர் சிலம்பிற் சிறுகுடி யூர்நின் றிருநகர்நன்
னீரூர் கழனியு நெல்லுங் கரும்பு நெருங்குமந்தண்
பேரூர் பெரும்புன னாடுநின் னாடெம் பெருந்தகையே. ௧௮

## தலைவன்றலைவியைவியத்தல்.

வானக முற்ற வரையக நாடன் மடந்தையென்றே
பானகை மென்மொழிப் பாவைசொன் னய்பணி வெண்டரளத்
தூனகை யின்னகைத் தோகையன் னாளைச் சுரருலகின்
மேனகை யென்றுகொண் டேகினை யாநிற்கு மென்னெஞ்சமே. ௧௯

## பாங்கியறியாள்போன்றுவினாதல்.

வளையார் முளரி வருந்தமைக் காவியை வாவிகொய்துஞ்
சுளையார் பலவிருஞ் சோலையி லாடியுந் தோகையினம்
விளையாடல் கண்டும் விருந்தய ராநின்ற வேனெடுங்க
ணிளையா ரிவரிடை யார்கண்ண தோகண் ணிறைவனுக்கே. ௨௰

## அறியக்கூறல்.

பண்ணார் மொழிமென் பவளச்செவ் வாய்முலை பைங்குரும்பை
விண்ணார் மதிமுகம் வேயிரு தோள்விரி நீருலகிற்
பெண்ணா ரமுதன்ன பெய்வளை மொய்குழற் பேதைக்குநீ
கண்ணா குவைநினைக் கங்குயி ராவள் கனங்குழையே. ௨௧

## இறைவிதன்மையியம்பல்.

சிறுங் களிற்றினந் தேறலுந் தேறலுஞ் சிந்தையுநீ
மாறும் படிமெய் வருத்திய தாயினு மாமழைவந்
தேறுங் குலவெற்ப யானும் பிறரு மெதிர்நின்றன்ன
கூறுந் தகைமைய தோகுன்ற வாணர் குலதெய்வமே, ௨௨

## இன்றியமையாமை கூறல்.

சினத்துறை வாங்கிய திண்பிறை யம்பிற் சிலைக்குறவ
ரினத்துறை பூங்கொடி யென்றல்ல வேயிசை யேழுமந்தண்
புனத்துறை கிள்ளையும் பூவையும் போன்மொழிப் பொற்றொடியென்
மனத்துறை தெய்வமென் றேயென தாருயிர் வாழ்கின்றதே. ௱௩

## நின்குறை நீயே கூறென்றல்.

மின்குறை கூற மெலியுநுண் ணேரிடை மெல்லியலுக்
கென்குறை கூறவும் யானஞ்ச வேனிகல் மாமதனன்
றன்குறை தீர்த்தரு ளுன்திரு மேனி தளர்கின்ற
நின்குறை கூறுக நீயே யலங்க னெடுந்தகையே. ௱௪

## பாங்கியைத் தலைவன் பழித்தல்.

பொற்பிணை யாமடப் பூவைமென் பாவை புருவமென்னும்
விற்பிணை யார்விழி மெல்லிய லாகம் விரும்பியுன்றன்
சொற்பிணை யாகத் துயர்க்கட லீந்தத் துணிந்ததுவன்
கற்புணை யாகமுந் நீர்கடப் பார்தங் கருத்தொக்குமே. ௱௫

## பாங்கி பேதைமையூட்டல்.

செறியா தவருறு சிந்தையெண் ணாள்சிந்தை யிற்சிறிது
மறியா ளனுமதற் கையமுண் டோவடுங் கூற்றமையென்றுங்
குறியா விலங்கு துலங்கயில் வாளி குறியிற்பட்டு
மறியா விழவிளைக் குஞ்சிலை வாணர் மடமகளே. ௱௬

## தலைவன் மூதறிவுடைமை மொழிதல்.

தன்னால் வருந்திய நெஞ்சமு நாணுமோர் தஞ்சமற்ற
வின்னா வரும்பிணிக் கின்மருந் தாக விணைவிழியா
லன்னாளி லுன்னை யறிவித்த மானுக் கறிவின்மைநீ
சொன்னா லியையுங்கொல் லோதுடி நேரிடைத் தூமொழியே. ௱௭

## பாங்கி முன்னுறு புணர்ச்சி முறையுறக் கூறல்.

உறுந்தாரை யென்னொடு சாற்றுவ தென்கொலின் றுன்னைமுன்னே
யறிந்தாரை யெய்தற் கருமையுண் டோவடை யார்மடியச்
செறுந்தாரை வேல்வல்ல சேயனை யாய்செப்பி னீயறிய
நறுந்தாரை வார்குழற் றொடியுஞ் சால நடுங்கிடையே. ௱௮

## தன்னிலை தலைவன் சாற்றல்.

கணைபொன் றியவிரு கண்வலைக் கேயென் கலைமுழுதும்
பணையொன்று தோளிதன் பார்வையிற் பட்டுப் பரிசழிந்து
துணையின்றி நின்று வருந்துறு வேற்கிவை சொல்லிநில்லாய்
புணையின்றி யார்கடப் பார்கடற் பாய்புனற் பொன்னியையே. ௱௯

## பாங்கியுலகியலுரைத்தல்

தன்னிற் கடவுள ரில்லாத தன்மை தரித்தகங்கைச்
சென்னிக் கடவுள் செயலனை யாய்வெஞ் சிலைக்குறவர்
கன்னிக் கடவு ளனையவென் னாவியைக் காந்தள்பற்றி
வன்னிக் கடவுள் வலம்வந்து கோடன் மரபியலே. ௱௰

## தலைமகன் மறுத்தல்.

சிலைமேன் முகிலன்ன கன்னுதன் மீது செறிகுழலாண்
முலைமேன் முயங்குவ னீசொன்ன வாறு முழுமணியின்
கலைமே லணிதழை யல்குனல் லாய்முன் கவிகொணர்ந்த
மலைமேன் மருந்துவந் தோதலை மேல்விட மாற்றுவதே. ௱௰௧

## பாங்கியஞ்சியச்சுறுத்தல்.

புதியார் வருமிட மன்றிது குன்றிற் புனைக்குறவர்
மதியா ரெவரையும் வாரலெஞ் சாரலில் வந்துநின்னைத்
துதியா ரறுமுகன் றேற்றமுண் டாயினுந் தோகையில்லை
நதியார் கதிர்வடி வேலில்லை யாகத்து நூலில்லையே. ௱௰௨

## கையுறைபுகழ்தல்.

முலைக்கா மணிவட முத்திவை கோத்தணி மொய்தழைநின்
கலைக்கா மலர்திரு வல்குலுக் காமிக் கருங்குவளைச்
சிலைக்காட வேள்கொடி சேர்குழைக் காமழை சென்றுதங்கும்
நலைக்கா மயிலனை யாய்குழற் காமித் தழையுமின்றே. ௱௰௩

## உண்டெனமறுத்தல்.

ஆடுங் கழங்கு மடுஞ்சிறு சோறு மகன்கழனிக்
கோடுவெங் குளிர்புன லாற்றுக் குரம்புங் கரும்புஞ்செந்நெற்
காடுந் துணித்திட்ட கைவினை யாளர் கவருங்கொற்று
நீடுந் தடந்துறை யூரெம ரூரில் வெண்ணித்திலமே. ௱௰௪

## இல்லெனமறுத்தல்.

பூங்கற்ப வண்டழை கொண்டுவந் தாலும் புனக்குறவர்
வேங்கைத் தழையன்றி வேறறி யார்வெய்ய சேடனுச்சி
தாங்கத் தருமணி யுந்திரு மால்செங்கைச் சங்கின்முத்தும்
வாங்கக் கிடைப்பதன் றேவிடை வேறில்லை வாணுதற்கே. ௱௰௫

## ஆற்றாநெஞ்சினோடவன்புலத்தல்.

மாவையு மின்சொற் குயிலையும் வண்புனல் வாவியையுங்
காவையு மங்ஙன் கலக்கிய பாவங் கவரிதழுங்
கோவையு மன்னசெவ் வாய்நவ்வி பாற்கொண்டு கொண்டுசென்ற
யாவையு முள்ளது மில்லது மாய்விட்ட தென்செயலே. ௱௰௬

## ஆற்றுவித்தகறல்.

வென்றே புகழ்புனை வேலண்ண லேயிந்த வெற்பினுள்ள
தன்றே யெனினு மரிவையை யானடி வீழ்ந்திறைஞ்சி
யின்றே திருத்தி யிருந்தழை வாங்குவ னிற்றைக்கு நீ
சென்றே வருக சிறுகான் முடியுநின் சிந்தனையே. ௱௰௭

## மடலேபொருளெனமதித்தல்.

தலையாய நண்புடை யார்தளர்ந் தாருயிர் தாங்குதற்கோர்
நிலையாக வைத்துமுன் னின்றில மால்வெய்ய நீணெடுங்கண்
வலையால் வளைப்புண்டு வார்குழற் கண்ணியில் வந்துபட்ட
கலையார் விடுக்கவல் லார்விடு வாரெவர் கைப்பட்டதே. ௱௰௮

## உலகியன்மேல்வைத்துரைத்தல்.

கொம்மைப் பணைமுலை கூட்டும் பரிசு கொடியிடையார்
தம்மைப் பெறுதவர் தாலப் புரவியு யாலையென்பும்
வெம்மைச் சுடலையி னீறுமென் பூளையும் வெள்ளெருக்கு
மிம்மைக்கு நாடி மறுமைக்கு மானதென் றெண்ணுவதே. ௱௰௯

## தன்மேல்வைத்துரைத்தல்.

சோலையில் வந்தபைந் தோகைநல் லீர்மன்று சூழ்மறுகிற்
காலையில் வந்தும்மைக் காண்பது நான்கரி யோன்கடைந்த
வேலையில் வந்த விடமுண்ட நாதர் விளங்கியபொன்
மாலையும் வண்ணக் கிழியும்வெண் ணீறு மடலுங்கொண்டே. ௱௨௰

### மடல்விலக்கு.

பேணுங் குலனும் புலனுங்குன் றாத பெருந்தகையாம்
பூணும் புகழும் பழியுங் கிடக்கப் புதுநலனு
நாணும் பணிமொழி யும்நவ்வி நோக்கு நடையுமிங்ஙன்
காணும் படியெழு திக்கொண்டு வாருமிக் கன்னியையே. ௱௨௧

### தான்கற்றபுகழ்தல்.

மிகுத்தே னொருகிளி வேட்கையிற் சால விசாலத்துள்ளே
தொகுத்தே னிதம்பழுந் தோளுந் தனங்களுஞ் சூதவடு
பகுத்தே பதிசத தெனவென்னை வாழ்வித்த பாதகக்கண்
வகுத்தேன் வகுத்தவற் கும்முடி யாதிந்த வல்லவமே. ௱௨௨

### பாங்கியருளியல்கிளத்தல்.

மகிழ்ந்சாவி யொன்றி மணந்தக லாத மடவன்றில்வாய்
நெகிழ்ந்தா லுறுதுயர் நீரறி வீரின் னெறியுமக்குத்
தகுந்தா னையுமன்று தண்ணளிக் கும்பிழை சாலுமன்பு
மிகுந்தாலு மின்னசெய் யார்பெரி யோரிவ் விருநிலத்தே. ௱௨௩

### பாங்கிகொண்டுநிலைகூறல்.

என்னா லுளது வணங்கியும் வாழ்த்தியு மேற்குவண்ணஞ்
சொன்னால் மறுத்தெதிர் சொல்லத் தகாளிருந் தோகைமயி
லன்னா ணிலைசென் றறிந்துநின் பால்வரு மவ்வளவு
மன்னா வருந்தல் பொருந்திய வாறுசெய் வந்தபின்னே. ௱௨௪

### பாங்கியிளமைத்தன்மைகூறல்.

வினைவருஞ் செங்கதிர் வேலண்ண லேகழை விற்குறவர்
மனைவரு வஞ்சி விழியுங் குழலும் வளமுலையு
மனைவரு நாடு மருங்குந் தலமு மளிபொருந்துஞ்
சினைவரு நாண்மல ருங்கலர் தேடிய செல்வமுமே. ௱௨௫

### தலைவன்றலைவிவருத்தியவண்ணமுரைத்தல்.

அளைதா ழரவு மரியும்வெந் தீயு மரசுமெல்வ
ளிளைதா யினுங்கொல்லு மென்பது நீவந் திருஞ்சுரும்பின்
கிளைதாழ் குழல்வஞ்சி கேட்டிலை யோயிளங் கிள்ளையின்சொன்
முளைவா ணகைப்பெண் ணரசல்ல வோவிந்த மொய்குழலே. ௱௨௬

## சேட்படைகூறத்தானலகூறல்.

புனையுந் தரள வடமுந் தடமென் புணர்முலையும்
வனையுஞ் சுரிகுழ லும்மட நாணு மகரமுடன்
முனையுங் கயலு முகமதி வேர்வு முறுவன்முத்து
நினையுந் தொறும்வினை யேன்களி கூரமு னிற்கின்றதே. ௱௨௭

## பாங்கிதலைவிசெவ்வியருமைசெப்பல்.

துறைவாய் மணற்சிற்றி லுஞ்சிற்றில் வாயடுஞ் சோறுந்துற்ற
நறைவாய் மலர்ப்பண்ணை நன்மணி யூசலு நந்தலைக்குங்
குறைவாய் நறுமலர் கொய்துபந் தாடலுங் கூடவிற்றைக்
கிறைவா மறந்துநின் றூட்கென்கொ லோசொல் லியம்புவதே. ௱௨௮

## தலைவன்செவ்வியெளிமைகூறல்.

திரைவார் கருங்கடற் கண்டலந் தண்டுறை சிற்றின்முத்தத்
திரையார் குருகி னினம்விளை யாட விளையவஞ்சி
விரையார் மணிவண்டல் மாறிய காரண வேறொன்றல்ல
வுரையா யினியயி லேசென்று நீயென்ற னுண்மெலிவே. ௱௨௯

## என்னைமறைப்பதென்னெனநகுதல்.

கருந்தா மரையன்ன கண்ணியர் வண்ணக் களிமயிலின்
றிருந்தாடல் கண்டு சிலம்பெதிர் கூய்ச்சிறு சோறருந்தி
விருந்தாடுஞ் சோலையின் மேவிநின் றாவியின் வேட்கைசிந்தை
வருந்தா வகைமுடிப் பார்மறை யாரெனை மன்னவனே. ௱௩௰

## அந்நகையாற்றுமை.

புகையாட நெஞ்சம் புகையழன் மூழ்கிப் பொலிவழிந்து
தகையாட லாய்நின்ற தன்மைகண் டாலுயிர் தாங்கலன்றி
நகையாடல் சாலநன் றேநட மாடு நயனநல்லீர்
பகையா டவருஞ்செய் யார்தைய லார்செய்யும் பாதகமே. ௱௩௧

## தேற்றல்.

எனக்காவி நின்னை வருத்திய மானவ் விளங்கிழையா
டனக்காவி காணுந் தடமலை நாட தழையவிழ்பூஞ்
சினைக்காவி ரிகொய்த தேமென் றழையுஞ் சிலம்பிலந்தண்
சுனைக்கா வியுமங் கருத்துவ னோவிறை சோரநின்றே. ௱௩௨

## கிழவோனாற்றல்.

மொய்ம்மால் வரையன்ன விம்மா வெழுவெம் முகிழ்முலைக்கு
நம்மால் வரையினை நாடொறுஞ் சொல்லி நலஞ்சிறக்க
வெம்மா லொருபய னில்லா தருந்தழை யேற்றசெங்கை
மைம்மான் விழிக்கொரு கைம்மாறு கண்டிலம் வையகத்தே. ௱௩௩

## பாங்கிகையுறையேற்றல்.

மேலிங் கொருபடி போயடி யேன்செய்த மெய்த்தவத்தா
லேலங் கமழ்குழ லாளிசைந் தாளெறி நீருலகி
லாலுங் கலவ மடமயி லூர்தி யடன்முருகன்
போலுந் திருவுரு வாதரு வாயினிப் பூந்தழையே. ௱௩௪

## இறைவன்றனக்குக்குறைநேர்பாங்கியிறைவிக்கவன்குறையுணர்த்தல்.

கையுந் தழையுங் கருகியமேனியுங் கட்டுரையும்
பொய்யும் புதியர் பழையரும் போல்வர் புனமகலார்
வையங் கடந்த மலரடி யார்தம் மகனுக்கொப்பார்
செய்யுந் திறமென் கொலோதிரு வேயவன் சிந்தனைக்கே. ௱௩௫

## நாணுநீங்கல்.

குருவி பசுங்கிளி கொன்னைகொண் டேனற் குரல்முழுது
மிருவி படும்புன மித்தனை போதிது போதுங்குன்றத்
தருவி யிரும்புன லாடவும் பெற்றில மாவியன்றாய்
பருவிய நுண்மணற் பாவையுந் தேடிப் பரிந்தெழுமே. ௱௩௬

## இறைவியறியாள்போன்றுகுறியாள்கூறல்.

அருவியுஞ் சாரலு மேனலுந் தோரையு மைவனமுங்
குருவியுங் கிள்ளையுங் கொள்ளை மென் பூவையுங் கோகிலமும்
வெருவியிங் கேவந்த மென்பிணை மானும் விடாதவெற்பை
மருவியும் போவதுகொல் லோமஞ்சு காள்விஞ்சு வானகத்தே. ௱௩௭

## பாங்கியிறையோற்கண்டமைபகர்தல்.

உருவது மன்னுங்கு மாரனு மாரனு மொத்தவள்ள
றருவது கண்ணியுந் தண்ணந் தழையுந் தடக்கைவெற்பும்
பொருவது மன்புடன் போவது மீளப் புனத்தயலே
வருவது நிற்பது நின்பொருட் டேகொண் மதிநுதலே. ௱௩௮

## பாங்கியைத்தலைவி மறைத்தல்.

இல்லா தியம்பவு மேலா துரைக்கவும் யாரென்றிங்கு
வல்லாது சொல்லவும் வல்லைகொல் லோவண்ட லாடிடத்துங்
கல்லார வாவி யினுங்கடி காவினு நீயருகு
நில்லாத போதுமுண் டோவென்சொ னின்சொ னேரிழையே. ௱௩௯

## என்னைமறைப்பதென்னெனத்தழால்.

மஞ்சரி யாயினும் வானறி யாத மருந்துமற்று
நெஞ்சறியாத நினைவுமுண் டோநெடு நீருலகி
னஞ்சறி யாவன்பி னல்லவ ரூட்டினு நாணியசெம்
பஞ்சறி யாத பணிமலர்ச் சீரடிப் பைந்தொடியே. ௱௪0

## பாங்கிகையுறைபுகழ்தல்.

வில்லும் பிறையுந் திறையிடு வாணுதன் மெல்லியலா
யெல்லுங் குமுத மலருங்கண் டாயிரு கோங்கரும்பும்
வல்லும் பொருத வனமுலைக் கான மணியிதுபேர்
சொல்லும் பொழுது பிரமனு மாலுந் தொழத்தகுமே. ௱௪௧

## வலிதாகச்சொல்லிக்குறைநயப்பித்தல்.

சாயா வறிவுந் தளர்ந்துசென் றூர்சென்ற தன்மைகண்டு
மாயா வெனக்குள்ள வன்கண்மை யேமயி லேபயிலும்
வேயார் சிலம்பிற் களிறும் பிடியும் விழைந்தருவி
தோயா வளைநிழ லிற்றுயில் கூருந் தொடர்வுகண்டே. ௱௪௨

## மெலிதாகச்சொல்லிக்குறைநயப்பித்தல்.

இரப்பா ரொருவர்க் கிருநிதி வைத்தங் கிருந்துமுள்ளங்
கரப்பா ருரைசெயுங் கள்ளமெல் லாமுன்னங் கட்டுரைத்தேன்
பரப்பாரு மல்குன்மின் னேயினி நானென் பகர்வதென்றோ
மரப்பாவை யுங்கண் டபோதுருகாதல்ல வள்ளலையே. ௱௪௩

## தலைவன்குறிப்புவேறாகநெறிப்படக்கூறல்.

தருக்குங் களிறு முழையுமுன் றேடித் தழைகைக்கொண்டு
மருக்குங் குமமுலை யாய்வழி கேட்டவர் வந்துமஞ்ஞை
செருக்கும் பனிவரைச் சீறூரி லுங்க டெருவுமன்று
*மிருக்கும் படிறனென் றூறி யேனவ ரெண்ணியதே. ௱௪௪

*இருக்கும்படியென்னென்றூர்—என்றும்பாடம்.

## பாங்கி தலைவியை முனிதல்.

சாந்தந் தருமித் தழைக்குக் குறையிபஞ் சாய்த்ததனு
வேந்துங் கரத்தி லிருந்தது வோவிங் கெழுந்தரிய
மாந்தண் டளிர்நிறத் தாய்வினை யென்கையில் வந்ததுவோ
பூந்தண் புரிகுழ லாரிடை யாமுன் புகலெனக்கே. ௱௪௫

## தலைவி பாங்கியை முனிதல்.

வாளாது நின்றென்னை வந்தனஞ் சொல்லி மணிவளைவேய்த்
தோளாய் புலந்து துயர்வதென் னேதொன்று தொட்டுவந்தின்
னாளாக வொன்றி நயந்தநங் கேண்மையி னாளுமுன்சொற்
கேளா தனவுமுண் டோவென்கொ லீயினிக் கேட்கின்றதே. ௱௪௬

## தலைவி கையுறை யேற்றல்.

தீதாகி லென்னன்றி நன்றாகி லென்னின் சிலம்பர்தந்த
போதார் தழையும் புதுநறுங் கண்ணியும் பூங்குவளைத்
தாதார் மலர்க்குழற் றையனல் லாய்வையஞ் சாற்றுவன
யாதாயி லென்வந்து நின்கைய தானதின் றென்கையதே. ௱௪௭

## தழைநயப்புரைத்தல்.

வெல்லப் பிறந்த விழிமட வாரொழின் மேனியென்றுஞ்
சொல்லப் பிறந்த தரும்பிவர் பூந்தழை தோன்றியங்கை
செல்லப் பிறந்து சிறந்தநல் லாடன் றிருமுலைமேற்
புல்லப்பிறந்தது சொல்லவொண் ணாதெம் புரவலனே. ௱௪௮

## பகற்குறிநேர்தல்.

கல்லுங் கழையுந் தழுவுமிக் கானவர் தாம்விரும்பு
மில்லும் பெரிது மிகழ்ச்சிய தாயினும் யாரொருவ
ரொல்லுந்துணிவு மொருபகற் றங்கி வரும்பகற்றாஞ்
செல்லுந் திறநினை வார்சிலம் பாதங்கள் சேணகர்க்கே. ௱௪௯

## பகற்குறியிடங்கூறல்.

கோடையுங் கொண்டலுங் கண்டறி யாத குளிர்பொழிற்கண்
வாடையுந் தென்றலு மேவரு மேவரிற் காண்பதன்னப்
பேடையுஞ் சேவலுஞ் சேலும் வராலும் பிறங்குநன்னீ
ரோடையுஞ் சங்கமுஞ் சங்குமி ழாநின்ற வொண்முத்துமே. ௱௫௰

## குறியிடங்கொண்டுசேறல்.

பேதா யறிவின் பிறந்தக மேமடப் பெண்ணமுதே
போதா யருவிப் புனன்மலை ச்சாரனின் பூண்முலைக்கு
வாதாய குன்றை மறுமொழி கேட்கவு மைக்கண்களா
னீதான் வெறுத்த குவளையம் போது நெரிக்கவுமே. ௱௫௧

## குறியிடத்துய்த்துநீங்கல்.

உகையார் முகிலி னொலிவெள் ளருவி யுருமென்றஞ்சித்
திகையாது நில்லிச் செயலய னீழனின் செங்கைகளு
நகையார் முறுவலுங் கண்டல ராது நடுங்கியந்தண்.
முகையாக வுந்தரு மோசெய்ய காந்தளு முல்லையுமே. ௱௫௨

## நீங்குந்தோழிதலைவனுக்குணர்த்தல்.

பனியேர் நறுமலர்ப் பாயலிற் கண்வளர் பாவையொரு
தனியே கிடந்தழுந் தாயுமங் கில்லைத் தடஞ்சிலம்பா
முனியேல் விடைகொள்வன் முற்றுநின் காவன் முகிணைசெங்
கனியே யினிய செவ் வாய்நவ்வி மான்விழிக் காரிகையே. ௱௫௩

## இறைவியிறையோனிடத்தெதிர்ப்படுதல்.

நீயோ திருமக ணின்னைமுன் னுள்வா நேர்ந்துபெற்ற
தாயோ வமுதந் தருந்திரு ப்பாற்கடல் கார்க்கடல்போற்
றீயோ டழல்விழிச் சேக்கையின் மேற்றிருக் கண்வளர்ந்த
மாயோ னென்றினைந் தோவென்னை வாழ்விக்கவந்ததுவே. ௱௫௪

## புணர்ச்சியின்மகிழ்தல்.

பங்கே ருகமலர்ப் பாதம் பணிந்து பரிமளப்பூங்
கொங்கே ரலங்கற் குழன்மணங் கொண்டு குவிமுலையுஞ்
சங்கேர் கழுத்துந் தடம்பணைத் தோளுந் தழுவியிங்ங
னெங்கே யெவருக் கிவருமிக் காதலு மெய்தியதே. ௱௫௫

## தலைவியைவிடுத்தல்.

நலமார் கலவி நயந்தென்னை வாழ்வித்து நாணிறைந்த
குலமா மடக்கொடி யேயடி யேன்விடை கொண்டுநிற்கப்
பொலமால் வரைவழிக் குத்துணை யாவுடன் போந்தநெஞ்சை
மலர்மாளி கையள வுங்கொண்டு போகி வரவிடுமே ௱௫௬

## நெஞ்சமிக்கதுவாய்ச்சோர்தல்.

பொன்றாத காதற் பொறையாரு மாவி புலம்பிவைய
வின்றாரு மின்றி விருந்தென்னை யாளிக் குருந்தினிடை
குன்றாத வன்பொடு கூடியும் வாடியுங் கோலங்கொண்டு
சென்றார் மணிநெடுந் தேரொடு போனதென் சிந்தையுமே. ௱௫௭

## புனத்தைநோக்கிக்கூறல்.

மேகந் தழுவும் வியன்மலைச் சாரலில் வெவ்வினையே
னாகந் தழுவியு மன்பமை யாவென் னசையறிந்தும்
பாகன் பரிவிடப் பின்புமுன் பார்த்தின்று பையப்பையப்
போகின்ற தேரின்ன மும்வரு மோவிப் புனத்திடையே. ௱௫௮

## பாங்கிகையுறைகாட்டல்.

பணியேர் நறுமலர்ப் பாவைகண் டாலும் பணிந்திறைஞ்ச
நணியே நெறிக்கு நறுநுத லாய்கன்னி நாகநிழற்
றணியே யுனைநிறுத் திச்சென்று நீடிய தன்மைகொண்டு
முனியே லுவையு வை நின்முகைக் காந்தளு முல்லையுமே. ௱௫௯

## தலைவியைப்பாங்கிற்கூட்டல்.

பாடின மேதகு பஞ்சுரஞ் செஞ்சிறைப் பாணினங்கள்
வாடின மேனியும் வண்ணமுந் தோளு மலர்க்கழுநீர்
சூடின மேயொண் சுனையுங் கழங்குந் துளங்குபந்து
மாடின மேயினி நாம்வண்ட லாய மடைகுவமே. ௱௬௰

## நீங்குந்தலைவற்கோம்படைசாற்றல்.

பெடைநின்று காண வுடனின்ற தோகை பெருநடஞ்செய்
புடைநின்ற சோலைப் பொதியில்வெற் பாபொற் குழைதொடருங்
கடைநின் றுகுபுனற் கண்ணிக்கு நின்புகழ்க் காவலுக்கு
மிடைநின்ற பாவிக்கு மேதமு றாவண்ண மெண்ணுகவே. ௱௬௧

## விருந்துவிலக்கல்.

தினைமாவு மால்வரைத் தேனுங் குழைத்துச் சிறிதருந்திச்
சுனைமா நறுமல ரோடைநன் னீருண்டு சோலையினன்
னனைமா தவிசிழ னண்பகற் போது நயந்திருந்து
மனைமா லையினடந் தால்வரு மேதமென் வள்ளலுக்கே. ௱௬௨

### விருந்திறைவிரும்பல்.

சூதார் வனமுலைத் தோகைநல் லீருங்கள் செங்கைதொட்ட
தேதா யினுமெனக் கின்னமு தாமெல்லி சாயுமெல்லை
தாதார் மலர்ப்பொழி றங்கலு மாமிங்க ளுங்கள்வெற்புக்
காதார் நறுங்குழைக் கானவ ரானவர் காவலின்றே. ௱௯௩

பாங்கியிற்கூட்டம் முற்றும்.

---

## ஒருசார்பகற்குறி.

### கிழவோன்பிரிந்துழிகிழத்திமாலைப்பொழுதுகண்டிரங்கல்.

கூற்றங் கரந்து கொடியபுன் மாலை வடிவுகொண்டு
தோற்றுஞ் சிறுபிறை யேயெயி றாகத் துறையிருந்து
தேற்றந் தரும்பெடை யன்னமுஞ் சேவலுஞ் சேக்கைபுகு
மாற்றந் திறமறி யேனவ ரோசென் றகன்றனரோ. ௱௯௪

### பாங்கிபுலம்பல்.

பொன்னார் நறுமலர்ப் புன்னையங் கானற் புளினந்தங்கி
யன்னாண் மணந்து தணந்தவர் போல வருக்கன்சென்ற
பின்னாவதன் முன்ன மேசெக்கர் மாலை பிறந்ததினி
யென்னாகு மென்றறி யேன்வளங் கோதை யிளங்கொடிக்கே. ௱௯௫

### தலைவனீடத்தலைவிவருந்தல்.

கூவிக் குயிலை யழைக்கவுங் காவி குறைவினிறை
யாவிப் புனலு மருவியு மாடவு மாயவெள்ள
மேவித் தனிநின்று நெஞ்சமு நானு மிரங்கவின்னுங்
காவிற் சிறைவண்டு காளவ ரோவரக் காண்கிலமே. ௱௯௬

### தலைவியைப்பாங்கிகழறல்.

அவ்வாறு புல்லி யளித்தஞ்ச லென்றவர் கஞ்சமின்னு
மொவ்வாத நின்னை யொழிந்துறை வாரல்ல ரோடரிக்கண்
மைவார் குவளையும் வம்பார் தடமுலை யும்பசந்திங்
கிவ்வா றிருக்குமென் றாலென்சொ லாருனை யேதிலரோ. ௱௯௭

## தலைவன்றாழ்த்துவந்துழி கூறல்.

சேணார் கொடிநெடுந் தேர்மணி யோசை செவிப்படுமிவ்
வாணாக மேல்வரு கின்றனர் போலவர் வந்துநம்மைக்
காணா தலமரு துன்பமுங் காதலுங் காணவிங்ங
னிணாக நீழன் மறைகுவம் போது நிலாவளையே. ௱௬௮

## முன்னிலைப்புறமொழி மொழிதல்.

செல்லத் தருவிறல் வேள்வரக் கண்டுறை சிந்துகண்ணும்
புல்லத் துடித்த புணர்மென் முலைகளும் பொன்பசந்து
மல்லற் பதித்தவன் வன்கண்மை கூறி மறந்தவென்னை
யல்லற் படுத்துமென் றாலென்செய் வேனிவ் வருவினைக்கே. ௱௬௯

## பாங்கியொடு பகர்தல்.

ஐயோ மருங்கு லறநொந்த தேரவென்ப ராசமுலை
மெய்யோ டணைத்து விடநினை யார்வினை யேனிருசெங்
கையோ திருநெடுங் கண்ணில்வைய் யாநிற்பர் கற்றதெல்லாம்
பொய்யோ முடிய நெடியதண் சாரற் பொருப்பரின்றே. ௱௭௰

## பாங்கியச்சுறுத்தல்.

மனங்கா வலருழை வைத்துமென் கூர்வளை வாய்ப்பசும்புள்
ளினங்காவன் மாற்றிய வேனல்கண் டாலன்னை யெப்படியுங்
கனங்காவல் கொண்ட கழையிருஞ் சாரற் கனங்குழைநின்
புனங்காவன் மாறு மதன்பினிற் காவலும் பூணும்வந்தே. ௱௭௧

## நீங்கற்கருமை தலைவிநினைந்திரங்கல்.

வாவியொன் றாத மடவன்ன மேமுன்ன மேவகுத்த
பாவியொன் றாகப் படைத்தில னேகண் பகழியல்ல
காவியென் றொம்மைக் காயமென் றார்தம்மைக் காயத்துற்ற
வாவியென் றொன்ற போதஞ்சி னேனவ ரன்பினுக்கே. ௱௭௨

## தலைவிக்கவன்வரவுபாங்கிசாற்றல்.

தீட்டிய தொய்யிற் றிருமுலை யாயன்பர் தேர்வரவு
கேட்டிய மன்றற் கிளைவனர் சாரலிற் கேகயங்க
ளோட்டிய கன்ற வுழைமுல்லை போய்விழ வூர்பரிதி
வாட்டிய முல்லையுங் கொண்டலு நாற வருகின்றதே. ௱௭௩

## தலைவனாட்டந்தலைவிபுதைத்தல்.

மின்கண் புலைதக்கு மருங்குனொந் தேவிம்ம விம்முகொங்கை
தன்கண் புதைக்கத் தரும்புறஞ் சார்ந்துமென் சாயலொளித்
தென்கண் புதைத்தகை யிம்மலர்க் காவி லெதிர்ப்பட்டநா
ணின்கண் புதைத்தகை யோவறி யேன்கொ ணிளாவலையே ௱௭௪

## சிறைப்புறமாகச்செறிப்பறிவுறுத்தல்.

இயலுங் கலவ மயிலுமென் மானு மினக்கிளியு
முயலுந் தவங்கண் முடிவது போலு முதுமறலிச்
செயலுங் கமலமுஞ் செங்கழு நீருஞ் செழியர்வெற்றிக்
கயலும் பொருங்கணல் லாயின்று நாளை கடிபுனத்தே. ௱௭௫

## தலைமகளாற்றாமைகூறல்.

என்னாவி யன்னவர்க் கேறும் பழியென்க ணில்லையெனப்
பொன்னார் கொடியுண்டு பூந்துகி லுண்டுமென் பூவணைமேற்
பன்னா ளிரவினும் பாயல்கொள் ளாள்பொன் பசந்தொளிருங்
கன்னா பரணம் பொரும்விழிக் கே*யென்றுங் காண்கிலமே. ௱௭௬

## தலைமகளைநோக்கிக்கூறல்.

மல்லற் பணில மணிமுத் தலைகடல் வாணர்தங்க
ளில்லைப் பொருது மிருங்கழிச் சேர்ப்ப விருஞ்சுரும்பின்
வில்லைப் பொருநுத லீரொன்சொ னீருங்கண் மேனியென்று
சொல்லப் பழிவரு மோவொரு நாளித் துறையில்வந்தே. ௱௭௭

## முன்னின்றுரைத்தல்.

கூனுங் கழைவிற் குறவர்கண் டாலுங் குமரனென்ன
மானுஞ் சிலம்பில் வருவிர்கொல் லோதொல்லை வல்வினையால்
யானுங் கரும்பு மிரும்புனங் காவல்விட் டேகுகின்றேந்
தேனுஞ் சுரும்புஞ் செறிகொடிச் சாரற் சிறுகுடிக்கே. ௱௭௮

## தாய்குறிப்புணர்த்தல்

முறம்போற் றழைசெ விழும்மத வாரண முன்னஞ்செய்த
வறம்போல வந்தஞ்ச லஞ்சலென் றற்கென் னறிவழிந்து
நிறம்போ னதுகண்டு நேர்பண்டு போனம்மை நெய்தல்கொய்யப்
புறம்போமி னென்றன ளன்னைகொ லன்னைநம் பூங்கொடியே. ௱௭௯

---

*ஒன்றுமென்றும்பாடம்.

### ஒம்படைசாற்றல்.

ஆழுங் கணைகட லன்னநின் காதலு மாடன்மயில்
சூழும் புனமுந் தொலைந்தன வாயினுந் தூயமுதும்
யாழுங் குழலு மனையசொல் லாணின்னை யன்றியுயிர்
வாழுந் திறமல்ல னேமற வேலெம்மை மன்னவனே. ௱௮௰

### மேம்படவுரைத்தல்.

சுறவே குழையு மழைபொரு கூந்தலுஞ் சூழ்வளைத்தோ
ணிறவே யழகு செறியும் புருவமு நேரிடையு
மறவே வளர்தன பாரமு மல்கு லழகுஞ்செம்மை
மறவேல் விழியிணை யும்மற வேனொரு வைகலுமே. ௱௮௧

ஒருசார்பகற்குறிமுற்றும்.

---

## பகற்குறியிடையீடு.

### இறைவனைப்பாங்கிகுறிவரல்விலக்கல்.

உருமுங் கிரியு முடல்களி றுயிவ னுண்மெலியப்
பொருமுங் களபப் புணர்முலை நோக்கிப் புனத்திலிறை
யருமுங் களகம் வலிதென்று போயின னென்னையென்று
வருமென் றுணர்வரி தாலென்செய் வேமிவ் வரையிடத்தே. ௱௮௨

### இறைவியைக்குறிவரல்விலக்கல்.

காலையு நண்பக லுங்கதிர் போய்வரை காணுமந்தி
மாலையும் வந்துன் வனமுலை யேற்றமும் வண்டிமிர்பூஞ்
சோலையுந் தண்டுறை யுங்குறை யரவஞ் சுருதியையும்
பாலையு மன்னசொல் லாயென்னை யோவன்னை பார்க்கின்றதே. ௱௮௩

### இறைமகளாடிடநோக்கியழுங்கல்.

சினவெங் குறவர்பின் செல்லரும் பாவியைத் திண்சிலம்பர்
வினவும் பொழுதென் விளம்புங்கொல் லோவினை யாடுநெவ்வி
வினமும் புனமு மிதணுமஞ் சார விருவியுமை
வனமுஞ் சுனையும் வளையுமச் தாரமு மவ்வலுமே, ௱௮௪

## பாங்கியிறைவியையாடிடம் விடுத்துக்கொண்டகறல்.

கொய்கின்ற வேனலுங் கொய்யா கறங்கு வளைச்சுனையுஞ்
செய்குன்று மூசலுஞ் சிற்றிலும் பார்த்துத் திகைத்துயிர்த்து
கைகின்ற வாவியுந் தாமுமென் றுவர்கொ ணன்பர்கொண்டல்
பெய்கின்ற சாரலுஞ் சீறா ரிதுவெனப் பெற்றிலமே. ௱அ௫

## செறிப்படவவனுற்றிரங்கல.

அழியு மிரும்புன மும்மழி யாமணை லாழிதொட்ட
சுழியு மறிந்தவ் விதணமும் பார்த்துத் துணை விழிநீர்
பொழிய விருந்து புலம்புமென் றுவியும் பாவியெம்மால்
வழியு மறிந்திங்ங னேவந்த வாவென் மழைவள்ளலே. ௱அ௬

## புனத்திடைசென்றான்மனைத்திடைபுலம்பல்.

கானே குழல்வல்லி காவற் புனமுன்பு கண்டறியா
மானே திரிய வகுத்தது வேமழை வந்துறங்குந்
தேனே மலர்பொழில் வந்தென்னை வாழ்வித்த தெய்வமின்று
தானே செயிலென்செய் வேனிடை யூறு தனிநெஞ்சமே. ௱அ௭

## வருங்களனுடிமறுகல்.

தேய்கின்ற திங்கட் டிருநுத லாரொர் செயலின்றியே
வீய்கின்ற பாவிக்கு வெறென்சொ ஞருங்கண் மெய்த்தவத்தா
லாய்கின்ற வேல னணிமயில் காளிங் கழியவிட்டுப்
போகின்ற போது வருகின்ற நீர்கண் பொருமநின்றே. ௱அ௮

## குறுந்தொடிவாழூர்நோக்கிமதிமயங்கல்.

மாறார் வளைய வளைக்குஞ் சிலைக்கை மலைக்குறவர்
சீறா ரதுசென்ற தேனுமெங்கே செய லேதினிவன்
பாறார் கடலைப் பருகுசெந் தியெனப் பற்றிவெந்து
நீறா மேனியென் னெஞ்சுரு மன்பி னிலையிதுவே. ௱அ௯

பகற்குறியிடையீடு முற்றும்.

# இரவுக்குறி.

## இறையோனிருட்குறிவேண்டல்.

அரியா மதகரி வேட்டையி னீடி யசைந்தனம்யாஞ்
சரியா வருவரை சார்ந்தது பானுவுஞ் சாரலெங்கும்
பிரியா மழைமுகிற் கூண்டிருள் மூண்ட தியங்கவினித்
தெரியாது மங்கைநல் லீருங்கண் மால்வரைச் சேணெறியே. ௱௯௰

## பாங்கிநெறியினதருமைசாற்றல்.

முரியுஞ் சிலைநுதல் வல்லிமுத் தேந்தி முறுகிவம்பு
வரியுங் களப வனமுலை வேட்டு மயங்கிவருங்
கரியுங் கொடுவரி யுங்கானி யாறுங் கடந்துவெய்ய
வரியு மரவுமெண் ணாதைய நீவர லஞ்சுவதே. ௱௯௧

## இறையோனெறியினதெளிமைகூறல்.

வரவிங் கரிதன்று நும்மலைச் சாரல் வழியெமக்குக்
குரவஞ் செறிகுழற் கொம்பனை யாய்வெங் கொடுவரியு
மிரவுத் தனியு மிகவுரு மேறு மிறைஞ்சுமெண்கு
மரவுங் களிறுமஞ் சேனஞ்சு வேனுங்க ளன்பினுக்கே. ௱௯௨

## பாங்கியவனாட்டணியியல்வினாதல்.

கொன்னார் விழிதுயில் கூர்ங்கொடுங் கங்குற் குறிவிரும்பு
மின்னார் வடிநெடு வேலண்ண லேசொல் விலையறியாப்
பொன்னார் வனமுலை பூசுந்தண் சாந்தமும் பூந்தொடையும்
நின்னார் வரையிளை யார்விளை யாடுநென் னீழலுமே. ௱௯௩

## தன்னாட்டணியியல்பாங்கிசாற்றல்.

நிரையார் மலர்க்குழல் வல்லியெம் மூரணி நிற்கநும்மூர்
வரையா ரணிபவு மன்னுநன் னீழலு மற்றிங்கென்னை
யுரையா யெனிலின் றுயர்மலைநாட வுரைசெய்வல்யான்
விரையா ரமுமென் குவளையுங் காந்தளும் வேங்கையுமே. ௱௯௪

## இறைவிக்கிறையோன்குறையறிவுறுத்தல்.

செஞ்சே லனைய விழிமட வாய்வெண் டிரைநுகர்ந்து
மஞ்சே தவழு மணிவரைச் சாரலில் வாளரவு
நஞ்சே யுமிழினும் வெஞ்சூ ரணங்கினு நள்ளிருளில்
அஞ்சேன் வருவனென் றுரன்செய் வேனைய ரன்பினுக்கே. ௱௯௫

## தலைவிநொந்துநெஞ்சொடுகிளத்தல்.

பொருமாறு கொண்டு புகர்முக மாவும் புலியுமச்சந்
தருமா றுருமுறுங் கானங் கடந்து தமியன்முன்னே
யுருமாறி வந்துவெஞ் சூரர மாத ருலவுங்கங்குல்
வருமா றிசைந்தன மோமன மேயந்த வள்ளலையே. ௱௯௬

## இரவிற்குறியேற்பித்தல்.

தளவந் தருநகை யாய்நதி வாய்ந்தவத் தண்டுறைவ
ரிளவண்டன் மேவு மிருங்களிக் கான விளம்பெடையைக்
களவனம் புல்லி யொளித்துற வாடுங் களவுகண்டா
ரளவின் றியதுயர் கூர்ந்தகன் றார்நெஞ் சறிகிலமே. ௱௯௭

## தலைவியிரவுக்குநேர்தல்.

குருகைக் கழிக்கப் பறிக்குநங் கோடெனக் கோளரிகண்
டொருகைக் களிறஞ்சி யொல்குந்தண் சார லுயிரனையா
யிருகைக் களிறு தனிநெறியே நள் ளிரவுநம்பால்
வருகைக் கிசைந்தனை யோயினி நானென் மறப்பதுவே. ௱௯௮

## நேர்ந்தமைபாங்கிநெடுந்தகைக்குரைத்தல்.

திருந்திய வாறு திருமுகன் வள்ளி திருமுகம்பெற்
றருந்திய வாறனக் கன்புடன் கூட வருவினையேன்
வருந்திய வாறும் வருந்திய வென்சொல் மறுதுவஞ்சி
பொருந்திய வாறும் புகலவொ ணாநம் புரவலனே. ௱௯௯

## குறியிடைநிறீஇத்தாய்துயிலறிதல்.

சீதஞ்செய் திங்கட் டிருமுகத் தாய்நஞ் செழுஞ்சிலம்பின்
மாதங்க மொன்று மழைமதம் பட்டுநம் மல்லிகைவெண்
போதொன்று பந்தருங் கற்பக வூசலும் பொற்பழித்துச்
சூதஞ் சரபுன்னை சூழ்நறுங் காவுந் துலைக்கின்றதே. ௨௱

## குறியெதிர்கோடல்.

வீழ்கின்ற தண்புனல் வெள்ளத்து நள்ளிருண் மேவிமங்குல்
சூழ்கின்ற குன்றச் சரம்வர வாய்த் துங்கண் டெஞ்சமறந்
தாழ்கின்ற துன்ப மருந்துய ரக வருவினையேன்
வாழ்கின்ற வில்ல மறிந்தெவ் வாறென் மழைவள்ளலே, ௨௱௧

## தலைமகன் வரவறிவுறுத்தல்.

கொன்னே யரவு முருமுந் தருமிருள் கூர்கங்குல்வாய்
மின்னே சுடர்வடி வேல்விளக் காகநம் வேட்கையினு
லென்னே தமியர் வந்தெய்தினர் போலு மெழுதரிய
பொன்னே திருமனை யின்புறஞ் சார்புட் புலம்பினவே. ௨௱௨

## குறியிடங்கொண்டுசேரல்.

வல்லிக் கொடியிடை வாட்டிய மேரு வரையிரண்டு
புல்லிப் பொருந்தின பூண்முலை யாயுடன் போதுதியோ
வல்லிக் குவளை யகன்சுனை நீரி லரும்பவிழ்த்துக்
கொல்லிச் சுரும்பறை மல்லிகை நாண்மலர் கொய்வதற்கே. ௨௱௩

## குறியிடத்துய்த்துநீங்கல்.

கொத்தார் நறுமலர் கொய்துவல் லேவரு மெல்லையினி
வித்தா ருவினிழ லெமபெரு மாட்டி யெழுந்தருள
மைத்தார் பொழிலின வண்டொரு கோடி மழைக்குழலின்
மொய்த்தா லரிய மருங்குலெங் கேயிம் முலைமலைக்கே. ௨௱௪

## இறைவியிறையோனிடத்தெதிர்ப்படுதல்.

வரவிந்த மன்ன வளர்தன பாரமு மவ்வலுடன்
குரவர் தயங்கிருட் கொந்தள பாரமுங் கொண்டிங்ஙனே
யிரவந்த மால்வரை வந்தென்னை யாளு மிதுநினைந்தோ
வரவிந்த மாளிகை நீர்பக லேவிட் டகன்றதுவே. ௨௱௫

## பெருமகளாற்றின தருமைநினைந்திரங்கல்.

கன்னாக மீது கணமழை தூங்கிருங் கங்குலுன்றன்
மின்னாக வெங்கதிர் வேல்வல னேந்தி விடஞ்சொரியும்
பன்னாக மும்மதம் பாய்நாக மும்பயி லுஞ்சுரத்தி
லென்னாக மென்செய்ய வோவிறை வாவின்றிங் கெய்தியதே. ௨௱௬

## புரவலன்றேற்றல்.

மேகஞ் சிறந்த குழனிழ லோடிய வேனெடுங்கண்
மாகஞ் சிறந்த மதிநுத லாய்மல்கு மல்குலுக்கு
மாகஞ் சிறந்த முலைக்குமுன் றோற்ற வடலெயிற்று
நாகங்க ளென்னை நலிவுசெய் யாதுங்க ளன்பனென்றே. ௨௱௭

### புணர்ச்சியின்மகிழ்தல்.

அரியார் மதர்விழி யாலமன் னீர்சொல் லமுதமன்னீர்
புரியார் தளையவிழ் பூமலர்க் காவிற் புணர்ந்திங்ஙனே
தரியாத வன்புந் தயங்குந் தகையிர வும்பகலும்
பிரியாம லிங்கெவற் குந்தெரி யாவிஞ்சை பெற்றிலமே. ௨௱௮

### இறைவியையில்வயின்விடுத்தல்.

பங்கே ருகமலர்ப் பாயலை நோக்கியப் பாற்கடலின்
றெங்கே திருவென் றிரங்குமுன் னேயிசை வண்டினஞ்சூழ்
கொங்கேர் மலர்க்குழற் கொவ்வைச்செவ் வாய்மென் கொடிமருங்குற்
செங்கேழ் விழியன்ன மேதிரு மாளிகை சேர்ந்தருளே. ௨௱௯

### களவுமகிழ்ந்துரைத்தல்.

அரவந் தருமணி நூபுரத் தாமரை யன்னங்கற்ற
கரவிங் கெவருழை கண்டறி வோங்கள்வ ருந்துயில்கூ
ரிரவும் பகலு மெமக்குந் தமக்கு மிசையகலம்
பரவும் பணிமதி யின்பண்பை யார்முகப் பங்கயமே. ௨௱௰

### பாங்கிகையுறைகாட்டல்.

செஞ்சேல் பொருகுழை சேர்க்குங் குவளையுந் தேனிரங்கு
மஞ்சேர் குழற்கணி மவ்வலுங் கொய்திவண் வந்தனன்மு
னஞ்சே லரிவையஞ் சேலடி யேன்விட் டகன்றதற்கு
நெஞ்சேது பட்டது நீயேது பின்னை நினைந்தனையே. ௨௱௰௧

### இற்கொண்டேகல்.

புழற்கா லனகு வளைச்செவிப் போதும் புயலைவென்ற
குழற்கான மவ்வலுங் கொய்தனம் யாமிற் கொடியவன்னை
யழற்கால் விழித்துயி னீத்துணை ராமுன் னடைகுவம்யாங்
கழற்கான் மதன்கணை போல்விழி யாய்நங் கடிமனைக்கே. ௨௱௰௨

### இரவுநீடப்பருவரல்கூறல்.

விரியுங் கடலுல கெல்லா முறங்க விழியடையா
தெரியுஞ் சுடர்துணை யாயிருந் தாளுக் கிடித்திடித்துச்
சொரியும் புயலுந் துளங்கிய மின்னொடு தூங்கிருளுந்
திரியுங் குறுந்துளி சிந்தின வாடையுஞ் சீரிதன்றே. ௨௱௰௩

## இறைவனைவரவுவிலக்கல்.

கலவஞ் செறிமயி லன்னமென் காரிகை காரணமா
விலகுஞ் சுடர்வடி வேலிறை நீவரி னிவ்விரவு
சிலைபைங் கழைமுத்த முந்துந்தி நாகச் சிகாமணியு
நிலவும் வெயிலு மெரிக்குமென் சார னெடுவரையே. உ௱௬௪

## கூகையைநோக்கிக்கூறல்.

கூருகிற் பைங்கண் வளைவாய்க் குருகிளங் கூகையங்ங
னூருயிர்க் குந்துயர் பாணு ளிரவி னொருதனியே
னாருயிர்க் கேழ்வர்க் ககன்றனை வாய்ச்சொல்லு மாங்கசனி
நேருயிர்க் குங்குரல் காட்டவெஞ் சூட்டெலி நேர்குவனே. உ௱௬௫

## பெருமகன்மயங்கல்.

முதுவான் மதியை மழவுகை காட்டி மொழிந்திரங்கு
மதுவா நினையி லனையவென் காத லளியினஞ்சூழ்
மதுவார் மலர்மென் குழல்வல்லி நீசொன்ன மாற்றங்கேட்டே
னிதுவா மெனிலவ் வனையெது வாமிங் கியம்புவதே. உ௱௬௬

## நின்பதியடைந்தமைநீநிகழ்த்தென்றல்.

இடிக்கொத் துறமு மிலங்கெயிற் றாளி யிபங்கரும்பை
யொடிக் கத்திரியு முழுவையஞ் சாரலி லோர்தனியே
வடிக்கட் சுடர்வடி வேன்மன்ன நீசெல் வழிக்கிரங்குங்
கொடிக்குப் படர்கொம்பு கூறுநின் சாரற் குறித்தகொம்பே. உ௱௬௭

## தலைமகளாங்குநினைந்திரங்கல்.

பறியிடை யென்னைப் புயற்றுளி தூங்கப் படிப்புறத்துச்
செறியிடை யாமத் தொருதனி வேல்கொண்டு தீவினையேன்
குறியிடை வந்தகன் றார்கொலை வேழக் குழாந்திரியு
நெறியிடை யூறன்றி யேசெலு வார்தந் நெடுநகர்க்கே. உ௱௬௮

## இரவுக்குறி முற்றும்.

# இரவுக்குறியிடையீடு.

## இறைவிக்கிருளையிறைவரவுணர்த்தல்.

நீருங் கனலு நிமிர்கடுங் காலு நெடுவிசும்பும்
பாருந் துயில்கொண்ட பானா ளிரவும் பரவையம்பும்
வாரும் புலவுறு நாற்றமு மாற்ற யலர்ந்தபுன்னை
சேருங் குருகினஞ் சேக்கைகொள் ளாது சிலம்பினவே. ௨௱௰௯

## தான்குறிமாண்டமை தலைவியவட்குரைத்தல்.

புள்ளும் புனலும் புலம்பிய வோசை புணர்குறியென்
றுள்ளம் பொதிந்த வுவகையு நாணு மொலியடங்கி
நள்ளென்ற கங்கு னறுமலர்ச் சோலையி னண்ணிநிற்பக்
கள்ளஞ் சிறிதுள வோகலந் தார்வரக் காண்கிலமே. ௨௱௨௰

## குறிபிழைத்தழுங்கல்.

குழிவந்த பைங்கண்வெங் கூர்வாய்க் குடிஞை கொடுங்குற்றநின்
றழிவந்த நெஞ்ச மருவினை யேனு மலர்க்குறியின்
வழிவந்து நின்று மயங்கிருள் வாயுற்ற யம்மொல்லாங்
கழிவந் தனநெய்தல் காள்கைதை காள்சொல்லுங் காதலர்க்கே. ௨௱௨௰௧

## பாங்கிதலைவன்றீங்கெடுத்தியம்பல்.

ஆடும் படவர வல்குன்மின் னேயவ ரன்புதுன்ப
நீடும் பரிசு நிகழ்ந்தது வேநெஞ்ச நீடுயிர்த்து
வாடுங் குறியின்றி மன்றலஞ் சோலையில் வந்துநம்மைக்
கூடுங் குறியல்ல வேகுறித் தாரின்று கொற்றவரோ. ௨௱௨௰௨

## புலந்தவன்போதல்.

நம்போ லெளியவ ரில்லைநெஞ் சேயிந்த நானிலத்து
வம்போட வென்ற வனமுலை மாதர்க்கு மாளிகையின்
றம்போ ருகமென் றறிந்தும்வம் பேயென்னை நீயலைத்து
வெம்போ தகந்திரி கங்குலென் னோவிங்கு மேவியதே. ௨௱௨௰௩

## புலர்ந்தபின்வறுங்களந்தலைவிகண்டிரங்கல்.

யாமம் புணர்குறி வந்துநின் றேனிலு மிங்கிவர்தங்
தாமம் புனையத் தவஞ்செய்த வாபைந் தடஞ்சுனையிற்
றேமென் குவளையுங் கோடலு நாறுஞ் செழுஞ்சிலம்பிற்
பூமென் குரவு சுரபுன்னை சூழும் புனக்கன்னியே. ௨௱௨௰௪

## தலைவிதன்றுணைக்குரைத்தல்.

வரலிங் கரிய மயங்கிருள் யாமத்துள் வந்திளவேய்
நரலுஞ் சிலம்பர் நவமணி யாழி நறவுண்வண்டு
முரலுந் தளையவிழ் மொய்ம்மலர்க் காந்தளஞ் செம்மலர்க்கை
விரலென்று கொல்செறித் தார்நெறித் தாழ்குழன் மெல்லியலே. ௨௱௨௫

## தலைமகளவலம்பாங்கிதணித்தல்.

அடுங்கால வேலை யனையகண் ணீர்வர வாவிநைந்து
நடுங்கா தொழிமதி நன்னுத லாய்புன்னை நாறுசினைப்
படுங்கா யுதிர ப்பழனக் குருகு பதிகலங்கக்
கொடுங்கா லெறிந்தது நங்கா தலர்தங் குறியல்லவே. ௨௱௨௬

## இறைவன்மேற்பாங்கிகுறிபிழைப்பேற்றல்.

உழிபார்த் துடனுறை புள்ளினம் போமெல்லை யொன்றுஞ்சொல்லாக்
கழிபார்த் திரங்கு கருங்கடற் சேர்ப்ப கருத்துனக்கு
வழிபார்த் திருந்து வருந்துமெங் கானல் வரலொழிந்தீர்
பழிபார்த் துடனுறை பக்கமெங் கேசொல்லும் பாவியர்க்கே. ௨௱௨௭

## இறைவிமேலிறைவன்குறிபிழைப்பேற்றல்.

கடவா ரணந்திரி கங்குலி யானவர் தங்குறியை
விடவாள் விழிவஞ்சி துஞ்சிய வாறென் விளங்குமணிப்
படவா ளரவல்குற் பைந்தொடி யேயிப் படியகத்து
மடவா ரினுமுண்டு கொல்பண்டு போலன்றி வன்னெஞ்சரே. ௨௱௨௮

## அவள்குறிமருண்டமையவளவற்கியம்பல்.

அடுங்கா லெறியக் கடத்துய்க்கு மாவின் கனியையெல்லா
மொடுங்கா வரவல்கு லுன்குறி யாக வுளமகிழ்ந்து
நடுங்கா ரிருள்வந்து நாண்மலர்ச் சோலையி னண்ணியபி
னடுங்காய் களிற்றண்ண லேயெண்ணு மாறொ ரளவில்லையே. ௨௱௨௯

## தலைவன்மாற்றந்தலைவிக்குணர்த்தல்.

வருமந்த வெல்லையில் வல்லியென் றேவந்து வைகிருண்மாந்
துருமந் தருங்கனி யெல்லாந் தொலைத்துத் துணைபிரியா
வருமந்த வன்னங்கள் சேக்கைகொள் ளாம லழுங்குவித்துத்
தெருமந்து நின்றுவிட் டேனென்ப ராலன்பர் சேயிழையே. ௨௱௩௰

### தாழ்த்தற்குக்காரணங்கூறல்.

சடற்பாற் றாளஞ் சொரிபுன்னை நீழற் கருமணற்சோ
றடப்பார்த் திருந்தவர் சொல்லலுற் றாமை யாதவின்னல்
விடப்பார்த் திருந்து வெருவும்பைங் கானலில் வெண்ணிலவு
படப்பார்த் திருந்தல் லாணிற்ப ரோசொல்லு பைந்தொடியே. உ௱௬௧

### மதியைநோக்கிக்கூறல்.

அளியாற் பெருகி யமுதஞ் சிதறி யனைத்துயிர்க்குங்
களியாக் கியதண் கலைமதி யேகயற் கண்ணுமையு
மொளியாப் பசலைதந் தாருடன்கூடு மிடங்கண்முற்றும்
வெளியாக்கி யெம்மள வும்விட மாய்விட வேண்டியதே. உ௱௬உ

### என்பிழைப்பன்றென்றிறைவிநேர்தல்.

வடம்பரிக் குந்தன வல்லியன் றெய்வலை யேறியுழு
தடம்பரிக் குந்துறை யாழ்கடற் சேர்ப்பர்தம் மல்குறியின்
கடம்பரிக் குங்குறி யேகரி யாகக் கருத்துவைத்தாங்
குடம்பிருக் குஞ்சிறை யொன்றுமுள் ளாதென் றுரைத்தனரே. உ௱௬௩

### விருந்தெனவந்தபெருந்தகைதளர்நிலை.

கனையிருள் வந்து குறிபிழைத் தார்சிறு காலையினம்
மனையிடை வந்து வருந்தின னென்ன விருந்தென்றென்னைப்
புனையிழை நீசென்று போற்றுகென றன்னை போற்றுதற்குன்
னினைவறி யாதுநின் றேன கன் றாரவர் நீடுயிர்த்தே. உ௱௬௪

### வருந்தொழிற்கருமைசாற்றல்.

ஒருகா லமுமன்னை கண்ணுறங் காள்பின் னுறங்கிலன்பர்
வருகால ஞாளி மருளுமன் னேமரு ளாதொழியி
லிருகா லொருசிகை வாரண மேங்கு மிரவுமுற்று
முருகார் விழவின் முழவுந்துஞ் சாதிம் முதூரகரே. உ௱௬௫

### இதுவுமது.

ஒருவருமேவலர் காவல ராலொற்றை நீண்மரத்தில்
வெருவர நின்று குளறுங் குடிஞையும் வெம்பகல்போ
லருவரை யெங்கு நிலவெறி யாதிற்கு மன்பர்பின்னை
யிருவரை போன்முலை யாயெங்ங னேயிங்ங னெய்துவதே. உ௱௬௬

இரவுக்குறி யிடையீடு முற்றும்.

# வரைதல் வேட்கை.

## தலைமகளைப் பாங்கி பருவரல் வினவல்.

மீனறி யாத விரிகடல் போலும் விழிபசந்து
தூநெறி யார்குழற் போதுந் துறந்தனை தூங்கமலி
வானறி யாத மதிமுகத் தாயிற்றை வைகனின்ற
யானறி யாத வருத்தமென் னேவுனக் கெய்திபதே ௨௱௯௭

## பாங்கிக் கிறைவி பருமறை செப்பல்.

உண்ணின்ற வேட்கை யுணர்ந்தனள் போலனை யூர்துயின்றப்
பண்ணென்று சொல்லிதன் பாயல்கொள் ளாளென்ப் பைங்தொடியாய்
தண்ணந் துறைவனை யுந்திரு மார்பையுஞ் சாரலுற்றூர்
கண்ணுந் துயில்கொண்ட காலமுண் டேபண்டு கண்டதுவே. ௨௱௯௮

## அருமறை செவிலி யறிந்தமை கூறல்.

கொந்தார் மலர்க்குழல் வல்லிநம் மன்னை குரிசில்வந்த
செந்தா மரையடி கண்டனள் போலுமித் திண்சிலம்பில்
வந்தா ரெவரென வந்தார் சிலரிலர் மற்றிங்கென்றே
ணெந்தா ணெடிதுயிர்த் தாள்கொடி தாயென்னை நோக்கினளே. ௨௱௯௯

## தலைமகள் வருந்தொழிற் கருமைசாற்றல்.

அன்னையு மூரு மலைவாய் ஞமலியு மம்புலியுங்
கொன்னகர்க் காவற் றுடியுங் குடிஞையுங் கோழியுமென்
றின்னவை நங்கள விற்கிடை யூறிதற் கேற்பவந்த
மன்னவர் தாம்வரு நாளொரு நாளில்லை வாணுதலே. ௨௱௪௰

## தலைமகனூர்க்குச் செலவொருப்படுதல்.

மைக்கார் தவழு மலையக நாடர் வளநகர்க்கின்
றிக்கார் மொழிவஞ்சி யேகுது மோவெறி நீருலகின்
மிக்கா ரறிவு நிறையு நயந்து வியந்துரைக்கத்
தக்கார் தகவிது வோவென்று நாஞ்சென்று சாற்றுதற்கே. ௨௱௪௧

## எதிர்மறை.

உரிதோ லரவு முருமுறு மெண்குமுலா நெறிக்கண்
வரிதோ லுடன்பொரு வைகிருள் யாமத்து வண்சிலைக்கை
யெரிதோய் விழிபமர் காவலு நீந்தியிங் கேகுவதற்
கரிதோ வரிதென்னு மாறறி வாரில்லை யத்தனையே ௨௱௪௨

## பாங்கிதலைவனியற்பழித்தல்.

சுறவார் கனங்குழைத் தோகை யாய்தந் துணைவருட
னிறவார் குருகினந் தங்குபைங் காவினி லி[illegible]னிசூழ்
நறவார் மலர்ப்புன்னை நன்னிழல் வாய்முன் னயந்தசெல்வி
மறவார் நமைமறந் தாரவர் போலில்லை வன்னெஞ்சரே. ௨௱௬௩

## பாங்கியியற்படமொழிதல்.

ஆமைதன் பார்ப்பை யிகந்துயிர் காக்கு மருந்துறைவன்
றீமைநம் பாற்செயல் சிந்திக்கு மோசிந்தை போயழுந்த
மாமையும் பார்த்தவர் வாய்மையும் பார்த்து வருந்தல் மன்றற்
பூமணம் பார்த்தளி புல்லுமல் லார்குழற் பூங்கொடியே. ௨௱௬௪

## கனவுநலிபுரைத்தல்.

மின்னே யவர்தந்த வேட்கையை மீட்கும் விரகறிய
முன்னே தவங்கண் முயன்றில மேமுன்செய் வல்வினையா
லென்னே யருங்கவி னெல்லா மெனக்கு மவர்க்கு மின்றி
கொன்னே பசலை பசந்தவிவ் வாறு குறுகின்றதே. ௨௱௬௫

## கனவினழிபுரைத்தல்.

பெறுதற் கரிய துயிலொரு கால்வரப் பெற்றதன்மே
லுறுதற் கரியவ ரொன்றவும் பெற்றுள்ள நள்ளிரவிற்
செறுதற் கரியநற் செல்வங்கொண் டாடிய செற்றமுற்று
மிறுதற்கரிய நலங்கல வாம விழந்தனவே. ௨௱௬௬

## சிறைப்புறமாகத்தலைவியிரங்கல்.

உரவெங் கடலொலி யும்முறங் காவின்ற கண்களுநள்
ளிரவுந் தனியு மிருவினை யேனு மிரங்குநெஞ்ச
மரவந் தருந்துடி யுங்கொடி யார்தந்த வன்புமன்றிப்
பரவும் பனிமதி யேயில்லை யோவிப் பதிதனக்கே. ௨௱௬௭

## தன்றுயர்தலைவற்குணர்த்தல்வேண்டல்.

அறைவா ரொருவரை யாழ்கடற் சேர்ப்ப ரறியவந்தண்
பிறைவா ணுதல்வல்லி பெற்றில மேபிர சந்ததும்ப
நறைவாய் விடுநெய்தல் நாண்மல ரோதி யெந்து நின்னை
யிறைவா விறைவனை போயின ளாயின ளென்னநின்றே ௨௱௬௮

## அலர்பார்த் தாற்றவச்சக்கிளவி.

இன்றலங் கார மிழந்தவென் கொங்கை யிலங்குபைம்பொன்
றென்றலஞ் சாரற் சிலம்பரெண் ணார்செஞ் சிறைவண்டுசூழ்
மன்றலங் காவினும் வாவிநன் னீரினு மற்றுமுற்று
மொன்றினும் பூத்தரி யாவல ரானதிவ் வூரெங்குமே ௨௱௪௯

## நிலவின்மேல்வைத்துச்சொல்லியது.

கங்குற் சிறந்த பகலொளி வாடநின் காதலரு
மெங்கட் கிசைந்த விறைவர்கொல் லோவிமை யோரெவருந்
துங்கக் கொடுமுடி மந்தர நாகந் தொடுத்துழல
வங்கப் புணரி கடைந்தவந் நாள்வந்த வான்மதியே. ௨௱௫௰

## ஆறுபார்த் தாற்றவச்சக்கிளவி.

வேறிங் கொருதுணை யில்லைகொல் வேலொழிந் தின்றிவெற்ப
மாறுங் கொடிபொருட் டால்வர வேண்டிலம் வந்துழைவை
சீறுங் களிற்றுத் திரளும்பன் மாவுஞ் சினவரவு
மாறுங் கராமு மியங்குதண் சார லருநெறியே. ௨௱௫௧

## நெறிவிலக்குவித்தல்.

ஒருநாள் வரினு முறுபழி தூற்று முயர்சிலம்பில்
வருநாள் பலவுண்டு மாமலை நாட வரநினையும்
பெருநா ளொழிய வினிவரி லேதம் பிறக்குமென்று
குருநாண் மலர்க்குழ லாய்மொழி நீசென்று கொற்றவர்க்கே. ௨௱௫௨

## குறிவிலக்குவித்தல்.

இருவி மருகுலை யீன்று விளைந்த விறைஞ்சுகுற்றங்
குருவி யினக்கிளி கொய்கின்ற தாலின்னங் கோல்வளையீர்
மருவி யடிப்புனங் காமினென் றுளன்னை வந்திழியு
மருவி யடுக்கன் மலையக நாட ரறிந்திலரோ, ௨௱௫௩

## வெறிவிலக்குவித்தல்.

மணிபார் வளைமுலை மங்கைநல் லீர்தொல்லை மாமரபு
துணிபா வெறிக்குந் துணிந்தன ளன்னை துணிவெறிக்கின்
றணிபார் சிமயத் தலைச்சிலம் பாள ரளித்தமைய
றணிபா தெனினுந் தணிபினுஞ் சாலத்தவறெமக்கே. ௨௱௫௪

### பிறவிலக்குவித்தல்.

வார்க்குன் றனமுலை வல்லியன் ஞாய்நம் மணிமறுகி
லார்க்கின்ற வன்முர சார்க்கென் றறிகில மாடகப்பொன்
போர்க்கின்ற மென்முலை புல்லவெண் ணார்பொன் பொழியருவிக்
கார்க்குன் றெனவெதி ருங்கட வாரணங் காய்ந்தவரே ௨௱௫௫

### செய்நன்றியறியாமைகூறல்.

கழுது முறங்கு பிறங்கிரு ளுள்களிக் கானலிற்றைப்
பொழுது மருந்துயர் போக்கிய தோபொறி வண்டினங்கள்
கொழுது மலர்க்குழற் கொம்புநற் பைம்பொற் குழைபொருங்கண்
ணழுது பசப்புற நீயைய னேயின் றகன்றதுவே. ௨௱௫௬

### ஏறுதழுவுரைத்தல்.

*ஏற்றும ருப்பு மிலங்கிழை யாகத் திபமருப்புங்
கூற்று மருப்பெழுங் கோலந்தந் தாட்கொரு கோடிசரும்
பாற்று மருப்பொலி தாரண்ண லார்முன் னணிந்துவிட்டார்
காற்று நெருப்புங் கலந்ததென் றவருங் காரிகைக்கே. ௨௱௫௭

### குரவரைவரைவெதிர்கொள்ளுவித்தல்.

போற்றுந் தினைவிளை யும்புனச் சாரற் புகர்முகத்துச்
சீற்றஞ் சிறந்த களிற்றுரு வாய்நம்மைத் தேடிவந்த
கூற்றங் கடிந்தநங் கோமான் வரைவெதிர் கொள்ளும்வண்ணஞ்
சாற்றுந் திறமென்கொ லோதைய லாய்நந் தமர்தமக்கே. ௨௱௫௮

வரைதல் வேட்கை முற்றும்.

---

## வரைவுகடாதல்.

### வினவியசெவிலிக்குமறைத்தமைவிளம்பல்.

மைந்நிற வார்குழல் வல்லிநம் மன்னை வனமுலைக
ளின்னிற மானதிங் கென்கொலென் றுளிருங்கோங்கரும்பின்
சென்னிற நாண்மலர்ச் செப்பருந் தாது கொண்டப்பியபின்
பொன்னிற மானதென் றேனன்ன தோவென்று போயினளே ௨௱௫௯

---

*இப்பாடலுக்கு மூன்று பிரதிகளிலும் பாடபேதமில்லை.

### அருமறையெங்குமறிந்தமைகூறல்.

கணைக்குங் கரும்புங் கழையுநன் ஞாகங்கதலியுட
னணைக்குங் கறங்கு மருவிவெற் பாநின் னருமறைபோ
யிணைக்குங் குரும்பையுஞ் செவ்விள நீரு மெனநெருங்கிப்
பணைக்கின்ற கொங்கைப் பசப்பினுஞ் சாலப் பரந்ததுவே. ௨௱௬௰

### தாயறிவுணர்த்தல்.

சோகா கலஞ்சுட வெந்தொளி மாழ்குந் துணைமுலையி
*லேகா வலியையு மென்னையு நோக்கி யினியகன்னற்
பாகார் மொழிவஞ்சி பண்டுநங் கையிற் பயின்றவண்டின்
றுகாத தென்கொலென் றுளறிந் தாள்கொனம் மன்னையுமே. ௨௱௬௧

### வெறியச்சுறுத்தல்.

முன்றிலு மன்னை மருங்கிலு மேயன்றி முன்னறியாக்
குன்றி லருங்குலக் கொம்பனை யான்குல வாணுதலின்
மன்ற லரிந்த மறியின் குருதியின் மண்ணுமள்ளிச்
சென்றொரு வேலர்கை தீண்டவென் செய்தது தீவினையே. ௨௱௬௨

### பிறர்வரைவுணர்த்தல்.

இதுமலர் செம்பொ னிதுமணி முத்த மிவையிவை நம்
மதுமலர் வல்லிக்கு வந்தன வென்று வரைபயந்த
கொதுமல ருக்கு நுடங்கிடை யாளில் விடங்கிடையா
ததுமல ரங்கதிர் வேலண்ண லேயிங் கறிந்திலையே. ௨௱௬௩

### வரைவெதிர்வுணர்த்தல்.

இனத்துக்கு மேய்ந்த வறிவுக்கும் வாய்ந்த விளங்கொடிபொற்
றனத்துக்கு மேற்பத் தருநினை வாரொமர் தாழருவிப்
புனத்துக் கலவ மயில்கணின் றாலும் பொருப்பவின்றென்
மனத்துக் கவலையு மற்றென்குற் றேவலும் வாய்த்ததின்றே. ௨௱௬௪

### வரையுநாளுணர்த்தல்.

களிதங்கு தோகைக் கணநட மாடக் கறங்கருவி
யளிதங்கு சோலை யருவரை நாட வணிபைங்கிள்ளை
விளிதங்கு தண்புன வேங்கையும் பூத்தது விண்ணிடைநின்
றொளிதங்கு திங்களு நீர்கொண்ட கேண்மையு மூர்கொண்டதே. ௨௱௬௫

---

*ஆவலி இடோகை.

## அறிவறிவுறுத்தல்.

தன்னையுந் தோழியுந் தோளினில் லாவரிச் சங்கையுங்கண்
டென்னையின் கோது முறுபழி நாணி யுளங்கிடந்த
தன்னையுஞ் சேரியு மாயத்து ளாரு மயலுமின்றி
யென்னையுங் கூடவெற் பாமறைத் தாளென் னிளங்கொடியே. உ௱கசுசு

## குறிபெயர்த்திடுதல்.

வாமா னுகளு மணிவரைச் சாரலில் யாம்வளர்த்த
பூமா தவிர்து பூஞ்சிலம் பாபுல்ல நீநினையிற்
றேமாலை மென்குழ லாள்செறி யாவருஞ் சேணெறிக்க
ணீயாற வேறொரு நீழலுண் டாகி னினைந்தருளே. உ௱கசுஎ

## தாய்க்குத்தோழிகூறல்.

அற்புறஞ் செல்ல விரிசுட ரொஞ்சினு மஞ்சும்வஞ்சி
யிற்புறஞ் சென்றன ளென்றறி யேனிரு கால்வளைந்த
விற்புறஞ் சூழெயின் மேவிவிட் டாளென்கை நீளருவிக்
கற்புறஞ் சூழணங் கோகன வோவன்னை கண்டதுவே. உ௱கசுஅ

## பகல்வருவானையிரவுவருகென்றல்.

மதிகண் டலருங் குமுதத்தை நோக்கி வரிநெடுங்கண்
குதிகொண்ட நீரிற் கொழுங்கயல் போன்றன கூற்றமன்ன
நுதிகொண்ட வேற்படை யாயிடை யாகி நுடங்குமின்னிற்
பதிகொண்ட கச்சணி பச்சிள நீர்மென் பணிமொழிக்கே. உ௱கசுக

## இரவுவருவானைப்பகல்வருகென்றல்.

பேணத் தகுந்தன் கொழுநனைப் பேணப்பெரும்பகலே
காணத் தவஞ்செய்த கஞ்சமெனறே யென்றுங் கையறவு
பூணத் தயங்கும் பொலங்குழை மாது புலம்பிநின்றாள்
யாணர்த் தடஞ்சிலம் பாவென்கொ லோவிதற் கெண்ணுவதே. உ௱எ௰

## பகலினுமிரவினும்பயின்றுவருகென்றல்.

கங்குற் றலைநின்ற திங்களுங் காலைக் கமலமுநின்
றங்கப் புயத்தை வெறுப்பவந் தாலென் சொரிமதத்து
வெங்கைக் களிற்றின் மருப்பைப் பறித்தநின் வொருந்துஞ்
சிங்கத் தடவரு விச்சிலம் பாவின்று சேர்கின்றதே. உ௱எக

## பகலினுமிரவினுமகலிவனென்றல்.

இரவிற் பகல்பெரி தென்னுமன் னேயிவ் விரவுவந்து
விரவிற் பகலின் மிகனெடி தென்னும் வெகுண்டெழுந்த
வரவிற் படமன்ன வல்குலென் னுவியன் னுளுக்கென்ன
ளுரவுக் களிற்றண்ண லேயிரு போதுமிங் கொப்பதுவே. ௨௱௭௨

## தலைவன்மரபுகூறிவரைவுகடாதல்.

உரவெங் களிற்றண்ண லொண்புன னுடல் லூருமுயர்
மரபும் புகழு மறையன்ன வாய்மையும் வையமெல்லாம்
பரவுங் குலனும் பழுதுப டாமலிப் பைந்தொடியா
ளரவந் தருமல ருக்கமுங் காம லளித்தருளே. ௨௱௭௩

## காவன்மிகவுரைத்தல்.

இலவுங் கவிரு மனையசெவ் வாய்வஞ்சி யென்செயுமின்
குலவுஞ் சுடர்வடி வேற்கொற்ற வாகொண்ட காதலென்ன
நிலவும் பகலன்ன நின்றெரி யாநிற்கு நீண்மறுகி
லுலவுங் கடுந்துடி யூர்கா வலரு முறங்கலரோ. ௨௱௭௪

## காமமிகவுரைத்தல்.

உடனு லியநின் னுளமறி யாதல்ல வோலமுந்நீர்
விடனுண் சுடர்விடு வேலண்ண லேவெய்ய கால்புடைப்ப
மடனு ணிதிநின்ற வங்கங் கவிழ்ந்து மலிந்தவற்புக்
கடனுண் மலர்க்குழ லாளழுந் தாநின்ற கையறவே. ௨௱௭௫

## கனவினலிவுரைத்தல்.

அரவுங் களிறு மணங்குங் குலாநெறி யன்புடனீர்
வரவுங் குறியிடை வந்தெதிர் புல்லவும் வல்லிநலம்
பரவும் பணிமொழி யுள்ளம் பகரவும் பாயலிடை
விரவுங் கனவை நனவென்று காவி விழித்தனளே. ௨௱௭௬

## கனவினழிவுரைத்தல்

மருமந்த மாருதம் வண்டமிழ் நாறு மலயவெற்பா
தெருமந்த வஞ்சித் திருவனை யார்திரு மார்பகலம்
பொருமந்த மென்முலை புல்லப் பெறாது பொன் போர்த்ததுபோ
லருமந்த வண்ணமெல் லாமவ மேயின் றழிகின்றதே. ௨௱௭௭

### தலைமகள்சிறைப்புறமாகத்தோழிசொல்லியது.

பாவுங் குரிசில் பகல்வரி னூர்பழி தூற்றுங்கங்கு
லரவுங் குயவரி யுக்கிரி யாநிற்கு மாயிழையும்
விரவுங் கரையழி வேட்கை பொருதுயிர் வீயுமென்னில்
வரவுந் தவிரவு நான்சொல்லு மாறென் மடநெஞ்சமே. உ௱எஅ

வரைவுகடாதன்முற்றும்.

---

## ஒருவழித்தணத்தல்.

### தன்பதிக்ககற்சிதலைவன்சாற்றல்.

ஓடிக்குங் கரும்பி னுடைக்குலந் தோன்றுமெம் மூர்வயிற்போய்
முடிக்குங் குறையுண்டு நீயிசைந் தான்முழு முத்தணியுங்
கொடிக்குங் குமமுலை வல்லிக்கு நீயிது கூறவென்று
வடிக்கின்ற வேல்விழி யாய்வரு வேனிற்றை வைகல்சென்றே. உ௱எகூ

### பாங்கியிலக்கல்.

அறையுங் கடலன்ன வன்பினெம் மாவி யினும்பிரியக்
குறையிங் குமக்கு முடிப்பதுண் டேகொண்ட காதலுட
னுறையும் பதிக்க ணொருப்பட்ட போதின்றெ னுள்ளஞ்செல்ல
விறையுந் தவிர்க்ககில் லேனெம்பி ரானின் றெழுந்தருளே. உ௱அ௰

### தலைவனீங்கல்வேண்டல்.

உள்ளந் தடைப்ப வினையே யெனையிங் குறைபதிக்குத்
தள்ளும் பரிசு தலைக்கொண்ட தாற்றணந் தாலும்வந்து
வெள்ளஞ் சுரும்பு விரும்புபைங் கோதை விளங்கிழையாய்
நள்ளன் பகல்வரு வேநடுங் காமெய் நடுங்கலையே. உ௱அக

### பாங்கிவிடுத்தல்.

உமையா டலைவனை யொன்றிய வாறிவ ளுன்னையன்றி
யமையா நிலைமை யறிந்தனை யேயைய லேபுயலின்
சுமையார் தடம்பொழில் சூழும்வெற் பாநின் றுணிவையெய்தி
யெமையாள வெண்ணினை யேவின்று நாளை யெழுந்தருளே. உ௱அஉ

### புரவலன்பிரிவுநிலையுரைத்தல்.

இருகாலு மில்லை வலவனுக் கேறு மெழுபரித்தேர்க்
கொருகா லொழிய யொருகாலுமிங் கில்லை யொண்சிலம்ப
குருகாலும் வாரிதி யேழுமெண் குன்றமுஞ் சூழ்ந்திரவி
வருகால மென்றுகொ லன்றுகொ ணீயும் வருவதுவே. உ௱௮௫

### பாங்கிதலைவிக்கவன்செலவுணர்த்தல்

கருநாண் மலர்க்குழற் காரிகை யாயொரு காரணத்தா
லொருநா ளுனைவிட் டுறையவும் வேண்டின ரொன்றியநின்
பெருநாண் மடமை பிணிக்கப் பிணிப்புண்ட பேறறிவின்
வருநாண் மலர்த்தொங்கன் மன்னவொன் ளேதம் வயமொழித்தே. உ௱௮௬

### தலைவியாற்றாமைகூறல்.

ஒருநாட் பிரிய நினைந்தவர் தம்மை யொழிந்தநம்மை
வருநாண் மறக்கவும் வல்லரன் றேமறப் பார்நினைவார்
செருநாண் மலர்க்கணைத் திண்சிலை வேள்வந்து சிந்துமெல்லை
யருநா ளுடனெங்ங னுவியு நாளுநின் றூற்றுவதே. உ௱௮௭

### பாங்கியாற்றுவித்தல்.

அருகுங் கலவி யளித்தகன் றூரரு ளின்மையெண்ணி
யுருகுந் தனிநெஞ்சு முண்மகிழ் கூரவந் தொண்மதியைப்
பொருபைங் கதலியும் பூகமுங் கன்னலும் பூவுங்கொண்டு
வருகின்ற தாலவ ரூர்மலி நீருந்தி வாணுதலே. உ௱௮௮

### நெஞ்சினினைந்திரங்கல்:

தேரூத வன்பினர் சென்றுழிச் சென்றவென் சிந்தைகண்டு
மாறூது கூட வரநின்ற தோயிங்கு வந்தென்னுள்ளம்
வேறூ யதுகண்டு மீண்டது வோவன்றி மாண்டதுவோ
வாறூத மையலுற் றேனறி யேன்வந் தடுத்ததுவே. உ௱௮௯

### காமமிக்ககழிபடர்கிளவி.

செங்கான் மடநடை யோதிமங் காளுங்கள் சேவலிருந்
தெங்கா தலரையின் றென்சொல்லு மோவென்ன நீருமதன்
பங்கா யிருந்து பரிந்துசொல் லீரும் பாவியென்றே
தங்காது போலிகொல் லோதரி யாதென் றனிநெஞ்சமே. உ௱௯௰

## தலைவிநெஞ்சொடுகிளத்தல்.

எயுங் கடலு மலையயி லூரிலு மென்னைவைத்துப்
போயங்கு நம்மை மறந்தவர் பாற்சென்று பூண்முலைமேற்
பாயுங் கணீரும் பசலையு மாய்நின்ற பாவிநெஞ்சே
நீயென்சொ னாய்மன் னவனொன்சொ னாருன் னினைவறிந்தே. ௨௱௮௯

## கடலொடுபுலத்தல்.

அவிகொண்ட வெங்கன லம்புகொண் டேயுன்னை யன்றடர்ப்புன்
கவிகொண்டு நின்னைக் கடந்தில னொன்றுகொல் கன்றினர்தம்
புவிகொண்டு வன்புகழ் போர்ப்பவர் தேர்வழி தூர்ப்பதுநீ
குவிகொண்ட லுண்டுமிழ் தொண்டிரை மோதுங் குறைகடலே. ௨௱௯௰

## ஆற்றொடுபுலம்பல்.

மறைவந்தென் மேனி மணந்துயிர் வாடத் தணந்தனனின்
னிறைவன் கொடுமை யியம்புத னணி யிரங்கிமெய்யை
நறையுந்து மாமலர்த் தூசான் மறைத்து நகர்ப்புறம்போ
நிறையுந்தி நீயென்செய் வாயிது வாயிலென் னீள்வினையே. ௨௱௯௧

## புள்ளோதிமத்தொடுபுலம்பல்.

எங்கா தலர்சொன்ன வென்னையிவ் வாறுகொண் டேகுமவர்
தங்கா தலரைத் தணந்தறி யார்கொல் தணந்துறையுஞ்
செங்கா னலோதி மங் காள்கருங் கானற் சிறையளிகா
ளுங்கா தலர்சொல்வி னீருடன் போமிக் குடம்பைவிட்டே. ௨௱௯௨

## குருகொடுபுலம்பல்.

சோரு முழுமடற் கைதையு நெய்தலுஞ் சூழ்துறைவற்
கேரு துணைப்பினு மேற்குங்கொ லோயிற்றை வாணிலவி
னீருமிவ் வஞ்சியு நெஞ்சுமென் றுவிந் நிலையவற்குக்
கூறு துறங்குவ திப்புறங் காவிற் குருகினமே. ௨௱௯௩

## கையறுகிளவி.

நன்றே யினியவர் நண்பு நமக்கு மவர்க்குமுயி
ரொன்றே நினைவு முனாயுமொன் றேயுயர் வெண்மணற்றிண்
குன்றே குலவன்ன மேகுரு கேநங் கொடிநெடுந்தே
ரன்றே வருவமென் றுரிருந் தேன்மெய் வருந்தியுமே. ௨௱௯௪

### கூடல்விழைத்தல்.

முளைக்கும் பிறையை முனியுந் திருநுதன் முத்தரும்ப
விளைக்கும் பசலை விழியிணை காட்ட விடாதவண்டர்
கிளைக்குந் தெரிவருங் கேதகை நீழலின் கீழிருந்து
வளைக்குஞ் சுழிக்கு மழிக்குமொண் கூடல் வளைக்கைகொண்டே. ௨௱௧௫

### கிளியைநோக்கிக்கூறல்.

தீட்டாத கூர்மைநின் செவ்வாய் கவருந் தினைக்குரல்கண்
டோட்டா திருந்த வுதவிக் குதவி யுயர்விசும்பிற்
பூட்டாத நன்னுதற் பொற்றொடி யார்புனங் காவலென்ன
மாட்டாய்கொல் பைங்கிளி யேவல்லை யேசென்று மன்னவற்கே. ௨௱௧௬

### சூளுறவுபொய்யென்றல்.

புறந்தாழ் விரிசினைப் புன்னையங் கானல்மென் பூந்துறைவர்
சிறந்தாழ் கருங்கடற் றெய்வமுந் தீதுகொல் சிந்தையென்னுண்
டிறந்தாவி சோர வவருற்ற நாளுற்ற சூண்முழுது
மறந்தா ரிருக்க மறவாத நம்மை வருத்தியதே. ௨௱௧௭

### மடமைகூறியது.

விடவா யரவை மிதித்துத் தவிர விலங்கன்றியே
நடவா விரவி னடந்தநங் காதலர் நம்மையினிக்
கடவா ரெனநினைந் தேனிங்ங ஞனதென் கண்ணுமெய்யு
மடவா ரறிவதுண் டோவுர வோர்செயும் வன்கண்மையே. ௨௱௧௮

### தலைவிதன்னுள்ளேசொல்லியது.

மாயக் கலவி மணந்தகன் றூர்திரு மார்பகலக்
தோயப் பெறாது சுடுகின்ற மேனி துறந்தவர்தா
மாயத்து நின்று வருந்திய வென்னை யணைத்தணைமேற்
சாயக் குளிருமின் றேயவர் சாரற் றளைப்படுத்தே. ௨௱௧௯

### தலைவிக்கவன்வரவுபாங்கிசாற்றல்.

சந்தார் வனமுலை தங்கும் பசப்புந் தனிமையுநின்
சிந்தா குலமு மழியும் படிசெஞ் சிறைவண்டுசூழ்
கொந்தா ரலங்கற் குழலணங் கேதங் குறைமுடித்து
வந்தார் விரைய மணிநெடுந் தேரினம் மன்னவரே. ௨௱௨௰

### வந்தவன் றன்னொடுநொந்துவினாதல்.

இங்கென் னிளங்கொடி யிங்ஙனம் வாடிநின் றேங்கவுநீர்
தங்கவு நெஞ்சந் தரித்தது வோதரி யாதநெறி
கங்குலு நண்பக லுங்கட வாவருங் காதல்கொண்ட
மங்கையர் கண்ணுமுண் டோபெரி யோர்செய்யும் வன்கண்மையே. ௩௭௧

### வரைவுகடாவுதல்.

முச்சங்க வண்டமிழ் போன்மொழி யாய்நம்மை முன்னுறவா
யச்சங் கடிந்த வருங்கடற் சேர்ப்ப ரணியல்கு
மிச்சங்க மன்னையர் கொண்டிடுந் தோறுமிரா திரங்கும்
கைச்சங்கம் போலல்ல வேகழ லாதொரு காலத்துமே. ௩௭௨

ஒருவழித்தணத்தன் முற்றும்.

---

# வரைவிடைவைத்துப் பொருள்வயிற் பிரிதல்.

### என்பொருட்பிரிவுணர்த்தேந்திழைக்கென்றல்

திரைவான் முழக்கின் மணிமுர சார்ப்பத் திருந்திழையார்
விரைவான் மலர்சிந்த வெண்மண ப்பந்தரில்வெந்தழன்முன்
வரைவான் விரும்பி யிருநிதிக் கேக வலித்தவண்ண
முரைவான் மலர்க்குழ லான்வருந் தாவண்ண மொண்ணுதலே. ௩௭௩

### நின்பொருட்பிரிவுரைநீயவட்கென்றல்.

துஞ்சத் தரும்பிடி யென்றுதண் சாரற் றுணைக்களிறு
மஞ்சைத் தழுவும் வளமலை நாட வரைவையுன்னி
நெஞ்சத் துயிரொத்த வாஞ்சையை நீத்து நிதிக்ககலும்
வெஞ்சொற் பகரும் விரகுவல் லாருன்னில் வேறில்லையே. ௩௭௪

### நீடேனென்றவனீங்கல்.

மதிமுற் றியதன்ன வாண்முகத் தாளை வரையவல்லே
நிதிமுற்றி மீள்குவ னீடனில் லேனெய்த னீலவுண்க
ணுதிமுற் றியகுழ லுன்னிடை யாயெதிர் கொண்டுநுங்கள்
பதிமுற்றி மங்கலம் பாடிநின் றூடப் பரிசிலரே. ௩௭௫

### சூளினை நினைத்துரைத்தல்.

வல்லே வருக பொருண்மேற் பிரிக வரைகவுள்ளே
னில்லே னெடிதென்று நீயிங் குரைத்த நிழல்வலைந்த
சொல்லே தவறிற் சுவறுமுந் நீர்மஞ்சு சூன்மறக்குங்
கல்லே வுதையங் கடலே யிலைநங் கதிரவற்கே. ௩௯௬

### பாங்கி தலைவிக்கவன் செலவுணர்த்தல்.

ஊரம் பலுமல ரும்முன்னே நாளு மொருப்பதஞ்சி
யாரம் பலவொன் றகன்மலை நாட ரவிர்மலர்த்தேன்
சோரும் புயலன்ன வார்குழ லாய்நின் றுணைமுலைக்கு
நேரும் பரிசு நிதிக்ககன் றேகினர் நீள்சுரமே. ௩௯௭

### பிரிவாற்றாமை.

வல்லார் களப முலைமேற் கலைவட முந்திருத்தி
யல்லார் சுரிகுழன் மோந்தளி யோட்டி யயர்வுயிர்த்துப்
புல்லா நினைத்ததெல் லாமுகத் தாலெம் புரவலர்முன்
சொல்லா திருந்திலர் சொல்லா ததுவெஞ் சுரமொன்றுமே. ௩௯௮

### தலைமகளிரங்கல்.

பாவி யெனக்குப் பரிசங் குறித்தநம் பல்கிளையோ
நீவி யதற்கென்னை நீத்தவ ரோவவர் நீத்தபின்னு
மாவி தரித்துய்யு மாசுடம் போவிங் கறிகிலமால்
யாவர் மடப்பிடி யேகொடி யாரிவ் விருநிலத்தே. ௩௯௯

### பாங்கிவரவுரைத்தல்.

கருந்தா மரையன்ன கண்கழு நீர்நிறங் காட்டவிங்ஙன்
வருந்தா தொழிமதி வஞ்சியன் னாய்நம் வளமனைக்கு
விருந்தாக நந்தமர் வேட்டெதிர் கொள்ளும் வினையுமுற்றி
யிருந்தாரை வையங் கடாயின்று நாளைவந் தெய்துவரோ. ௪௦௦

### வன்பொறையெதிர்தல்.

போனார் வருக விருநிதி தேடும் பொருளுமுற்றி
யானா தவன்பொடென் னாவியு நிற்க வவரகன்ற
கானா வதுவெங் கதிர்தோறும் பாலைக் கனல்கொழிந்தி
வானாறும் வற்றி மதியும்வெண் ணீறெழும் வன்சுரமே. ௪௦௧

### வற்புறுத்தல்.

பண்ணார் பணிமொழிப் பைந்தொடி யாய்வெந்த பாலைவன
மெண்ணா திருநிதிக் கேகினர் காண்ப ரெதிர்ந்தவலின்
கண்ணார் சிறுபுனல் மெய்யுறும் வேட்கை கரந்துகலை
யுண்ணா தருணத்தை யுண்டது போலநின் றூட்டுவதே. ௩௱௰௨

### பருவங்கண்டுபெருமகள்புலம்பல்.

தார்கால மன்றலங் கொன்றையங் கானற் றடஞ்சிறைவன்
கூர்கால நாரை யுடன்குரு காலக் கொழுங்கயற்கண்
ணீர்கால வாடக மென்னிறங் காலப் பிறங்குமழைக்
கார்காலம் வந்தது வாரார்கொ லின்னமுங் காதலரே. ௩௱௰௩

### பாங்கிபுலம்பல்.

குணங்கெட வற்றிய கொம்புகள் யாவுங் குழைத்தமழைக்
குணங்குவ தின்றெ றொருகொம்பு மேயொரு கொம்புவெம்பேய்க்
கணங்கடி கொண்டலை வுங்கங்குல் வாடைக் கனல்கொழுந்தி
யணங்கிடில் வஞ்சியன் னீரென்சொல் வேன்மன்ன ரானவர்க்கே. ௩௱௰௪

### இகுளைவம்பென்றல்.

வழங்குங் கொடுவரி கண்டெதிர் வேழ மணிவரையின்
முழங்குங் குரலை முகிலென்று கேட்டு மொழிதளரா
வழங்குங் குயில்கண் மயில்கணின் றலு மரும்புமுல்லை
பழங்கண் பசலை பரந்தனர் கூரல் பணிமொழியே. ௩௱௰௫

### இறைமகன்மறுத்தல்.

மருவந் தனத்து மணிமுத்த மாலை வகைவிடுத்துப்
புருவந் திருத்தி மதிநுத லீவிப் பொருள்வயிற்போய்ப்
பருவங் குறித்து வருதுமென் றூர்சொற் பழுதென்னவோ
தெருவந் தொறுநறும் பூவிலை மாதர் திரிகின்றதே. ௩௱௰௬

### அவர்தூதாகிவந்தடைந்ததிப்பொழுதெனத்துணைவிசாற்றல்.

பருவ மடுத்தது வந்திலர் காதல ரொன்றுபைம்பொன்
னுருவ மடப்பிடி யேயுயங் கேலுயங் காதவண்ணம்
பொருபகை செற்றபொற் றேரேறி வேந்தர் பொருண்முடித்து
வருவ துரைப்பமுன் னேவந்த தாலிம் மழைமுகிலே, ௩௱௰௭

## தலைமகளாற்றல்.

கருங்கால வெண்குரு குங்கண்டல் வாய்விட வஞ்சங்கொண்டல்
பொருங்கா லழிந்து புலம்பனெஞ் சேதண் புறவமயி
லொருங்கால மேக மிடித்துறை கால மொலிகழலார்
வருங்காலம் வந்தது போங்கால மில்லைநம் மன்னுயிர்க்கே. ௬௱௰௮

## தலைவன்புலம்பல்.

விழிகுழியும்படி தேர்வழி பார்த்தணை வீழ்ந்துவண்டு
கொழுதி மிருங்குழல் சோரக் கிடந்து குடங்கையின்மே
லொழுகிய வஞ்சன வெள்ளத் துணங்கு மணங்கைமுன்சென்
றெழுகென னெஞ்சமென் னே*யவ ரோவெனி லென்சொல்லுமே. ௬௱௰௯

## பாகற்குரைத்தல்.

மொய்யா டகமுடித் தேர்வல வாமுன் மொழிந்தவெல்லாம்
பொய்யான தென்று புலந்துறை யாடல் பொருள்விரும்பி
மையார் குழலியை வாழ்வித்த பாவி மனத்தையின்றுன்
கையாக வும்பரிக் காலா கவுமயன் கண்டிலனே. ௬௱௨௰

## முல்லையைநோக்கிக்கூறல்.

தேரிணங் குந்திரு வல்குனல் லாள்சிந்தை சேர்வதற்கு
காரணங் கொண்டல் கருத்ததன் றேமுன் சிவந்தகொற்றி
வாரணங் கால்கொண்டு மால்கொண்ட பேடைக்கு மண்கிளைத்துப்
பாரணங் காட்டி விடகின்று காணும் பசும்புறவே. ௬௱௨௰௧

## மேகத்தொடுசொல்லல்.

கிளைத்துக் கிளைத்தென்னைக் கேட்குந் தொறுங்கலுழ் கெண்டையுமுன்
வளைத்துக் கிடந்த வரிமணற் கூடலும் வண்ணமெல்லாம்
விளைத்துக் கிடந்த பசலையு மாயுள்ளம் விம்மிவிம்மி
யிளைத்துக் கிடந்தவட் கென்சொல்ல மேகங்கண் முன்செல்வதே. ௬௱௨௰௨

## தலைமகன்வரவறிவுறுத்தல்.

மருண்முற் றியகளி வண்டமிர் காந்தண் மலர்ந்ததுகண்
டிருண்முற் றியகுழ லேந்திழை யாயிளை யேலிளையேல்
பொருண்முற் றிவந்து புகுந்தனர் போலுநம் பொன்னகர்வா
யருண்முற் றியமனத் தன்பர்தந் தேர்மணி யார்க்கின்றதே. ௬௱௨௰௩

---

*அவர்யாரொனிலென்றும்பாடம்.

## நினைத்தமைவினாதல்.

கடந்தந்த வெங்கைக் களிற்றுவெங் கானங் கடந்துசென்ற
தடந்தந்த தாமரைத் தண்புன னாட்டுத் தடங்கடலின்
விடந்தந் தமுதந் தருமட நோக்கிவண் மேவமனத்
திடந்தந் தறிவதுண் டோவொரு நாணம் மிறையவனே. ௩௨௪

## தோழிக்குற்றதுரைத்தல்.

கோவையை வென்றசெவ் வாய்க்கொடி யேபொருள் கூட்டவென்று
தேவையை மேற்கொண்டு தீவினை யேன்சென்ற சென்றவிடம்
யாவையு முங்க ணிளமரக் காவு மிழைத்தகுன்றும்
பாவையு நீயும் பரிமளச் சோலையும் பண்ணையுமே. ௩௨௫

## தலைவியொடுகூறல்.

விழிகாட்டு நவ்வி மயிலியல் காட்டு மிழற்றுங்கிள்ளை
மொழிகாட்டு முல்லை முகிழ்நகை காட்டு முதுநதியின்
சுழிகாட்டு முந்தி துணைமுலை காட்டும் பிணையிளநீர்
கழிகாட்டி னுந்தன் கழனிநன் னாட்டினுங் காரிகையே. ௩௨௬

## ஆற்றிவைத்திருந்தமைதலைவன்வினாதல்.

சிமையார் தடவரைச் சேணெறிச் சென்றருஞ் செம்பொருளுக்
குமையா னொழிந்தங் குறைந்தவந் நாளி லுடனிருந்து
மிமையா விழிக்கின்ற வித்துணைப் போதினு மென்னையன்றி
யமையா வணங்கினை யெவ்வாறு நீதனி யாற்றினையே. ௩௨௭

## ஆற்றிவைத்திருந்தமைபாங்கிகூறல்.

மதிகாட் டியநுதல் வல்லிசிக் தாகுல மாற்றியதுன்
பதிகாட் டியுமுன பணிவரை காட்டியும் பாய்திரைநீர்
நதிகாட்டி யுமடுது நல்விருந் தாகி நடந்ததிண்டேர்க்
கதிகாட் டியுமுன் கலங்கசந் தாடவி காட்டியுமே. ௩௨௮

வரைவிடைவைத்துப்பொருவயிற்பிரிதன்முற்றும்.

# வரைவுமலிவு.

## வரைவுமறுத்தல்.

உருவுந் திருவுங் குலனுமொப் பீருயர் வீறொழிய
மருவும் புணர்வு மறக்கும் பழுதில்லை வாணுதலும்
பருவம் பெதும்பை நிறைந்திலள் பண்பிற் பசுங்கிள்ளையும்
பொருவும் புணர்வரி தோரையு நாளும் பொருந்தினுமே. ௩௱௨௯

## மறுத்துழியிரங்கல்.

சான்றோர் வரவு மிருநிதி யாவுந் தரவுநம்மை
யீன்றோர் மறுத்தன ரென்பது கேட்கி லெமக்கியையுந்
தேன்றோய் மலர்த்தழை தந்துகொல் யானைச் சினமுஞ்செற்ற
வான்றோய் வளமலை நாடனென் னுவர்கொல் வாணுதலே. ௩௱௩௰

## காதலன்முலைவிலைகொடுத்தமைபாங்கிகாதலிக்குணர்த்தல்.

உடுக்குந் தழைகொண்டு வந்தொரு நாளும்மை யொண்புனத்திற்
கெடுக்குங் கருங்கலை கேட்டவர் தாங்கிளி யேவெளியே
யடுக்குந் தமருகம் மன்னையு மூரு மறியவின்றே
கொடுக்கும் பரிசமெல் லாங்கொடுத் தார்நின் குவிமுலைக்கே. ௩௱௩௧

## பாங்கிதமர்வரைவெதிர்ந்தமைதலைவிக்குணர்த்தல்.

யாழிற் பொலிதரு மின்சொன லாயெவ ரோசெயினு
மூழிற் பெருவலி யென்றுமின் றோலிரு கோட்டொருகைச்
சூழிக் களிறு தொலைத்தவர்க் கேநின் முலைத்துணைக்கே
யாழிப் புவன மறியநங் கேளி ரடுத்தனரோ. ௩௱௩௨

## தலைமகளுவகையாற்றாதுளத்தொடுகிளத்தல்.

இன்னு நெறியுங் குறியிடை யீடு மிலங்கிழையார்
பின்னு ளிழைக்கும் பெருவெறி யாட்டும் பிறர்வரைவு
நின்னு குலமுந் தவிரநெஞ் சேயின்று நின்னுயிரை
யன்னூர் மணிமுர சார்க்கின்ற தான மகநகர்க்கே. ௩௱௩௩

## தலைவனைப்பாங்கிவாழ்த்தல்.

கொண்டல் வெளுக்குங் கருங்குழ லாண்மனக் கோட்டமுநின்
வண்டணி பைந்தழை வாட்டமுங் கண்டகண் மாலுமந்த
விண்டலர் தாமரைத் தேவியும் போலிங்கு மேவியது
கண்டன மேயிறை வாவிது வோவின்னங் காண்பதுவே. ௩௱௩௪

### தலைவிமணம்பொருட்டாகவணங்கைப்பராநிலைகாட்டல்.

அணங்கர வல்கு லரிவைய ராரத் தனமறுப்புச்
சுணங்கலர் வேங்கைத் துணர்மலை நாட துளங்குமின்போல்
வணங்கிடை மாதுன் மணம்பொருட் டாக வளையவிழ்பூங்
கணங்கமழ் சார லணங்கைப் பராநிலை கண்டருளே. ௱௩௫

### கண்டோன்மகிழ்ச்சி.

பாணார் சுரும்பும் விரும்புதண் சாரற் பனியருவிச்
சேணார் சிலம்பி லுறையுங் கடவுளைத் தேமலர்தூஉய்
வாணுடு கண்ணி மணம்பொருட் டாக வருந்துமன்பு
காணாய் மடநெஞ்ச மேவஞ்ச மோவவள் காதன்மையே. ௱௩௬

வரைவுமலிவுமுற்றும்.

---

## அறத்தொடுநிற்றல்.

### கையறுதோழிகண்ணீர்துடைத்தல்.

வாரண மாவின் மருப்பும் பொருப்பு மலைந்தகொங்கை
பூரண மாகும் பொலன்கொடி யேபொற்பு நீயழியுங்
காரண மாலொன்றுங் கண்டில மால்கண் கலுழ்வதென்றோ
தோரண மாமறு கிற்பலர் கூண்டலர் தூற்றுதற்கே. ௱௩௭

### தலைமகள்கலுழ்தற்காரணங்கூறல்.

பண்டு தமக்குப் பரிந்துமை யூட்டிய பங்கயக்கை
யொண்டொடி சோர வுயங்குத ஞேக்கி யுயங்குமது
தண்டலை தன்னிற் றலைப்பட்ட நாளிற் றலைவனைநாங்
கண்டது கொண்டல்ல வோவின்றுபோலுங் கலுழ்கின்றதே. ௱௩௮

### தலைவன்தெயவங்காட்டித்தெளிப்பத்தெளிந்தமைகூறல்.

கழியார் கருங்கடற் றெயவமுன் காட்டிக் கலந்தவன்று
மொழியா தனவில்லை முன்னுற வாய்முன் மொழிந்தவண்ணை
மொழியார் நமையொரு நாளுமென் றேகொண்ட துள்ளமுமென்
விழியான தூங்துயி லாமெலி வேனின்று மெல்லியலே. ௱௩௯

## இறைவி தலைவனிகந்தமை யியம்பல்.

என்னுயி யன்னவர் சொல்லிய வார்த்தைக் கிடையினின்ற
தன்று ளவர்நெஞ்ச மென்னெஞ்ச மேயன்றி வேறுமந்தண்
பொன்றூர் நறுமலர்ப் புன்னையங் கானற் புளினமுண்டு
நன்று வதற்கில்லை யேசொல்லு மாறு நடுவணின்றே. கூாசும

## தலைவியியற்படமொழிதல்.

மைக்கண் குவளை மலரின்முன் னேநிற்பர் வந்தரும்பிற்
புக்கென் றனிநெஞ்சம் புல்லிவி டார்பொறி வாளரவின்
பைக்கொன் றியவல்கு லாயின்று யான்செய்த பாவமென்னே
*கைக்குந் தனத்துக்கு மேயதி தூரத்தர் காதலரே. கூாசுக

## பாங்கியியற்பழித்துரைத்தல்.

கையாற் றழுவின தல்லாற் புணர்ந்து கலந்தவின்ப
மையாற் சிறந்த மதர்விழி யாய்மன மேநுகர
மெய்யாற் றலைவரு மேவிவிட் டாரந்த வேட்கைநெஞ்சி
லுய்யாப் பெருவிழு மங்கொண்டு நீயென் னுயங்குவதே. கூாசுஉ

## தெய்வம்பொறைகொளச்செல்குவமென்றல்.

மணங்கே தகைதரும் வண்டலந் தண்டுறை வந்தென் றன்னை
யுணங்கே னுயிரொன் றுறைத்தவர் தாமொரு நாளுமென்கண்
குணங்கே வலமலர் தெய்வந் தொழற்குக் குறுகுதுமென்
னணங்கே யணங்க லணங்கிலென் னுவி யணங்குறுமே. கூாசுங

## இல்வயிற்செறித்தமையியம்பல்.

கொன்னே வெகுண்டு மணிவண்ட லாடக் கொடிமருங்குற்
பொன்னே யினிப்புறம் போகலென் றுளன்னை பூந்தொடிக்கை
மின்னே பசந்தவென் மேனியும் பார்த்துள்ளம் வெய்துயிர்த்தா
ளென்னே விளைந்ததென் னேயறி யாரன்ப ரிங்கொன்றுமே. கூாசுச

## செவிலிகனையிருளவன்வரக்கண்டமைகூறல்.

ஆயின் றெனக்கு மனைமுன்றில் வாய்நென்ன லல்லியெல்லி
வாயொன்று தேனுமிழ் மாதவிப் பந்தரில் வார்கழற்காற்
சேயொன்றி நின்ற திறமறி யாமற் செறியிருட்கண்
பேயொன்று கண்டஞ்சி னேனென்று கூறினள் பெய்வளையே. கூாசுரு

---

*கைக்குந் துகிலுக்கு மென்றும்பாடம்.

## கட்டுவிச்சியை வினுதல்.

விழியுஞ் சிவந்து மொழியுந் தளர்வுற்று மெய்யுங்கைத்துக்
கழியும் படருறு கண்ணிக்கு வந்துமுன் கண்டறியாப்
பழிவந் தடுத்த தறிகின்றி லேனரும் பாவஞ்செய்தேன்
மொழியின்று நின்று குறத்தியம் மேநின் முறத்திலிட்டே. ௩௱௪௬

## கட்டுரைகூறல்.

பண்பட்ட சொல்லி பணிபட்ட பன்னிரு கைபடைத்தோன்
கண்பட்ட தன்றென் கழங்கினும் பட்டது கைமுறத்தி
லெண்பட்ட நெல்லுழி யும்மிது வேபட்ட திங்கினிநீ
புண்பட்ட நெஞ்சுடை யன்னையிவ் வாறு புலம்பனின்றே. ௩௱௪௭

## தோழிதலைவியைவினுதல்.

*வரியுங் கரியும் வருநெறி யூரின் மணிநிதிகள்
சொரியும் பிறருந் துணிகு வராமஞ்சு சூழ்சிலம்பர்
பரியும் பொருளு நமர்பொருந் தாருட் புலம்பலுற்ற
வரியங் குழலணங்கே யென்செய் வேனென்னு மன்னையுமே. ௩௱௪௮

## தலைவிதோழியைவினுதல்.

நோய்நாடி யானுற்ற நோய்முத லுடியங் நோய்தணிக்கும்
வாய்நாடி வாய்த்த மருந்துசெய் யாமலிம் மன்றிலன்னை
வேய்நாடு தோளியர் முன்வெறி யாடல் விரும்புமிது
நீநாடி யொன்றுசொல் லாதென்கொ லோவின்சொ லேரிழையே. ௩௱௪௯

## அறத்தொடுநிலைமறுத்தல்.

பூமென்று மென்முலைப் பொற்றொடி யாய்நிறம் போர்த்தபைம்பொன்
காணுந் தொறுங்கலு ழன்னைக்கு நின்னருங் கற்புடனே
சேணின் றுயர்ந்த மரபுக்க டாத செயலையின்று
நாணின்றி நின்று மொழிவதின் மாய்கவென் னல்லுயிரோ. ௩௱௫௰

## அறத்தொடுநிலையுடன்படுதல்.

வில்லா நுதலும் விழியும் பசப்பும் வெறிக்குமுன்னே
சொல்லா தொழியினின் றன்னையு நாடுந் துடிமருங்கு
னல்லாய் குலனு நலனுமெய் நாணு நயந்தகற்பு
மெல்லா மிழியுமென் றேயினி மேலிதற் கென்செய்வதே. ௩௱௫௧

---

*இச்செய்யுள் ஒரே ஏட்டிலிருந்தபடி அச்சிடப்பட்டது.

## தலைவி தோழிக்கறத்தொடுநிற்றல்.

அன்னை யொறுப்பினு நம்மய லார்நின் றொறுப்பினுமிங்
குன்னை மறைப்ப தொழிக் துரைசெய்வ லொருவர்வந்து
புன்னை யுகுத்தமென் பூக்கறி யாக்கும் புதுமணற்சோ
றென்னை யருத்த வருத்தமுற் றேனென் றியம்பினரோ. ௩௱௫௨

## பாங்கி வெறிவிலக்கல்.

சேயவற் காறு முகங்கண்ட தல்லது சிந்தையென்னே
யாயிழைக் காறு முகங்கண்டி லேனன்னை யேயறியிப்
பேயினுக் காறு மருந்தென்கொ லோவெண் பிறையெயிற்று
வாயினுக் கிங்கெய்து மோவிளம் பான்மறி வன்றுரமே. ௩௱௫௩

## செவிலி பாங்கியை வினாதல்.

மறியார் தடங்கண் மயிலனை யாயிந்த மானெவருங்
குறியா வருந்துயர் கொண்டது கண்ட குறியுமன்னை
வெறியாட லெண்ணிய வேட்கையு நீவிலக் குந்திறனு
மறியா தழுங்குகின் றேன்சொல்லு வாயிங் கறிந்ததுவே. ௩௱௫௪

## பூத்தருபுணர்ச்சியாலறத்தொடுநிற்றல்.

சோலைத் திருமுரு கன்று ணொருவன் றொடிமலர்க்கை
நீலத்தின் மேல்விழி நெய்தல்வைத் தாளன் னிவளைவறிந்து
கோலத் திருவனை யீர்வம்மி னீரது கொண்மினென்ன
மாலைக் கருங்குழல் வல்லிதன் பார்வைக்கு வாங்கினளே. ௩௱௫௫

## புனறருபுணர்ச்சியாலறத்தொடுநிற்றல்.

ஆடுந் துறையி லருவினை யேன்கை யகன்றரிவை
யோடும் புனலி லொழுகிய நாளெம் மழுகுரற்கேட்
டேடொன்று பூந்தொடை யேந்தன்முன் னீந்தி யெடுத்தணைத்து
நீடுந் தடங்கரை நில்லுமென் றானெம்மை நேரிழையே. ௩௱௫௬

## களிறுதருபுணர்ச்சியாலறத்தொடுநிற்றல்.

மலைக்கோடி யின்மழை யின்மருங் கோடுவெண் மாமதியின்
கலைக்கோ டுழுத கழையிருஞ் சாரற் கனங்குழைதன்
முலைக்கோடு பின்னு முழக்கோ டெதிரு முதுகளிற்றின்
கொலைக்கோடு முன்னுங் குளிப்பரின் றுமொருகொற்றவனே. ௩௱௫௭

### தலைமகள்வேற்றுமைகண்டு நற்றாய்செவிலியைவினாதல்.

குணங்குற்ற மென்னுமிக் கூறறி யாத குதலைமென்சொ
லணங்குற்ற மைய லறிந்தனை யோவரும் பார்முலைகள்
சுணங்குற் றனவளை தோளுற் றனவில்லை சொற்றளரு
நிணங்குற்ற வேற்கண் ணிறம்பசப் பூரு நிரைவளைக்கே. ௨௱௫௮

### நற்றாய்க்குச்செவிலியறத்தொடுநிற்றல்.

திருந்தா மொழியுந் திரளா முலையுந் தரளமென்னு
முருந்தாகு மென்னகை மூரலுந் துய்ய முருகவிழ்பூங்
கருந்தாழ் குழலுமென் கைவந்த தில்லை கனங்குழையா
யருந்தா வமுதமன் னாளறி வானின்னை யன்னநின்றே. ௨௱௫௯

### நற்றாய்தமருக்கறத்தொடுநிற்றல்.

கலைமதிக் கும்புல மிக்கோ ளையுமுங்கள் கங்கையன்னீர்
நிலைமதிக் குங்குல நீர்மையு பார்த்தின்று நேரில்லா
லலைமதிக் குந்தெள் ளமுதமன் னாளரும் பாமுலைகள்
விலைமதிக் குந்தர மோவேலை ஞாலமு மேருவுமே. ௨௱௬௰

### வரைவுமறுத்தல்.

முலைமுற் றியமென் முகிணகை மானுக்கு மூதறிவு
கலைமுற் றியகுல னுங்கல னாகக் கருதுமென்று
மலைமுற் றியபுயத் தாயன்னை கூறமற் றென்னையர்வான்
சிலைமுற் றியவெங் கணைதெரிந் தார்கண் சிவந்துறுத்தே. ௨௱௬௧

அறத்தொடுநிற்றன்முற்றும்.

---

# உடன்போக்கு.

### பாங்கிதலைவற்குடன்போக்குணர்த்தல்.

வரிநில மன்ன மதர்விழி மாதின் வனமுலைக்கு
விரிநீ ருலகு விலைபொருந் தாவொமர் வெள்ளருவி
சொரிநீல வெற்பநின் றோளன்றி வேறு துணையுமில்லைப்
புரிநீ யிவள்புனை யும்பழி நீங்கிப் புகழெய்தவே. ௨௱௬௨

## தலைவனுடன்போக்குமறுத்தல்.

இலனென்னு நாவினர்க் கில்லென்னு நாவினு மின்சொலிலாப்
புலனென்னு நாவிற் புகையெழுங் கானகம் போதுகைக்கு
மலர்மன்னு பாயலில் வைக்கினுங் கைக்கு மலரடிகள்
கலன்மன்னு கொங்கைநல் லாய்வல்ல வோநின் கனங்குழைக்கே. ௩௱௬௩

## பாங்கிதலைவனையுடன்படுத்தல்.

வல்லினு நல்ல வனமுலை யாள்மண் ணெலாமுறங்கு
மல்லினும் வாணெடுங் கண்ணடை யாம லருந்தனிகூ
ரில்லினு மெல்லிய லீரொன்செய் தீரொன் றிரங்குமன்னை
சொல்லினும் வெய்யதன் றேசொன்ன நாவுஞ் சுடுசுரமே. ௩௱௬௪

## தலைவன்போக்குடன்படுதல்

இன்னாத கானு மினிதென்று நீரிங் கியைந்தவன்பு
மன்னா ளளித்த வணங்குமுண் டேயென்ற றூவியன்ன
மின்னார் திருந்திழை மெய்வருந் தாவகை மெல்லமெல்லப்
பன்னாள் படவு முடன்கொண்டு சேறு பணிமொழியே. ௩௱௬௫

## பாங்கிதலைவிக்குடன்போக்குணர்த்தல்

குறுந்தாண் மலர்க்கு ரவுநெடுந் தாண்மலர்க் கோங்குமுநின்
னறுந்தார் குழலுக்கு நல்குவர் நாளை நணுகலரைச்
செறுந்தானை வேல்வல்ல சேயனை யார்தந் திருமெய்நொந்து
பெறுந்தா யுனைவளர்க் கப்பெற்ற தாயுடன் பேதுறவே. ௩௱௬௬

## தலைவிநாணழிவிரங்கல்.

போகின்ற வானப் புயல்வழி மாறிப் புனலின்றியே
சாகின்ற வேழமுங் கன்றும் பிடியுந் தழலின்றியே
வேகின்ற கானத்து வெற்பர்பின் போக விரும்புநெஞ்சி
லாகின்ற வன்புக் கருமந்த நாண மழிகின்றதே. ௩௱௬௭

## தலைவியொருப்பட்டெழுதல்.

கடனாக நிற்பது கற்பொன்று மேயென்றுங் கன்னியர்க்கு
மடனாண் வருவது போவதன் றேபல வம்பலர்த
மிடனா மிருப்பதி லெய்துவம் பாலையி லேகுமன்ப
ருடனாகப் போக வொருப்படு நீயென் னுளமகிழ்ந்தே. ௩௱௬௮

### வரைவுமாட்சி.

மின்னே மருங்குல் விளங்குபைங் கோதை விளங்கிழைநின்
பின்னே வருதல் கருதிய போதுமென் பிள்ளைகிள்ளை
யன்னே மகவன்பு மற்றனை யோவென் றாற்றவன்பின்
சொன்னே யருமந்த கொங்கைகண் ணீரிற் குளித்தனவே. ௫௱௬௯

### பாங்கிகையடைகொடுத்தல்.

வடமால் வரைநிலை சாயினும் வார்புயல் வாரிபுருங்
கடனு ரியநெறி கைவிட்டு நீங்கினுங் கந்தலைக்கு
மடமாக் களிற்றன்ப நின்னையன் றோர்பின்னை யென்னையன்று
ருடனாகு கேண்மை யொழிந்தறி யாரிவ் வுலகத்திலே. ௫௱௭௰

### பாங்கிவைகிருள்விடுத்தல்.

ஊருங் கலிகெழுஞ் சேரியுந் தாயரு முட்புலம்பத்
தேரும் பழிபுக ழாக்கிவந் தெய்துவல் சேயனையாய்
வாரும் மணிவடம் வம்பும் பொருமுலை வல்லியுடன்
யாரும் துயில்கொள்ளு நள்ளிருள் யாமத் தெழுந்தருளே. ௫௱௭௧

### தலைமகளைத்தலைமகன்சுரத்துய்த்தல்.

செல்லுஞ் சுரமனற் றீந்திலை மாறிய திண்புறவுங்
கல்லுங் குலவுமென் றஞ்சல்மின் னேயருங் கான்றுறையு
மல்லும் பசலு மரிவரி தாவு மகன்பொழிலு
நெல்லுங் கரும்புஞ் சுரும்பமர் காவியு நீழலுமே. ௫௱௭௨

### தலைமகன்றலைமகளசைவறிந்திருத்தல்.

திருந்திய பஞ்சென வஞ்சுநின் கஞ்சமென் சீறடிகள்
வருந்திய சொந்தளிர் வண்ணமும் வாடினை மாதவியுங்
குருந்தமு மந்தண் குராவும ராவுமென் கோங்குமுடன
பொருந்திய சோலை யிருந்தசை வாறுதும் பொற்கொடியே. ௫௱௭௩

### உவந்தலர்சூட்டியுண்மகிழ்ந்துரைத்தல்.

விண்ணுங் கருகுங் கொடுஞ்சுரம் போந்து வெயிலெறிப்ப
வண்ணங் கருகிய வல்லிபொற் றேறும் வனமுலையுந்
தண்ணாம் குரவ மணநாறுங் கோதையுந் தண்ணளியுங்
கண்ணுங்கண் டேவெளி யேகளி கூருநங் கண்ணிணையே. ௫௱௭௪

### தலைவன்மகிழ்ச்சி.

தொகத்தா மரைவெஞ் சுரத்துவெண் பாடலஞ் சோலையிலென்
னகத்தா மரையின் றலர்த்திய வாவிவ் வலங்கல்சுற்று
னகத்தா மரையுங் கழுநீர் மலரன்ன நாட்டமுநன்
முகத்தா மரையரும் புங்குறு வேர்வு முறுவலுமே. ௩௭௫

### கண்புதைநாணயீதுறல்.

செய்யொன்று நீள்சுடர் வேற்கடுங் காலை நிரைவளைநீர்
கொய்யுங் குரவு மரவுந் தொடுத்துக் குழலணியச்
செய்யுந் தவமற்றி யாவார்செய் தாரொன ச்செங்குழைதோய்
மையுண் குவளையின் மேல்வளைக் காந்தண் மலர்ந்தனவே. ௩௭௬

### கண்டோரயிர்த்தல்.

கருவார் புயலொன்றுங் கண்டறி யாதவிக் கானகத்தே
வருவார் சிலரிவர் மற்றிவர் யாவர்கொல் வாரிதந்த
திருவா மெனிலிவள் செங்கையிற் பங்கய மில்லைசெல்வன்
மருவார் துளவணி மாலெனில் மார்பின் மறுவில்லையே. ௩௭௭

### கண்டோர்மகிழ்ச்சி.

முன்செல்ல நாணு முகிழ்நகை வல்லி முருகனிவன்
பின்செல்ல நாணும் பிடிநடை காணவிப் பேருலகிற்
புன்செல்வர் தேடும் பொருள்போ லிறுகப் பொதிந்தவண்மை
யென்சொல்லி யெங்ஙன் றுலைந்ததிவ் வாறிவ் விருஞ்சுரமே. ௩௭௮

### வனத்திடைபெண்டிர்நினைத்தமைகூறல்.

அன்போ டுருகிய வார்கழைக் கானிடை வார்கழலான்
பின்போ மிளங்கொடி பெண்ணலங் கண்டு பெருந்தடங்கண்
மின்போன் மகளிர்தம் மேவுங் கொழுநரை வேட்கையுட
னென்போ டறப்புல்லி யேகவொட் டார்தம் மியல்கடைந்தேன் ௩௭௯

### கண்டோரிரங்கல்.

பேதைப் பருவங் கழிந்தில ளின்னமும் பேணியதன்
காதற் கொழுநன் விழுமிய கேண்மையை க்காதலித்துப்
போதற் கரிய வெரியனற் கானகம் போந்தவிந்த
மாதைப் பயந்த மடந்தையெவ் வாறுயிர் வாழ்ந்தனளே ௩௮௦

### கண்டோர்காதலின்விலக்கல்.

மையோ டரிக்கண்ணி வண்ணங் கருகிவருந்தினளிவ்
வெய்யோனும் வெற்பில் விழுமள வாயினன் வெம்புலியு
மெய்யோ டிகலு மிருடுஞ்சு மல்லிலெம் மில்லிற்றங்கி
நெய்யோடி லங்கிலை வேலைய நீசெல்லு நீணகர்க்கே. ௩௱௮௧

### கண்டோர்தன்பதியணிமைசாற்றல்.

மாவிடை கொள்ள மலர்ந்தகண் ணுயினி வன்சுரமோ
ரேவிடை போது மிதுகடந் தான் முன் னிரும்பழனப்
பூவிடை வண்டுக் கினியமந் தாரப் புதுநறவைக்
காவிடை வண்டு விருந்திடு மூருங் கழனியுமே. ௩௱௮௨

### தலைவன்றன்பதியடைந்தமைதலைவிக்குணர்த்தல்.

பாவையர் கொய்யும் பனிமலர்க் காவிது பாவையர்த
மாவியன் னுருட னுடுந் துறைய தரும்பவிழ்பூங்
காவி களைந்து கடசிய ரார்க்குங் கழனியுட
னோவிய மாளிகைச் சூழ்விது காண முறைபதியே. ௩௱௮௩

### தலைவன்றலைவியொடுதன்மனைசார்தல்.

சங்க முழங்க மணிமுர சார்ப்பத் தமரொதிர்கொ
ளங்க ணலந்திக ழாவணம் போயகன் மாளிகையிற்
பொங்கிலை வேலனும் பூவையு மேவினர் புண்டரிகச்
செங்கண் மலர்த்தி கிரித்திரு மாலுந் திருவுமொத்தே. ௩௱௮௪

உடன்போக்கு முற்றும்.

---

## கற்பொடு புணர்ந்தகவ்வை

### செவிலியாங்கிளையவிறுதல்.

மானுங் கிளியு மயிலும் பயில வளர்த்தெடுத்த
யானும் பரிவுற வீன்றநற் றாயு மிரங்கிளையத்
தேனுங் குயிலு மனையசொல் லாள்சுரஞ் சென்றதுநீ
தானு மறிந்திலை யோமுன்செய் பாவந் தளிர்யலே. ௩௱௮௫

### பாங்கிசெவிலிக்குணர்த்தல்.

கூர்ந்த சினக்களி றன்றுவென் றூரினுங் கொள்ளைநிதி
யீந்த வருக்கென் னிளமுலை யாக விருங்குரவர்
சேர்ந்தன ரென்றஞ்சி யென்னையென் னோக்கி நெடிதுயிர்த்தாள்
வார்ந்த கருங்குழல் வல்லிபின் னேக வலித்துள்ளமே. ௨௱௮௬

### செவிலிதன்னறிவின்மைசாற்றல்

மறியுங் கயலு மனையகண் ணாள்வரிப் பந்துசந்துஞ்
செறியும் பசுங்கிளி செங்கையிற் றந்துஞ் செழுந்திவலை
யெறியுந் திரையென் றிறகவெற் புல்லியு மின்னுமின்ன
வறியுங் குறிகள்செய் தாளவ மேயென் னறிவின்மையே. ௨௱௮௭

### செவிலிதேற்றுவோர்க்கெதிரழிந்துமொழிதல்

தோற்றந் திருவனை யார்சுரம் போன துணிவுகண்டு
ராற்றுந் தெரிவைய ராற்றல்கண் டூரின் னமுதருந்திப்
போற்றுங் கிளியுமென் பாவையும் பூவையும் போற்றுசெஞ்சொன்
மாற்றம் பொருக்கவற் றேதெரு வீர்நம் மடநெஞ்சமே. ௨௱௮௮

### தெய்வம்வாழ்த்தல்.

வேமாறு செல்லவெம் மெல்லிய லாளை விடுத்தனைநீ
யாமாறு செய்தனை யாரணங் கேநின் னருளொழிந்தா
லேமாறு வண்ண மிதற்கொன்று மில்லையொ ரோதிலன்பின்
போமாறு செய்தனை நீவரு மாறு புரிந்தருளே. ௨௱௮௯

### செவிலிநற்றாய்க்குரைத்தல்.

தொடுப்பார் தொடுத்தலர் தூற்றும் படிவந்து சூழ்விதியைத்
தடுப்பா ரெவரினிச் சாற்றுவ தென்கொ றடத்தின்முன்வீழ்ந்
தெடுப்பா னொருவ னிருப்பதின் றூர்தம் மிருநிதிக்குக்
கொடுப்பா னிசைந்தன னென்றுசொன் னாணங் குலக்கொடியே. ௨௱௯௰

### நற்றாயிரங்கல்.

பூவையுண் டோபுனக் கிள்ளையுண் டோவென் புதியமன்றற்
பாவையுண் டோபெற்ற பாவியுண் டோகுன்று பார்த்தழைக்குந்
தேவையுண் டோகற்ற சிற்றிலுண் டோமற்றென குற்றமுண்டோ
யாவையுண் டோமக ளேசொல்லு நீயவ் வருஞ்சுரத்தே. ௨௱௯௧

### நற்றாய்பாங்கிதன்னொடுபுலம்பல்.

தாயென்செய் தாளென்று தள்ளியென் பாவைதன் பான்மயங்க
மாயஞ்செய் தாளொரு வள்ளல்பின் னேயழல் வன்சுரத்துப்
போயென்செய் தாளென் றறிகில னென்றும் பொறியிலியை
நீயென்செய் தாய்மக ளேகண்க ணீர்மல்க நின்றுநின்றே ௱௩௨

### பாங்கியயலாரொடுபுலம்பல்.

புறந்தாழ் புரிகுழற் பூவையென் பாவை புனையலங்கற்
சிறந்தா னொருவள்ளல் செய்கைய தாமெனத் தெய்வந்தொழா
ளறந்தா னிலைபெற் றரும்பழி காக்கு மறிவுநெஞ்சிற்
பிறந்தா ளருஞ்சுரம் பின்சொல்ல வேண்டுங்கொல் பேதையரோ. ௱௩௩

### நற்றாயயலாரொடுபுலம்பல்.

என்போல நீரு மினியருங் காதல்கொண் டேதிலன்றன்
பின்போ மகவைப் பெறுதொழி வீர்பெற்ற பாவிமலர்ப்
பொன்போ லரியவென் பூவையை வெஞ்சுரம் போக்கியிங்
னன்போ டழுங்குகின் றேனயல் வாழு மரிவையரோ. ௱௩௪

### நற்றாய்தலைமகள்பயிலிடத்தொடுபுலம்பல்.

நன்றே யுமக்கவர் நல்லதெல் லாஞ்சொல்ல நவ்வியிளங்
கன்றே யருமணிக் கந்துக மேகண் கலந்தழைக்குங்
குன்றே குவலையங் கொய்தட மேயெதிர் கூர்ங்குயிலே
யென்றேகொ லும்மையு மென்னையுங் காணவந் தெய்வதுவே. ௱௩௫

### நிமித்தம்போற்றல்.

மையோ டரிக்கண்ணி வள்ளலுந் தானும் வரக்கரைந்தா
னெய்யோ டளைந்த நிணப்பலி நல்குவ னெல்லுணங்குஞ்
செய்யோடு கெண்டையுஞ் சேலுந் தருகுவன் சேரவெட்டுக்
கையோன் வலந்திருக் கண்பெற்ற காதலன் கார்க்கொடியே. ௱௩௬

### சுரந்தணிவித்தல்.

வானஞ் சொரிக மழைகதி ரோனை மறைக்கமஞ்சு
கானந் தழைக்க கனமயி லாலுகக் காவிடைநற்
றேனுஞ் சுரும்புஞ் செறிகத்தண் ணீர்வளஞ் செல்கத்தென்னன்
மீனஞ்சு கண்ணி விடலைபின் போகிய வெஞ்சுரமே. ௱௩௭

## தன்மகண்மென்மைத்தன்மைக்கிரங்கல்.

பஞ்செனை வஞ்சும் பதயுகங் காந்தளைப் பாந்தளென்று
வஞ்சு மனந்தன மாகஞ் செறிந்தில யாளிதங்கும்
வெஞ்சுர மின்று விடலைபின் போக விரும்பியவா
வஞ்சி மருங்குனல் லீர்வினை யேன்பெற்ற வாணுதலே ௩௱௯௮

## செவிலியாற்றுத்தாயைத்தேற்றல்.

அருகாத வன்புட னின்புற மேல்வந் தகெளிற்றைப்
பொருகாளை பின்சுரம் போயின ளென்று புலம்பிகையேல்
குருகார் கமலக் கொடிதங்கு தேயங் குறுகியவ
ரொருகாலி னுக்கு மொருகையி னிருக்கு முட்பட்டதே. ௩௱௯௯

## முக்கோற்பகவரைவினுதல்.

உறித்தாழ் கரகமு மூன்றுமுக் கோலு முடுத்தசெவ்வா
னெறித்தா லனைய விருந்துவ ராடையு மிந்திரவி
மறித்தா லனைய குடையுங்கொண் டேவரு வீரொருவ
னெறித்தாழ் குழல்வல்லி முன்செல்லு மோவின் னெடுஞ்சுரத்தே. ௪௱

## மிக்கோரேதுக்காட்டல்.

முற்று முகிழ்நகை வல்லியை மொய்குழல் முன்வருந்திப்
பெற்று மொழியப் பிறந்திலை யோபிற வாவமரர்
வற்று வுததி மருந்தைமுன் னுஞண்ட வாறறிந்துங்
கற்று மெனநின் றிரங்குதி யோகடுங் கானகத்தே ௪௱௧

## செவிலியெயிற்றியைவினுதல்.

ஒன்றிக் கலந்தங் கொருவரைப் போலு மிருவர்தம்மி
லின்றிக் கடுஞ்சுரத் தேகினை ரோவிழை கோத்தணிந்த
வென்றிக் கொடுவரிப் பற்பல பூந்தழை வேய்ந்தவல்குற்
குன்றித் தனத்து ப்புளினர்தங் கோலக் குலக்கொடியே. ௪௱௨

## செவிலிகுரவொடுபுலம்பல்.

இரும்பாவை பெற்றனை யின்குர வேயிங்கொ ரேதிலன்பின்
வரும்பாவை நில்லென்ன வாயில்லை யோமழைக் கண்மணியுட்
கரும்பாவை யன்னவென் கன்னியைக் கைவிடு மன்னையொடத
வரும்பாவி நீயு மறிகுவன் பாவி யகன்புறவே. ௪௱௩

### சுவடுகண்டிரங்கல்.

பூவடி வாளி யெயினர்கண் ணிப்பிழை போர்த்தவுழை
தாவடி நீயுந் தழனெடும் பாலை தடக்கைவென்றி
மாவடி யாங்கவை யூங்கிவை மாவை மலைந்தவள்ளல்
சேவடி யீங்கிவை செங்கனி வாய்மங்கை சீறடியே. ௪௱௪

### செவிலிகலந்துடன்வருவோர்க்கண்டுகேட்டல்.

பைந்தார் விடலையு நீயுந் தழைகவிப் பரிசெதிரோ
வந்தார் சிலருள ரோசொல்லு வீர்வண்ட லாடுமெர்தண்
சந்தார் தடமுலை யாயமுந் தாயருந் தான்வளர்த்த
செந்தார் மழலைக் கிளியுமென் போனின்று தேடவைத்தே. ௪௱௫

### அவர்செலவுணர்த்திச்செவிலியைமீட்டல்.

மீளா தொழிவதெ னன்னைவெங் கானகம் பைங்குழைதோய்
வாளார் நயனியும் வள்ளலும் போய்வன் சுரத்திடையே
நாளார் மலர்ப்பொழி லண்பகற் றங்கினர் பின்பகற்போய்த்
தாளார் நறுமலர்த் தண்புன லூட்டின்று சார்குவரோ. ௪௱௬

### செவிலிபுதல்வியைக்காணாதுகவலைகூர்தல்.

கல்லார் சுரத்தில் வருவா ரிருவரைக் கண்டவெல்லை
யெல்லா மவரவ ரென்றிருந் தேனவ ரெம்மிருவ
ரல்லா நிலைமை யருவினை யேனிங் கறிந்தபின்னுஞ்
செல்லாது மீண்டொரு காலிரு காலுமென் சிந்தையுமே. ௪௱௭

கற்பொடு புணர்ந்தகவ்வை முற்றும்.

---

## மீட்சி.

### தலைவிசேணகன்றமைசெவிலிதாய்க்குணர்த்தல்.

ஏடார் மலர்க்குழல் வல்லியை யன்னையித் தீவினையே
னாடா விடமில்லை ஞாலத் தகல்வயி னன்கமலக்
காடார் பழனக் கழனிநன் னாடு கடந்துதன்னூர்
வாடா வளமனை கொண்டுசென் றானொரு வள்ளலின்றே. ௪௱௮

### ஊர்வரைந்தநெடுந்தகைமீட்சி.

தனைத்தாய தன்னக ரொன்றிப்பொன் மாளிகை சான்றவர்மு
ன்னைத்தாய பல்கிளை யேத்த மணம்புரிந் தின்புறுநாண்
மனைத்தாயர் தந்தைதன் னூரவண்ட லாய மறந்ததெல்லா
நினைத்தா ணினைவளை மீண்டா னறிந்து நெடுந்தகையே. ௪௱௯

### மீணெறித்தன்மைமவானுதற்குரைத்தல்.

துப்போது சேயிதழ்த் தூகமை யாய்வெஞ் சுரத்திடைநா
மப்போ திருந்த வகன்பொழி லாமிது வாரமுலைக்
கொப்போ தியபொன் முகைக் கன்னி கார முதுவதுநீ
யெப்போதும் வைகு மிளமரக் காவு மிலஞ்சியுமே. ௪௱௰

### தலைவிமுன்செல்வோர்தம்மொடுதன்வரவுபாங்கியர்க்குணர்த்தல்.

ஒன்றே யுளங்கொண் டிருபிறப் பெய்திய முத்தியுற்ற
நன்றே நவில்கின்ற நான்மறை யீர்தம்மை நானகன்ற
வன்றே துடங்கி யலமரு மாயத் தரிவையர்க்குச்
சென்றே வருவ துரைமின்கள் யாமத் திருநகர்க்கே. ௪௱௰௧

### முன்சென்றோர்பாங்கியர்க்குணர்த்தல்.

நண்போ டினியதொர் நல்விருந் தெய்துவர் நாளையெல்லைத்
தாண்போ தணிகுழற் றையனல் லீர்செய்ய தண்டமிழ்தோய்
பண்போ லினிய பணிமொழிச் செந்தளிர்ப் பைந்தொடிதன்
கண்போ லொருவர் கலந்துடன் மீள்வது கண்டனமே. ௪௱௰௨

### பாங்கியர்கேட்டுநற்றாய்க்குணர்த்தல்.

மேவியொன் னொன்ன மெய்த்துணை போக விடுத்திருந்த
பாவியென் னுவகை பாக்கியஞ் செய்தனம் பாயரிக்கண்
காவியன் னாளருங் கானக நீந்திநம் மாநகர்வா
யாவியன் னாரொடு வந்தனள் காணென்ப ரந்தணரே. ௪௱௰௩

### வேலனைநற்றாய்வினாதல்.

கருமோ கரவரி வண்டுஞ் சுரும்புங் கலந்துதம்மிற்
பொருமோதி மின்னுடன் போந்தபுண் வேலர் புகன்றயெம்மில்
வருமோ விடலை வரவொழிந் தாலுண் மகிழ்வதுவை
தருமோ நமக்கவ ளைத்தந்த தாயெண்ணிச் சாற்றுகவே. ௪௱௰௪

மீட்சிமுற்றும்.

# தன்மனைவரைதல்.

### தோழி நற்றாய்க்கு வரைந்தமை கூறல்.

அன்னே யிதுவொன் றதிசயங் கேளம்மா லெவ்வண்ணனிற்
முன்னே வரைவு முடிந்ததுபோலு முகிழ்த்தகொங்கைப்
பொன்னே சுணங்கி னணங்கினை வெஞ்சுரம் போயகன்று
கொன்னே வளங்கெழு பொற்கொடி மாநகர் கொண்டுசென்றே. ௨௱௯௫

### தலைமகன்பாங்கிக்குயான்வரைந்தமைநுமர்க்கியம்புசென்றென்றல்.

ஓங்கும் பலவுங் கதலியுஞ் சூழுமெம் மூர்வயிற்போய்ப்
பாங்கொன் றியசுழல் வேழ்விமுன் னாகப் பணிமொழியாய்
வாங்குஞ் சிலைநுதல் மங்கைக்கு மங்கல நாண்புனைந்த
தீங்குன் பொருந்தமர் யாவர்க்கு நீசென் றியம்புகவே. ௨௱௯௬

### பாங்கிதானது முன்னே சாற்றியதுரைத்தல்.

காயமுந் திண்ணமுங் கார்வரை போலுங் கடுங்களிறுஞ்
சீயமும் போலுந் திறலண்ண லேசுரஞ் செல்லவைத்த
மாயமும் போயுன் வளநகர்க் கெய்தி வரைந்ததுவு
மாயமுஞ் சேரியு மூருமுன் னேயிங் கறிந்ததுவே. ௨௱௯௭

தன்மனைவரைதன் முற்றும்.

---

# உடன்போக்கிடையீடு.

### நீங்குங்கிழத்திபாங்கியர்தமக்குத்தஞ்செலவுணர்த்திவிடுத்தல்.

இன்னே யிரங்குமென் னையத் தவருக்கு மீன்றெடுத்த
வென்னே யெனவருந் தன்னைய ருக்குமிவ் வாண்டகைதன்
பின்னே வளங்கெழு தண்ணருங் கானம்பெ யர்கின்றசொற்
சொன்னே னுமக்கெம தார்செல்லு வீரிது சொல்லுமினே. ௨௱௯௮

### நற்றாய்க்குக் கண்டோர்மொழிதல்.

அன்பே மருவி யருஞ்சிலை பூண்டகை யாண்டகைபி
னின்பேதை சென்றன ணீணிழற் கானிடை நீபுலம்புற்
றென்பே துறுவ திலங்கிழை யாயிங்ங னேகியமான்
றன்பே ரறிவுக் குயர்வட மீனுந் தகுவதன்றே. ௨௱௯௯

## தமர்பின்சேறலைத் தலைவிகண்டு தலைவர்க்குணர்த்தல்.

கொம்மைய வென்றிக் கொடுஞ்சிலை வாங்கிக் கொடுஞ்சரங்கள்
செம்மைய வாகத் தெரிந்துகைக் கொண்டு செயிர்த்தெழுந்த
வெம்மைய ராகின ரோதம ரோவிறல் வேடர்சொல்லோ
வெம்மைய ரோவறி யேன்சிறி யேனிவ் விருஞ்சுரத்தே. சாஉ௰

## அவன்விடுத்தேகல்.

போரோ கருதி வரிலெவ ராயினும் போர்துலைத்து
நேரோ விசும்பை நிறைகுடி யேற்றுவ னின்னையரோல்
யாரோ யிவரை யிகலிலொப் பாரிவ் விருநிலத்தில்
வாரோய் வனமுலை யாய்மறை கோவில் வனமருங்கே. சாஉக

## அவன்புறங்கண்டு கவன்றுரையாடல்.

என்னயர்க் கென்று மிவர்க்கென்று மேதங் கருதிலிந்த
மின்னயர் வுற்றுயிர் வீடுமிங் கென்றுமிவ் வெற்பிடையே
தன்னைய ருந்திறல் சாயக்கரந்த தலைவனுக்கென்
முன்னைய ருந்தவ மோவறி வோவந்து முன்னின்றதே. சாஉஉ

## கண்டோரிரங்கல்.

இருகுன் றனைய விளமுலை மாதுட னேகுமிவன்
வெருள்கின் றனனென நீற்றனன் கூற்ற மடல்குறித்து
வருகின்ற வாறென வாட்டருஞ் செங்கைச் சினவர்கேட்டே
மருகொன்றி நின்றினி யார்தடுப் பாரொன் றறிகிலமே. சாஉங

## கண்டோர்தமரைத் தெருட்டல்.

குலனு நலனுங் குணமுங்குன் றுத குரிசிலிவ
னலனென் றியவிவள் கற்பினிற் பாள்பி னண்ணியநீர்
வலனும் பொருசிலை வண்மையுந் தொன்மை மரபுங்குன்றுப்
புலனும் பெரிதுடை யீரினி யாமென் புகல்வதுவே. சாஉச

## சான்றோர்விலக்கு.

விற்கொண்ட காளையர் மிளா வறிஞ்ஞரின் மெய்யுணர்ந்தோர்
சொற்கொண்டு மீண்டுதன் றொன்னகர் மேயினர் தோகையிவள்
கற்கொண்ட கானங் கடந்துபொற் சீறடி கன்றினளா
மிற்கொண்ட போதிங் கிதுநின்ற வூர்சுற்றம் யாங்கழுமே. சாஉரு

### பெயர்கவெனவுரைத்தல்.

செழுங்கொண்ட லும்மதி யுந்தவழ் சாரற் றிகழருவிக்
கொழுங்குன்ற வாணர் குலமக ளேபைங் குறைகடற்போ
லழுங்குங் கிளையுநம் மன்னையுந் தந்தையு மாயவெள்ளத்
தொழுங்கும் புகழப் பெயர்கவெம் மோடின் னுளமகிழ்ந்தே. ௨௱௨௬

### தமர்பின்வந்துழிநிகழ்ந்தமைகூறல்.

ஊன்றோய் சுடர்வடி வேல்வல னேந்தி யுடன்றமரி
லேன்றோர் புறங்கவ ரொன்னையர் தோன்றி லிருஞ்சுரத்து
வான்றோய் குலத்து மறவியன் றானை மறைத்தகுன்று
சான்றோ மொழியுமென் றோவெந்த னாருயிர் தாங்கரிதே. ௨௱௨௭

### ஊரதுநிலைமைதோழியுரைத்தல்.

இன்றாக நின்ற விடந்தொறுங் காத றிகழ்ந்தவண்ண
மொன்றாக நின்றலர் தூற்றிய வூரா வோனுடனீ
குன்றாக் கொடுநெறி சென்றனை யென்னக் கொடியவுயிர்
பொன்றா திருக்கினும் யாவினுஞ் சாலப் புலம்பியதே. ௨௱௨௮

### தலைமகற்குநற்றாய்கூறியது.

பூணார் வனமுலைப் பூவையு நீயும் புணர்ந்துடனே
சேணார் கொடுநெறி சென்றவன் றாண்முதற் சிந்தைநொந்து
காணா தலமரு மன்னையு நீசென்று காட்டுதிமின்
கோணாத கற்பினன் மங்கல நாணுமிக் கோலமுமே. ௨௱௨௯

### உடனேபோக்கிடையீடுற்றுவரைத்தல்.

மின்சென்ற வேற்கண்ணி யண்ணல்பின் போகிய வெஞ்சுரத்து
பின்சென்ற வன்னையர் பேதையர் மீண்டு பெரிதுவந்து
முன்சென்ற கேண்மை முறைவழு வாமன் முதுநகர்க்கே
மன்சென்று வேட்கை மணநயந் தார்கடம் வாழ்மனைக்கே. ௨௱௩௰

உடன்போக்கிடை யீடுமுற்றும்.

---

## வரைதல்.

### தலைமகன்வரைந்துழிமகிழ்ச்சி.

பன்னாண் முயன்று வரைந்துட னாகிய பாயலினு
முன்னாட் டளர்ந்தது மெய்முயங் காமன் மயங்கினளின்
றென்னா ருயிரினை யாளுட னாக வியைந்தவின்ப
மன்னா ளமுத மருந்திய வானவ ரானந்தமே. ௨௱௩௧

### புணர்ச்சியின்மகிழ்தல்.

அறந்தங்கு வானிலு மார்கலி சூழ்ந்த வவனியிலும்
பிறந்தென் பதம்மிங்ஙன் பெற்றவ ராரின்று பேரமளிப்
புறந்தங்கு மென்குழற் பூவைமெல் லாகத்தைப் புல்லுந்தொறு
மிறந்தும் பிறந்து மினியமென் போக மியைந்தனமே. ௩௫௨

வரைதன்முற்றும்.

---

# இல்வாழ்க்கை.

### உமையர்வாழ்த்து.

வேலுஞ் சிலையுமில் லாவிறல் வேளன்ன வேந்தனுமிச்
சேலுங் கயலு மனையகண் ணாளுந் திகிரியங்கை
மாலுந் திருவு மதிமுடி யோனு மலைமகளும்
போலுந் தகையின்று போலென்று நீவிர் புணர்ந்திருமே. ௩௫௩

### தோழிவாழ்த்து.

தேற்றிய வஞ்சினம் பொய்யா வகைநின் றிருப்புயத்தி
லேற்றியதொங்க னறுங்குழற் கேற்றி யிலங்கிழையார்
தூற்றிய போல ருந்தொலை யாவெனகண் சோர்புனலு
மாற்றிய வெம்பெரு மான்வாழிவாழி வளஞ்சிறந்தே. ௩௫௪

### பாங்கியைப்புகழ்தல்.

அந்நாண் முதனின்று மின்றள வாய்வரு மப்படர்போய்ப்
பொன்னு ரமளி பொருந்தினம் யாம்பொருந் தாதவரி
னின்னு வரும்பிணிக கின்மருந் தாக யிடைநின் றுநீ
முன்னுண் முயன்ற முயற்சியிவ் வாறு முடிந்ததுவே. ௩௫௫

### பாங்கிபுகழ்தல்.

பனிநின்ற சோலைப் பலவின் சுளைரசம் பாய்ந்துலவுங்
கனிநின்று நீளுங் கனமலை நாட கழைக்கரும்பை
நனிநின் றருந்திய தொக்குமன் றேமின் னுடங்கிடையா
ளெனிநின்ற நாணந் துடைத்தநின் றோடு தொடுத்தநண்பே. ௩௫௬

## தலைமகற்குத் தோழி சொல்லியது.

இன்னிசை வண்டுறை தாரிறை வாமின் னிலங்குவெற்பர்
தன்னிசை வைத்துத் தவறு துனக்குத் தருகவென்று
மன்னிய கேண்மை மறவாம னீயும் வரைகவென்றுங்
கன்னியு நானுங் கடவுளை வேண்டினங் காதலித்தே. சாஙஎ

## ஆராவன்பினவனிலை கூறல்.

முருகவி ழுங்குழன் மோந்திவ ளோந்து முலைபுளகித்
துருகி மயங்கி முயங்கியு நீருல வாதவின்பம்
பெருகுவ தன்றிப் பிரிந்தறி யீர்பின்னை யானுமக்கிங்
கருகிய நாளேன்செய் தீரைய னேயிந்த வன்புகொண்டே. சாஙஅ

## பூங்கொடியன்புயகர்தல்.

தினைக்காவன் மாறி மலைக்கும் வெம்போர்வெஞ் சிலைக்குறவர்
மனைக்காவ லிற்றனி வைகிய நாளும் வரைவிடைவைத்
துனைக்காவ லாய்விட் டுறைந்தவன் றுளு மொழிந்ததெங்கே
சுனைக்காவி யன்னகண் ணாய்தொலை யாநலந் துய்க்குமன்பே சாஙக

## ஆற்றினமை கூறல்.

பூங்காய வீணைப் பணிமொழி யாயிப் பரிசுநெஞ்சிற்
றுங்கா வருநலந் தாங்கரி தோதலை நாளளித்த
பூங்காவி யுண்டு புரவலர் தாம்வந் திரவுபக
னீங்காத நெஞ்சமுண் டென்றஞ்ச மாகிய நெஞ்சுமுண்டே. சாசய

## தலைவியொழுக்கந்தலைவனுக்குரைத்தல்.

கண்டா லெழுலுந் தொழுலுநில் லாமலுங் கண்முன்சொல்வ
துண்டாயி னென்று பலவுக் குரைத்தலு மொண்கமலத்
தண்டா மரையவர் *சான்றோ ரருள்பெருந் தன்மையுமுட்
கொண்டா ளுரையன்றி யேகுறிப் பாணங் குலக்கொடியே சாசக

## உண்டியினுவத்தல்.

முருகொன் றியதல்ல பல்லவத் தல்ல முகிழ்த்தரும்பக்
கருகுங் கயலன்ன கண்சிவப் பூறக் கமழ்புகையுட்
செருகுங் கருணையுந் தீம்பா லடிசிலுந் தேவரன்று
பருகும் மமுதமன் றேவென்னை யாளும் பசுங்கொடியே சாசஉ

---

* சான்றோருளம பெருதன்மையு மென்றும் பிரதிபேதம்.

### காதனிலையுரைத்தல்.

தோளிற் கரும்பு முலையிற் கொடிவிடு தொய்யிலுங்கண்
வாளிற் களவின் மறுமையுந் தீயின் மணிமவுலி
தாளிற் பணியுந் தளரிடை நையத் தனத்தினுட
னாளுக்கு நாளு நலம்புதி தாக நடக்கின்றதே. ௪௱௪௩

### மணமனைசென்றசெவிலிக்குத்தோழிசொல்லியது.

அணங்குங் கடவு ளணிநெடுந் தேரண்ண லையொழிய
வணங்குங் கடவுண்மற் றொன்றறி யாள்வரி வண்டினங்க
ளிணங்குஞ் சுரிகுழல் வல்லியன் னாடங்கு மில்லதன்றிக்
கணங்கொண் டெழுஞ்சுடர் பட்டறி யாதவர் காதலரோ. ௪௱௪௪

### செவிலிக்குத்தோழியில்வாழ்க்கைநன்றென்றல்.

பானா றடிசிலு மூனார் கொழுங்குறைப் பாகுமுற்ற
தேனார் கருனையுந் தீம்புளிப் பாகுநின் சேயிழையா
ளானாத வன்பி னமைத்துமிழ் வாரி யமுதென்றன்பர்
தானார நல்கி யகமகிழ் கூருந் தகுதியளே. ௪௱௪௫

### நற்றாய்க்குச்செவிலிதலைமகள்வாழ்க்கைநன்றென்றல்.

அருந்தும் பசியு மடுமெணற் சோறு மயர்த்திறைவன்
வருந்தும் பசிக்குமில் வாழ்க்கையும் வேட்கையும் வண்மையுடன்
பொருந்தும் விருந்தும் புறந்தரு நீர்மையும் போற்றியன்றித்
திருந்துந் திறஞ்செய லுங்கற்ற வாநின் றிருமகளே. ௪௱௪௬

இல்வாழ்க்கைமுற்றும்.

---

## பரத்தையிற் பிரிவு.

### புலவிக்கேதுக்கூறல்.

பங்கே ருகத்தண் பழனநல் லூரன் பவனிவரக்
கொங்கேர் நறுங்குழற் கோதையர் கண்டு குவித்தகையு
மங்கே யவரவ ரன்புக் கருள்செய் தமைத்தகையும்
பொங்கே ரிளமுலை யாள்புல வாவகை *போவதன்றே. ௪௱௪௭

---

*போதவன்றேயென்றும் பிரதிபேதம்.

## தனித்துழியிறைவிதுனித்தழுதிரங்கல்.

மருப்பார் வனமுலை மங்கையர் சேரியில் வைகலுந்தன்
விருப்பா லுறைநல மேவிய காதலர் வேட்கைவெந்தீ
யுருப்பா லுருகிய வாவியும் பாவி யுடம்புங்கொண்டே
யிருப்பார் பிறருமுண் டோநெஞ்ச மேயிங் கெனையொழித்தே. ௩௭௪

## அடிசிலமைத்துமடவாளிரங்கல்.

அலையேற் றியவிப்பி வைத்தடுப் பாக வரும்பவிழ்தே
னுலையேற் றியசங்கி னித்திலம் பெய்தபி னுண்டிலார்
கலையேற் றியநுத லாரடுஞ் சோறிடக் கைக்கமலத்
திலையேற்று வெம்பசி யின்றிலை யோநம் மிறைவருக்கே. ௩௭௫

## இரவினுமெய்தாவுரவோற்கிரங்கல்.

காவும் பருமணற் கானலும் போயருங் கங்குலினும்
வாவும் பரிநெடுந் தேர்வரக் காண்கிலம் வாவிதொறு
மேவுங் கருங்கயல் செங்கழு நீரின் மிசைபிறழப்
பூவும் புலவுங் கமழ்புன லூரன் புகழ்ச்சிநன்றே. ௩௭௬

## ஈங்கிதுவென்னெனப்பாங்கிவினாதல்.

மறையிற் புணர்வன்றி மன்றற் புணர்வின்று வாய்த்தநன்று
ணிறையிற் சிறந்தநன் னீர்மையெல் லாநிறை நீருணின்று
பொறையற்ற வேட்கையி னுற்புலந் தாரின் நலஞ்சிதையக்
கறையுற்ற வேற்கணல் லாயென்னை யோவந்த காரணமே. ௩௭௭

## இறைவன்புறத்தொழுக்கிறைமகளுணர்த்தல்.

வாரேற் றியமுலை மங்கையர் தங்களை வைகலும்பொற்
றேரேற்றி வந்து மகிழ்மணஞ் செய்யவுஞ் சேரியன்றி
யூரேற் றியபுன லூரன் றகைமையை யுள்ளுந்தொறுந்
தாரேற் றியகுழ லாய்தழ லாமென் றனிநெஞ்சமே. ௩௭௮

## தலைவியைப்பாங்கிகழறல்.

மாலைக் குமுத மலர்தரு தேனுண்ட வண்டுவரக்
காலைக் கமலங் குவிந்தது வோவருங் கற்பினுக்கங்
கேலக் கருங்குழன் மங்கையர் காதல ரென்செயினுஞ்
சீலத் தியல்புகுன் றார்வருந் தேல்மெய்த் திருந்திழையே ௩௭௯

## செவ்வணியணிந்துசேடியைவிடுத்தல்.

பரிதி நிறத்த பணிதுகி லார்த்துப் பணைமுலைமேற்
குருதி நிறத்தொளிர் குங்குமஞ் சேர்த்தியிக் கோலங்கொண்டு
கருதி யகற்புக் கடனெறி கூறிநங் காதலர்க்கு
வருதி யெனப்பகர்ந் தேவிடுஞ் சேடியை வாணுதலே. சாஙச

## செவ்வணியுழையர்கண்டழுங்கிக்கூறல்.

தம்பே ருலகறி தையனல் லார்மனை தங்குமெங்கோ
னம்பேர் மறந்ததை நாமறிந் திங்ஙன நாணழிந்த
செம்பே ரணிநலங் கொண்டுநஞ் சேடியர் சென்றுநிற்பக்
கொம்பே விதித்ததை யோகொடி தேநங் குடிப்பிறப்பே. சாஙரு

## பரத்தையர்கண்டுபழித்தல்.

தண்ணந் துறைவன் மனையுறை பாவை தகுதிசொல்விற்
பண்ணென் றியமொழி யீர்வசை யேற்பணி வார்குவளைக்
கண்ணுங் குழலுங் கருகித் துகிலுங் கனதனமும்
வண்ணஞ் சிவந்து வெளுத்தது நாணு மடமையுமே. சாஙசு

## வாயினேர்வித்தல்.

புறத்தா ரொழுகி வரினுமிப் போது புகையுயிர்த்த
லறத்தாறு மன்பு மருளுமன் றேயன்பர் தேர்கடவி
மறத்தானை வாள்விழி யாய்மணி மாளிகை வாசல்வந்துன்
றிறத்தார் வழுற்று நின்றுறொதிர் கோடல் சிறப்புடைத்தே. சாஙஎ

## உழையர்தலைமகன்வரவுணர்த்தல்.

நந்தாப் பழனக் கழனிநல் லூரர் நறுங்கழுநீர்ச்
செந்தா ரணிகுழற் சேடிசெல் லாமுன் றிருந்திழையார்
சந்தாப மாற வுலகிய னோக்கித் தலைவியிற்கண்
வந்தார் வழுவுவ ரோபெரி யோர்தம் மரபியலே. சாஙஅ

## கிழவோடன்மையுழையோர்கூறல்.

பலரும் பரவப் பணிமலர்க் காவும் பழனமுஞ்சென்
றலவுங் குறிசி லொருதனி யேவந் தொளியிழையி
ரிலகுந் திருமனை யெய்துமுன் யாரு மடுப்பவெய்தா
மலர்மென் குழலி மனந்துனி மாறி மகிழ்வுற்றதே. சாஙகூ

### தலைவனுந்தலைவியுங்கலவியின்மயங்கல்.

உள்ளத் துவகை யொருதலைப் பட்ட விருதலைப்பைம்
புள்ளொத் தினிய புதுமலர்ப் பாயற் புணர்ந்தவின்ப
வெள்ளக் கடலிடை வீழ்ந்துட னீந்துவர் மெய்மறந்து
வள்ளக் கமல வளவய லூரனு மாதருமே. ௩௱௯௰

### மகப்பொறைகூர்ந்தவண்ணமுரைத்தல்.

சீலந் தகைபெறு சாலியன் றன்சிறு வற்றரித்த
காலந் தமது கவினுறப் பெற்றன காலமின்று
கோலந் தருஞ்செங் குமுதமு நீலமுங் குன்றெடுத்த
பாலன் றுயில்கொண்ட பாயலுங் காலைப் பதுமமுமே. ௩௱௯௧

### வெள்ளணியணிந்துவிடுத்தல்.

துதையுஞ் சுரும்புறை மல்லிகை வேய்ந்துவெண் டேசுபுனைந்
திதையங் களிவர நித்திலம் பூண்டெதிர்ந் தாருடலம்
புதையம் பனைய விழிமட மாதர்பொற் பூண்புதல்வ
னுதயம் புகல விகலிமுன் னோடுவ ரூரனுக்கே. ௩௱௯௨

### வரவுகண்டுவாயின்மொழிதல்.

புறந்தாழ் சுரிகுழற் பூவையன் னீர்பொறை பூண்டவற்கின்
றறந்தா னுறுதுணை யாயதன் றேதம் மகமகிழ்ந்து
மறந்தாழ் களிற்றன்பர் வந்தன ராகம் மரபினுக்குச்
சிறந்தா னொருவன் பிறந்தா னிவனென்று செல்லுமுன்னே. ௩௱௯௩

### வாயின்மறை.

*கையார் வரிவளைக் காரிகை நீயுங் கடும்பரியு
மையார் விழிவலை மங்கைய ரில்ல மறந்துவந்த
தெய்யா திருந்தில னையா வருமணி யீன்றெடுத்த
மெய்யார வும்மவர் தந்துணி வாரவு வேண்டுமின்றே. ௩௱௯௪

### யாணனைக்காணவிரும்பல்.

செய்யுந் தவமுடை யேன்சென்று காண்குவ தேசெலவி
மையுண் குவளை மடங்கொளு நோக்கு மனமகிழ்வுங்
கையுங் குழவியுந் தீம்பா லெழிக்குங் கனதனமு
நெய்யும் பசந்து நிலவெழு மேனியி னீர்மையுமே. ௩௱௯௫

---

* இந்தப்பாட லொரோ பிரதியிலிருந்தமையால் அவ்வாறே பதிப்பிக்கப்பட்டது.

## தோழிவாயில்வேண்டல்.

மருவார் குழலி வருந்திய மெய்யு மகவுங்கையும்
பருவார் முனிந்த பெருந்தன பாரமும் பச்சுடம்பு
மொருவாத வுள்ளத் துவகையுங் காணநம் மூரர்நின்பொற்
றிருவாசல் வந்துநின் றூறி யேனின் றிருவுள்ளமே. ௪௱௬௬

## வாயினேர்வித்தல்.

கரப்பற்ற வன்புட னின்புற மார்வங் கலந்தகொங்கை
பொரப்பெற்ற வெங்கையர் தங்களை நீங்கிப் புகன்றதெய்வந்
தரப்பெற்ற செல்வன் றிருமுகங் காணத் தலைவனிங்கு
வரப்பெற் றரிதினன் றேமற்று நீ யென்னை வாழ்விப்பதே. ௪௱௬௭

## புதல்வனைக்காண்டல்.

ஆவுங் கனகமுமந் தணர்க் கீந்தங் கமரர்க்கெல்லாம்
பூவும் புகையும் பொழிந்தவி போற்றிப் புதியபண்ணும்
பாவும் புனைந்து பரிசிலர் பாடப் பருவநன்றி
யாவும் பெறவெடுத் தான்குடித் தோன்றலை யேந்தலுமே. ௪௱௬௮

## கலந்துழிமகிழ்தல்.

மரகத நன்னிறம் பொன்னிற மான வடிவுமுற்று
நிரைதருஞ் சாபமு நீலோற் பலமு நிவரரும்பும்
விரைகமழ தொண்டையு மெல்லியல் காம வெருப்புங்கண்டு
கரையழி யன்புறு மின்புறு மூரன் களிசிறந்தே. ௪௱௬௯

## விழிதுயில்கண்டுவந்துழியுரைத்தல்.

மானுங் கலையு மறிந்தகம் விம்ம மகவும்வல்லி
தானுந் தலைவனுந் தங்குமிப் பாயற்குத் தாழ்வுவண்டுந்
தேனுஞ் சுரும்புஞ் செறிகுழ லீரிந்தச் சேயைப்பெற்ற
கோனுங் கவரியுங் காணப்பெறாத குறை யொன்றுமே. ௪௱௭௰

## புலத்தல்.

ஆம்பால் வரையின ரன்பா லறிந்தில ரன்னமன்னீர்
போம்பா லனையசொற் பூவையர் சேரியிற் புல்லியிங்ஙன்
யாம்பா லனைக்கொண் டினிவைகல் போக்குது மெம்முலையிற்
றீம்பால் படிலவர் செய்குறி மார்பிற் சிதையுமன்றே. ௪௱௭௧

### பள்ளியிலழுங்கல்.

துணையேது மின்றி நடுங்குமின் போலுந் துடிமருங்குற்
பிணையே மடநடைப் பெண்ணமு தேயின்பப் பேருததிப்
புணையே யனைய பொருளுந் தனமுமிப் பொங்கமளி
யணையே பொருந்தி வருமற்ற மோவெமக் காவதின்றே. ௬௭௨

### பதங்கம்பழிச்சல்.

*அறவோர் மொழிந்த வனந்தவன் காத்த வகன்புறவுக்
குறவோ பதங்க வியங்கமன் றேவுத விக்குதவி
நறவோடு தண்புன லுடனென் றேயென் கணல்கியதான்
மறவோ மிதற்குள்ள வாசியெந் நாளு மடமயிலே. ௬௭௩

### புதுப்புனல்வரவுணர்த்தல்.

ஏராடு சிந்துர விந்திர சாப மிறைஞ்சுநுதல்
வேர்வாட நீல விழிசிவப் பாட விளங்கிழையார்
தாராடு பைங்குழற் பின்னக மாடத் தழுசிவிறிப்
போராட வந்தது தண்புன லாடப் புரவலற்கே. ௬௭௪

### புனையிழைமகளிர்புனலாட்டுவிரும்பல்.

குருகோடு கம்புட் குலமிருந் தார்ப்பக் கொடுந்திரைகு
ழிருகோடு மள்ள ரெறிமணி யார்ப்ப விடுமெணற்குன்
றருகோடு தண்புனல் வண்புன லூரனெ டாடுதற்கு
வருகோடி யன்புடை யாரொரு கோடி மடந்தையரோ. ௬௭௫

### பரத்தைதற்புகழ்தல்.

அரியார் மதர்விழி யாயமுந் தானு மகன்றுறைவாய்
விரியார் கருங்கழன் மன்புறங் காப்பினு மென்புறமே
புரியா தொழுகுவ னேலழி யாத புகழ்படையாக்
கரியார் திருவிற் றரியா துடைகவென் கைச்சங்கமே. ௬௭௬

### புனலாடியதில்லையென்றதலைமகற்குரைத்தல்.

எந்திய வள்ளத் தினியக ளுமகிழ் வெய்தவைத்து
மாந்திய மாதருன் மால்வரைத் தோண்மலி நீர்ப்புணையா
நீந்திய வாறெம்மை நீமறைத் தாலென் னெடுவிசும்பிற்
காந்திய ஞாயிற் றொளிமறைத் தாரெவர் கைவிரித்தே. ௬௭௭

---

* ஒரோ பிரதியிலிருந்தமையால் அவ்வாறே பதிப்பிக்கப்பட்டது.

## அங்கவர்யாரையுமறியேனென்றல்.

மன்னும் புலவியை மாற்றியுந் தேற்றியும் வல்லவண்ண
மின்னுந் தெளிந்திலை யென்னையென் னேயென்செய் கேனிதற்கு
முன்னம் படிந்து முழுகுநன் னீர்க்கங்கை முன்னுறையு
மன்னம் படியுங்கொல் லோவுவ ராழியி லாரணங்கே. சாஎஅ

## காமக்கிழத்தியைக்கண்டமைகூறல்.

தேரொன்று வீதித் தெரிவைநின் பாலனைக் கண்டுகையால்
வாரொன் றணைத்து மணிமுத் தருந்தி மகிழ்ந்திடநா
ளொன்று கூற வவளறி யாமனின் னன்னையென்ற
னீரின்று சொன்னதெல் லாமென்ன மாய நெடுந்தகையே. சாஎகூ

## தலைவியைப்பரத்தைபழித்தல்.

தேமே குவளையுஞ் சென்னலுங் கன்னலுஞ் சேர்ந்தநன்னீ
ராமே கழனி யகன்புன லூர னகலமெல்லாம்
யாமே விரும்பின மென்றெம்மை யேசுவர் போலத்தம்மைத்
தாமே பழிப்பர் தலைவியர் தாமுந் தனம்படைத்தே. சாஅ0

## காமக்கிழத்திபரத்தையைப்பழித்தல்.

முருகார் முளரியு முள்ளியு முண்டக மூரியரம்
பொருகா ரிரும்புங் கனகமும் பொன்பொங்கு தாரகையும்
குருகார் தடங்களிற் கெண்டையு கேகொங் குரிசிலுக்கு
வருகாதன் மிக்கு வரைந்தவர் யாரும் வரைவியரோ. சாஅக

## நற்பரத்தையையநயப்புப்பரத்தைபழித்தல்.

கோடலஞ் செங்கைநல் லார்கொங்கை யேற்றமு மெங்களுடன்
பாடலங் காவும் பருமணற் குன்றும் பயின்றுதம
ராடலும் பாடலுங் கண்டுகொண் டாடுவ தன்றியன்பி
னூடலுங் கூடலு முண்டுகொல் லோபொய்கை யூரனுக்கே. சாஅஉ

## சூடாதுகூறல்.

பொலன்கலன் சேர்த்திப் புரிநூ லணிந்து புனைவயிர
மிலங்குதண் டேற்றி யினியசெய் யூட்டி யிருவிணையேன்
வலங்கொளுஞ் செஞ்சுட ரோமறந் தாலொன்ன வஞ்சினமுட்
கலங்குகின் றேனரு ளாய்கது வாமற் கடைக்கணித்தே. சாஅ௩

## கனவிற்கண்டுகலங்கல்.

நெய்யுண் சுரிகுழ னேரிழை யாய்நென்ன னீளிரவின்
மையுண் குவளை மலிபுன லூரன் மலர்க்கமலக்
கையுந் தலையுமென் காதுமொன் றுன கனவுதன்னை
மெய்யென் றருவினை யேன்விழித் தேனென் விழியிமையே. ௬௮௪

## பாணன்வாயின்மறை.

எவார் நயனியர் தன்மைக் கியைந்தன்றி யின்மைசொல்லாக்
கோவாய பாண குறியுமுண் டோகுறித் தார்தமில்லங்
காவா தவூரொங் தங்கையர் முற்றம கற்றிடினு
மேவாது டற்றினும் போகா வுளொவ் விடத்தினுமே. ௬௮௫

## பாணன்கூற்று.

ஆறு முனிவுக் கடியேன் பொருளல்ல வாயினுமிங்
கேறுத விண்ணப்ப மிங்கிது கேட்டரு ளெற்றிவுளி
மறு தழுங்கப் புடைத்தா ரிருக்கவம் மத்திகையை
வேறுகி நின்று வெறுப்பதென் பாவம் விளங்கிழையே. ௬௮௬

## விறலிவாயின்மறை.

அயிலுங் கயலு மனையகண் ணஞ்சன மாற்றிவஞ்சத்
துயிலுந் துடைத்தவன் றேசெவி தாழ்த்தது சோர்ந்ததுள்ள
மயிலின் புறத்து முருகனைப் போல வருமகிணன்
பயிலும் பரத்தையர் பாடியிற் பாடினி பாடினியே. ௬௮௭

## கூத்தர்வாயின்மறை.

வடிக்கண் ணியரொடு வந்தென்னை நீவந் தனைசெயினு
நடிக்கும் பழைய நடத்திலொன் றுமின் னடிமறவா
ரடிக்கண் ணதிரக் கழல்விரி நாமங்க ளாரியவிப்
படிக்கண் ணகர்முழு தும்பாடி யாடும் பரத்தையரோ. ௬௮௮

## காமக்கிழத்திவாயில்வேண்டல்.

வெறுக்கத் தருவன செய்யினு மூரன் விளங்கிழைநீ
பொறுக்கத் தகுதியென் போலில்லை யே[illegible]புரவியின்றிச்
சிறுக்கத் தலங்கொண்டு தேர்கட வாநின்ற சிங்கம்பெற்றுங்
கறுக்கத் தருவனென் றேசிவப் பூருநின் கண்ணிணையே. ௬௮௯

## காமக்கிழத்திகூற்று.

பைக்கொண்ட வல்குற் பருமம் புனையும் பரத்தையர்மேல்
மெய்க்கொண்ட வம்பு மிகுந்தனை யேல்வினை சென்னலொடு
மைக்கொண்ட நீல வளவய லூர வளைப்பலுன்னைக்
கைக்கொண்ட வெங்கள் கவினளித் தேகுநின் காதல்கொண்டே. சாகய

## விருந்துகண்டிறைவிபெருந்துனியொழிதல்.

வண்டார் கொழுநன் வ்ரவது கேட்டு மலர்க்கணம்பு
கொண்டாள் புருவச் சிலைகுனித் தாடன் குளிர்பிறைசூழ்.
வெண்டா மரையின் வெயர்த்துயிர்த் தாணல் விருந்தயலே
கண்டாள் முகமலர்ந் தாள்புலர்ந் தாளருங் கற்பினையே. சாகக

## [illegible]ருந்துடன்வந்தோனறிந்துடன்மகிழ்தல்.

கரு[illegible]ான்று வார்குழற் கண்ணியில் வாழ்க்கையுங் கையுஞ்செவ்வாய்
முருந்தொன்று மூரன் முறுவலுங் கூர முகமறியா
விருந்தொன்றி வேறென்றின் மீளா வருந்துனி மீட்கநல்ல
மருந்தொன்று வந்திங்ங னேமன மேயின்று வாய்த்ததுவே. சாகஉ

## சேக்கையிற்புலத்தல்.

திருத்திய வன்பர் திளைக்கின்ற வின்பச் செறுக்கிடையே
கருத்திலங் குற்ற கலாபம் மறிந்திலங் காதலியா
ளொருத்தியென் றுன்னை யொருவனென் றேயிருந் தேனினிநீ
யிருத்தியென் றேமொழி யாவொழித் தாள்பள்ளி யின்னகமே. சாகரு

## சீறேலென்றவள்சீறடிதொழுதல்.

படர்ந்தக லாமின்ன தென்றுரை யாமற் பயிலமளி
கடந்தக லாபங் கலைபுறஞ் சூழக் கதந்தணியத்
தொடர்ந்தக லாத துணையடித் தாமரை சூடவள்ளல்
மடந்தைபொ ருதென்செய் வாள்மலி நீர்கண்கண் மலகினளே. சாகசு

## இஃதெங்கையர்காணினன்றன்றென்றல்.

தொடிவைத்த செங்கய லேவானு லாவுந் துறைசெய்ததோர்
வடிவொத்த சிந்தை மலிபு[illegible]ர வணங்கியநின்
முடிவைத்த செங்கையு மென்முலை யாக முயங்கவந்தென்
னடிவைத்த செங்கையு மெங்கையர் காணி லறவுநன்றே. சாகடு

## புலவி.

பங்கய மல்லற் பழனநன் னாடும் பதியுமில்லு
மெங்கையர் போல வினியமல் லேமெங்கள் பாற்றொடர்பு
செங்கயல் பாயுங் கருங்கய மேவிய சேவலன்னஞ்
சங்கய லேதிரி தண்புன லூர தகுவதன்றே. சாகசு

## புலவிநீக்கல்.

குளங்கெழு தாமரை வண்டின மேற்குதி கொண்டகெண்டை
யிளங்கமு கின்குலை சிந்துநன் னாட விறைஞ்சுசெந்நெல்
விளங்கெழு நாடும் வயல்சூழ் நகரு மரபுமிக்கோய்க்
குளங்கெழு கேண்மைநன் றேவெங்க ளோடிவ் வுலகத்திலே. சாகஎ

## பாங்கிதலைவன்கொடுமைசாற்றல்.

இன்னா தனவு மினியதெ னாமற் றிணையனவு
மன்னா மகிழ்வு மிகழ்வும்வந் தால்வளர் காட்டெருமை
நன்னா குறங்கு நளிர்புன லூர னலஞ்சிறந்த
பொன்னார் வனமுலை யென்னநின் னோடு புலப்பதுவே. சாகஅ

## தோழிவாயின்மறுத்தல்.

நெறியா ரலங்கன் மணிமுடி யாயின்று நின்னையன்றி
யறியா விவளிங் கரியளென் றேமண்ணி லாரிடத்துங்
குறியாத வன்புடைக் கொம்பனை யாரைக் குறுகியந்தண்
முறியார் களப முலைமுகந் தோறு முயங்குவதே. சாகக

## வாயினேர்வித்தல்.

பூவே யனைய புரிகுழற் பாவையர் பூவில்வரு
மாவே யனையர் வரிகழற் காளையர் வாணெடுங்கண்
ணேவே யனைய விலங்கிழை யாய்நின் றிரங்கலென்றே
நீவே யனைய நிரைவளைத் தோளி னிறம்பசந்தே. ருா

## புதல்வனைவாயினேர்வித்தல்.

முரியவி சும்பு முழங்கமுன் வந்த முதுகளிற்றைத்
திரிய முனிந்த திறலின னீயின்றென் சேயிவரக்
கரிய நறுங்குஞ்சி கிஞ்சுக வாயிதழ்க் கன்னலின்சொல்
லரிய விளங்களிற் றுக்கஞ்சு வானென்கொ லாண்டகையே. ஓாக

## புதல்வன்வாயில்வேண்டல்.

பண்டுவந் தார்சிலர் பாணரும் பாகரும் போலுமல்ல
விண்டுவந் தாலன்ன மென்குழ லாய்விரை யார்பழன
வண்டுவந் தாலும் வளவய லூரன் மதலையையுங்
கொண்டுவந் தாலென்கொ லோவினி நீதுனி கொள்கின்றதே. ௩௱௨

## புதல்வற்புலத்தல்.

மைவார் குழல்மட மங்கையர் தங்கள் வதுவையுன்னிக்
கைவா ரணங்கட வும்பெரு மானைக் கலுழ்ந்தழைத்துன்
செவ்வா யமுத மளைந்தசெஞ் சாந்தஞ் சிதையப்புல்லி
யிவ்வாறு செய்ததெல் லாமவர் மேனியி லேறுவதே. ௩௱௩

## மகற்கறிவுறுத்தல்.

கொய்யுஞ் சுவற்பரி யுங்குலப் பாகுமுட் கோலுமில்லா
வையங் கடவு மதகளி றேவருந் தாமலெங்கை
செய்யும் பெருந்தவ மேகலந் தாருழைத் தீமையையும்
பொய்யுங்க லாதொழி வாய்புன லூரனைப் போலவின்றே. ௩௱௪

## மகற்பழித்துரைத்தல்.

குன்றே யனைய கடவுட் குலம்வலங் கொண்டுவந்த
தென்றே விடுதத் திருவினை யேயினி யெங்கயர்பாற்
சென்றே வருக மறக்கவின் றேசெம்ம லூரன்செல்வக்
கன்றே வுனக்குங் கசந்தன வோவிக் கனதனமே. ௩௱௫

## உணர்ப்புவயின்வாராவூடல்.

கருகாத நீலமுங் கூறுப் பவளமுங் கால்வளையு
மிருகார் முகம்பற் பராகமும் வானவி லின்றமுத்துஞ்
சருகாய நெஞ்சத் திடையெழுங் காமத் தழன்முகத்து
முருகா வயிரமு முண்டுகொ லோநம் மொளியிழைக்கே. ௩௱௬

## கழிந்ததுநிகழ்த்தல்.

ஈன்றோர் வருந்த விருஞ்சுரப் போக்கு மெயினரில்லின்
மான்றோல் படுத்து வதியுந் துயிலும் வனத்திடையே
யூன்றோய் கடுங்கணை நின்னையர் தோன்ற வொளித்ததுவுங்
கான்றோய் மலர்க்குழ லாய்மற வேனொரு காலத்துமே. ௩௱௭

### தலைவற்குத் தோழி கூறல்.

நிழலைச் சுளித்து நிமிர்களிற் றுயர்ந்த நீர்கொண்டன்றி
யழலைத் தழல்கொண் டவித்தவ ராரமு தார்குமுத
மழலைக் கிளிமொழி வஞ்சியன் றனெஞ்சும் வாள்விழியுஞ்
சுழலச் சுழலுந் துனியொழிப் பாயத் துனிபொழிந்தே. ௫௱௮

### ஆற்றாமைவாயில்.

வில்லார் புருவ நெரியத் திருநுதல் வேர்வரும்பக்
கல்லார மன்னநின கண்பனி கூரக் கலந்தொருசொற்
சொல்லாத தொண்டைத் துவர்வா யதரந் துடித்துநிற்ப
வல்லார் குழலணங் கேயப ராத மறிந்திலனே. ௫௱௯

### தலைவன் பொய்மை தலைவி கூறல்.

தேனுகர் வண்டு ஞிமிருஞ் சுரும்புஞ் செறிகுவளைப்
பூநகு தண்புனற் பொய்கைநல் லூரர் புதுப்புனலுங்
கானமர் புள்ளுங் கடவுளும் வாசியுங் காய்சினமால்
யானையு மாவர்கொல் லோநாளு நாளும்வந் தெங்கையரோ. ௫௱௰

### புணர்ச்சியின் மகிழ்தல்.

சுரும்புங் குவளையு மன்றிலும் பேடுந் துணர்விரிபூங்
கரும்புங் கவளக் களிறுமன் றேகடற் பாலமுத
மரும்புந் துணைமுலை யாகங் குளிப்ப வறிவழிந்து
விரும்புங் கலவி நிலத்திரு வேமும் விளங்கிழையே. ௫௱௰௧

### புணர்ச்சியில் வெதும்பல்.

நிறைபோ னதுமட நாணமும் போயது நின்றநெஞ்ச
மறைபோ னதன்றிங் கவன்வழி யேயென் னணிவளையு
மிறைபோ னதுபின்னை நீயுமிங் கில்லை யிலங்கிழையாய்
பொறைபோன வன்புடை யாரொங்ங னேபின் புலம்புவதே. ௫௱௰௨

### பாங்கி தலைவனைப் புகழ்தல்.

அறத்திற் றருமன் பொருளிற் றனபதி யாய்ந்தவின்பத்
திறத்திற் சிலைமதன் சிந்தையிற் புத்தி திருந்துவண்மைப்
புறத்திற் புவியயல் போற்றுங் கலையிற் பொதியமுனி
மறத்திற் சிறந்த வளவய லூரன் மடங்கலின்றே. ௫௱௰௩

### பாங்கிதலைவியைப்புகழ்தல்.

சற்புக் கருந்ததி நாணுக்கு மானக் கவரிகன்மான்
பொற்புக்கும் வாய்ந்த பொறைக்கும்பொன் பூமகள் கோமகன்ற
னற்புத் துணைவி யறத்துக் கெலாமன்னை யாடகமால்
வெற்புக் குயர்ந்த மணிக்குநந் தாத விளக்கொளியே. ௩௰௪

பரத்தையிற்பிரிவு முற்றும்.

---

## ஓதற்பிரிவு.

### தோழிக்குரைத்தல்.

தானே யருங்கலை தந்தவன் சங்கப் பலகையின்கீழ்
மானே பதங்கள் வருந்தமுன் னின்றதும் வாய்த்தசெஞ்சொற்
றேனே யருட்பொரு டேடவும் பாணர்பின் சென்றதுவுங்
கானே கமழ்கொன்றை யானறி வோர்தரங் காட்டியதே. ௩௰௫

### தலைவிக்குரைத்தல்.

பணைத்தாங் குலகிற் பலகலை நூலும் பழுதறவே
யுணர்ந்தா ருணர்வை யுணர்தலுற் றூருண ராதபுல்லர்
குணர்ந்தா னெனநுடங் குங்கொடி போலிடைக் கொவ்வைச்செவ்வாய்
மணந்தாழ் மடமயி லேவரு வாரின்று மன்னவரோ. ௩௰௬

### பிரிவுடன்படாமை.

பாயுங் கயலொண் பழனநல் லூரவெம் பாவையைநீத்
தாயுங் கலையி னகத்திலை போலு மளியினமேன்
மாயஞ்செய் துள்ள மயங்க முயங்கி மருவியவப்
பேயின் றிறத்துப் பிரிதலின் றுவென்று பேசுவரோ. ௩௰௭

### தலைமகள்கார்ப்பருவங்கண்டிரங்கல்.

கற்றவர் கற்ற கலைமாக் கடற்கரை காண்பதற்கே
யுற்றவ ருற்ற துணர்ந்திலர் போலொரு மூன்றரணஞ்
செற்றவர் கற்றைச் சடைக்கொன்றை காட்டத் திருமடந்தை
கொற்றவர் போலிவ் விருவிசும் பேறிய கொண்டல்களே. ௩௰௮

ஓதற்பிரிவு முற்றும்.

---

# காவற்பிரிவு.

### பிரிவுணர்த்தல்.

அல்லவை நீக்கி யறப்புறங் காக்கவு மாதுலர்கள்
சொல்லுவ கேட்டவர் துன்பந் துடைக்கவுஞ் சூழ்கடற்பா
றொல்லையி லொன்றையொன் றின்று செயுமிகல் வாட்டுதற்குஞ்
செல்லுவ தேகட னும்நாடு காவல் சிறந்தவற்கே. ௫௱௰௯

### பிரிவுடன்படாமை.

பண்காவல் கொண்ட பனிமொழிச் செங்கைப் பசுங்கிளிக்குன்
கண்காவ லென்பது கண்டுசொல் வீர்சொற் கருங்கடல்சூழ்
மண்காவல் கொண்ட வடிநெடு வேன்முடி மன்னவர்க்குப்
பெண்காவல் கொள்கை பெரும்பழி போலும் பெருந்தகையே. ௫௱௨௰

### தலைவன்பிரிவுபாங்கிதோழிக்குணர்த்தல்.

ஆடுங் கொடிநெடுந் தேரன்பர் காளை யறப்புறனு
நாடும் புரக்க நயந்தனர் போலு நறைமதமாக்
கோடுங் குரும்பையுஞ் செவ்விள நீருங் குறித்தசெப்பு
மோடும் புறங்கண் டுயர்தன பாரத்தி லொல்கிடையே. ௫௱௨௧

### தலைமகள்கூதிர்ப்பருவங்கண்டுவருந்தல்.

நிறைசூ லெழிலி பொழிந்துகண் மாறிய பின்னைநின்ற
குறைசூழ் புறவு குழைப்பவிண் சோருங் குறுந்துளிகொண்
டறைசூறை வாடை யலைக்குமின் னளிங் கறிந்திலர்கொல்
நறைசூழ் மலர்க்குழ லாய்நாடு காவ னயர்ந்தவரோ. ௫௱௨௨

காவற்பிரிவுமுற்றும்.

---

# பகைதணிவினைப்பிரிவு.

### பிரிவுணர்த்தல்.

மூளா வரும்பகை மூண்டிரு வேந்தர்கண் மொய்யமரின்
மாளா வகைசென்று மாற்றுதல் வேண்டி மணிவளைவேய்த்
தோளாய் பிரிந்து வருநா ளளவுஞ் சுரும்பியிருந்
தாளார் மலர்க்குழ லாள்வருந் தாவகை சாற்றுகவே. ௫௱௨௩

## தோழிபிரிவுவிலக்கல்.

வேயுஞ் சரும்பும் விரும்பிய தோளிந்த மெல்லியலு
மாயும் பகைகொண் டிருக்கவைத் தோவெதிர்ந் சார்முனையிற்
பாயும் புரவிப் படையிரு வேந்தர் பகைத்தவரைப்
போயுந் துணிந்து பொருந்திடு மாறு வருந்துவதே. ௫௱௨௪

## பாங்கிதலைவிக்குணர்த்தல்.

பரிகெழு தானை யிகலிரு வேந்தர் பகைசணிப்ப
வரிகழ லாண்மைநம் மன்னர்சென் றார்கொன் மணிபருவி
சொரிமழை தாழ்வரைத் தோகையஞ் சாரற் றுடிமருங்குற்
புரிகுழல் வாணைப் பூண்முலை நாண்மலர்ப் பொற்கொடியே. ௫௱௨௫

## முன்பனிப்பருவங்கண்டிரங்கல்.

பருந்தார் சுடரிலை வேற்படை வேந்தர் பகைதணிப்பப்
பிரிந்தார் வருகிலர் பெய்வளை யாய்பிர சம்புலர்ந்து
கருந்தா மரையெனச் செந்தா மரைகரு சப்பெருக
வருந்தார் வருந்துர மஞ்சுதற் கோடி வரும்பனியே. ௫௱௨௬

பகைதணிவினைப்பிரிவமுற்றும்.

---

# உற்றுழிப்பிரிவு.

## பிரிவுணர்த்தல்.

காந்துஞ் சினத்துப் புகர்முக வெங்கர டக்களிற்று
வேந்தன் பகைவினை முன்செல்லு மால்பின் மிகுசெருவிற்
சேர்ந்தங் குதவி செயச்செல்ல வேண்டுமின் செய்வளையாய்
சாந்தம் புரிகுழ லாள்வருந் தாவகை சாற்றுகவே. ௫௱௨௭

## பிரிவுவிலக்கல்.

கன்னற் சிலைமதன் காந்துஞ் செருவிற் கலங்குகின்ற
வின்னற் குதவிசெய் தாலென்ன தாகு மிருஞ்செருவின்
மன்னர்க் குதவி செயப்பிரி யும்மவர் வான்றொடுகோச்
செந்நெற் பழனக் கழனிநல் லூரவெஞ் சேயிழைக்கே, ௫௱௨௮

## தலைவிக்குரைத்தல்.

வகையுற்ற தார்புனை மன்னர்க்கு மன்னர் மறங்கெழுவான்
பகையுற் றுழியுத விக்கிசைந் தாரணி பைங்குரும்பைத்
தகையுற்று வம்பு தருக்கியம் போருகஞ் சாய்த்தறவே
மிகையுற் றெழுந்தன பாரம்பொ ருவிடை மெல்லியலே. ௫௱௨௯

## பாணனைப்பாசறைவிடுத்தல்.

தகைமெலி யக்கொங்கை தாங்குபைம் பொன்னும்வெஞ் சாயகப்பூத்
தொகைமெலி யப்படுந் துன்பமுஞ் சொல்கத் தொழுதிறைஞ்சப்
பகைமெலி யத்தங்கு பாசறை மேற்செல்லும் பாணமுல்லை
முகைமலி யப்புனை தொங்கலங் கேழ்வன் றன் முன்புசென்றே. ௫௱௩௰

## பாணனைத்தலைவன்கேட்டல்.

சேதா வனமுலைச் செவ்வழி யாழ்கொண்டு சேரிவிட்டுப்
போதாத பாணரொப் போதுவந் தீர்புல வும்பருந்து
மீதாடு பாசறை வாய்வினை யேனுக்கு வேனெடுங்கண்
சூதார் வனமுலைத் தோகையென் னேநின்று சொல்லியதே. ௫௱௩௧

## பாணன்கழறல்.

திருவடி வீழ்ந்தடி யேன்திரு வேவிடை யென்றுசெப்பப்
பருவர லெம்பெரு மாட்டி பகர்ந்தது பற்றலரைப்
பொருதிகல் வென்ற புனைமணித் தேரும் புரவலரும்
வருவது கண்டு சொலப்பெற்றி லேமென்னும் வாசகமே. ௫௱௩௨

## தலைவன்பாசறைப்புலம்பல்.

சாந்தங் கமழுந் தடமுலை யாணின்ற தன்மையது
வேந்தன் பகைமுற்றி மீளலெங் காள்வெயில் போயொளித்துக்
காந்துங் கடுங்கன லும்பொடி போர்க்குங் கடைப்பனிநாள்
போந்தும் மிருந்துவிட் டேனென்ன பாவம் புகல்வதுவே. ௫௱௩௩

## உருவெளி.

வரிதருங் காஞ்சி மணிநெடுந் தேரும் வயங்கெழில்வார்
பரியும் மிருகட் பகடுமை வாட்படை யுங்குவிந்து
திரிய முனிந்தது தேர்வல வாகல வாச்செருவிட்
டிரிய முனிந்திறை கொண்டகல் காலையி லெதிக்குமே. ௫௱௩௪

### தோழிநிமித்தங்கூறல்.

அரவிசைக் குந்திரு வல்குனல் லாயடை யார்மடியப்
பொரவிசைக் கும்பரி பூண்டபொற் றேர்நம் புரவலர்தாம்
வரவிசைக் கும்பல்லி வாமந் துடிக்கும் வரிநெடுங்க
ணிரவிசைக் குங்குழ லோடிள வாடையின் றென்செய்யுமே. ௫௱௯௫

### வினைமுற்றிமீண்டது.

புங்கம் படவண் டிமிர்தருங் கோதைப் புரிகுழலா
யங்கம் படர்சொண் டழிவதென் னேயினி யன்றிநரைப்
பங்கம் படவென்ற பன்மணித் தேர்வெம் பரிகடவிச்
சங்கம் படக முழங்கவந் தார்நந் தலைவரின்றே. ௫௱௯௬

### தலைவிகூற்று.

பரியுங் கிரியும் பரிநெடுந் தேரும் படைகவிந்து
விரியுங் கடலன்ன தானையும் வேந்தும்வெம் போர்கடந்து
வரியுங் கழன்முடி மன்னன்பொற் றேரில் வரும்பரிசு
தெரியுந் தெரியிழை யீர்காண வாருமிச் சேணிலத்தே. ௫௱௯௭

### வலம்புரிவாழ்த்து.

மேலோட நின்று விளாகின்ற வாவிக்கும் பாவிவிழிச்
சேலோடு நீர்க்குந் தெருமந்த நெஞ்சிற்குஞ் செஞ்சடையோன்
காலோ குறுமுனி கையோ மடுவின் கரையில்வந்த
மாலோ விறைவர் மணிநெடுந் தேரில் வலம்புரியே. ௫௱௯௮

உற்றுழிப்பிரிவு முற்றும்.

---

## பொருள்வயிற்பிரிவு.

### பிரிவுணர்த்தல்.

அருள்கொண் டியற்று மறமு மறநெறி யாய்ந்தமென்பூச்
சுருள்கொண்ட கோதையர் தோள்புண ரின்பமுஞ் சூழ்சுரும்பு
மருள்கொண்டு பாடு மதுமலர்ச் சோலை மயிலனையாய்
பொருள்கொண் டொழியமுற் றுதென்று ஞாலம் புகலுமின்றே. ௫௱௯௯

## தோழிசெலவழுங்குவித்தல்.

சேலுங் கயலு மனையகண் ணாள்சிறு வன்சதங்கைக்
காலுந் தளர்நடை யுங்கையும் வையமுங் கன்னலுந்தீம்
பாலுங் கலந்த பவளத் தமுதுந் தவளமுத்தும்
போலும் பொருட்பிரி வும்முள வோநம் புரவலனே. ருாசய

## அமையாமைகூறிச்செலவழுங்குவித்தல்.

மன்னிய செல்வமு மாறா விளமையும் வேறகலா
வின்னுயி ரும்பெறி லேதமுண் டோவிகல் வேனெடுங்கண்
மின்னிய நுண்ணிடை மென்னடை யன்ன மெலியவந்திங்
குன்னிய லொண்பொருண் மேல்வள்ள லேயிங் கொருப்பட்டதே. ருாசக

## தலைவிக்குப்பிரிவுணர்த்தல்.

படைத்தார் படைத்த பொருளான் முயன்ற பயனுலகிற்
கிடைத்தா ரவரவ ரொன்பது கேட்டுமுன் கேடில்செல்வ
முடைத்தாய வன்பின ரொண்பொருள் தேடி யுதவலுள்ளத்
தடைத்தா ரணிவளை யாயடை யாத வகன்புலத்தே. ருாசஉ

## தலைவிநிலைகூறிவிடுத்தல்.

இனவா ரணந்திரி வெஞ்சுரம் போக விரும்பொருட்கு
நினைவாகி லும்மை விலக்குகி லேஞ்செல்லு நீள்புனத்து
மனவா ரகலல்குல் வல்லியை நீர்வரு வார்சிலனா
வினவா தொழியும் வினவின்முற் றாது வினையுமக்கே. ருாசங

## இரவுநீட்டங்கூறிச்செலவழுங்குவித்தல்.

ஒருநா ளிகைசெல்லி லொன்பதி னாயிர மூழிசெல்லு
மருநா ளிகையவை யாறைந்து நீந்தி யருவனாக
ளிருநாலு மாழ்கட லேழுங் கடந்திளை யாமலென்றாழ்
வருநாளு முண்டுகொ னீசென்ற நாளிம் மதிநுதற்கே. ருாசச

## பிரிவாற்றாமை.

புறந்தா ழளகஞ் சரியப் புளகம் புரியக்கொங்கை
சிறந்தாக மூழ்கித் திளைத்ததெல் லாஞ்செல்வ மேவிரும்பி
மறந்தார் முடிய மறந்தன ராயின் மடநெஞ்சமே
யிறந்தா லினிப்பிற வாதாப்பெண் பால்வந் தெழுமையுமே. ருாசரு

## வன்பொறையெதிரழிதல்.

நகையாடி வைகலுஞ் சென்றமென் றூதிற்பர் நானவனைத்
தகையா துமக்கிது தன்மையென் றேன்றணப் போமினியென்
றுகையா மணிநெடுந் தேர்சுரம் போயின ரொண்பொருட்கென்
மிகையா லெனக்கிங்ங னேவந்த தாலிந்த வெந்துயரோ. ௩௱௪௬

## பிரிவாற்றுவித்தல்.

இருங்கற் புடையவ ரின்புற வாடவ ரோகுவது
மருங்கற் புடையவ ராற்றுந் திறனு மணியிழைபொன்
மருங்கிற் படர்முலை யாயவர் மீண்டு வருவதுவுங்
கருங்கற் புடைதழு வுங்கடன் ஞாலங் கடனென்னுமே. ௩௱௪௭

## இல்லத்தழுங்கல்.

தொழுது வணங்கி மணங்கமழ் தார்பெய்து தொய்யின்மெய்யி
லெழுதி முயங்கி மயங்கின மாக விருங்கயற்க
ணழுது சிவந்து பசந்தது காமிங் ககலுவமேற்
பழுது பிறந்து விடுந்தனி யாவி பணிமொழிக்கே. ௩௱௪௮

## தலைமகன்செலவழுங்கல்.

வரியரி தங்கு மருணெறிக் கானமும் வானருவி
சொரிதரு துங்கக் கிரியுமுண் டோகொய் சுவற்கவனப்
பரிபுர நீள்குரப் பாய்பரித் தேர்வல்ல பாகவென்றுந்
தெரிவரி தாலிது வோபண்டு நாஞ்சென்ற சேணெறியே. ௩௱௪௯

## சுரத்திடையழுங்கல்.

சென்றே பொருள்முற்றி மீளுத லன்றெனிற் றேர்ந்திதனை
யன்றே தவிர்தலன் றேயறி வார்தொழி லாரழற்றிண்
குன்றே நெருங்குங் கொடுஞ்சுரத் தென்னையுங் கொண்டுவந்து
நின்றே வருந்துநெஞ் சேயஞ்சு வேனின் னிலையதற்கே. ௩௱௫௰

## சுரத்திடைக்கனவொடுபுலம்பல்.

வனவேய் பொருந்தடந் தோள்வடந் தோய்முலை வல்லிபுல்ல
நனவே யெனவுன்னி நாட்டந் திறந்துள ஞானமிலா
னனவே தனிநின் றிரங்கவெங் கானத் திகழுங்கங்குற்
கனவே யுனக்குங் கனவெய்து மாவொரு காலத்திலே. ௩௱௫௧

## உருவெளி.

விரும்பும் பொருண்முற்றி வெவ்வினை யேனின்று மீளுநெறி
யிரும்பும் பொரியெழுங் கானமன் றேவிள நீருமந்தண்
கரும்புங் கமுகுங் கதலியுஞ் சேல்களுங் காமரிசைச்
சுரும்பும் பயில்குழற் சோலையு நீகொண்டு தோன்றுவதே. ௫௱௫௨

## தலைவி இளவேனிற் பருவங்கண்டு புலம்பல்.

தளவே பொருநகைத் தையனல் லாய்நஞ் சனத்திலும்வே
றுளவே தனமென் றொழிந்தன ராக வுயங்கியநம்
மளவே நெருங்கு மருங்குயில் வேளை வரவழைக்கு
மிளவேனில் வந்தும் வருகிலர் காதல ரின்னமுமே. ௫௱௫௩

## பிரிவாற்றாமை.

மறித்துப் பிறையொன்று வந்திடுங் காலை வருவலென்று
குறித்துப் பிரிந்தனர் கோல்வளை யாய்மென் குவலையங்க
ணெறித்துப் புனைந்து நறுநுத னீவி நிரைவளைகை
செறித்துப் பணைமுலை மேற்றொய்யி றீட்டிய செங்கையரே. ௫௱௫௪

## பிழைத்தது பருவமென்றிரங்கல்.

அரும்புறு கொங்கை யலருறு கோதை யயிலுறுகட்
கரும்புறு மின்சொற் கனங்குழை யாய்களி கொண்டுவண்டு
சுரும்புறு மென்கொன்றை சூழ்சடை போலொளி தோன்றுசெக்கர்
பெரும்பிறை தோன்றியுந் தோன்றூர் பொருளிற் பிரிந்தவரே. ௫௱௫௫

## வரவுமொழிதல்.

குரவலர் பூங்குழ லார்நெடு வீதி குறுகவண்டு
விரவலர் தாவ மிகமிக வாழ்த்தி வியந்துமுன்னின்
றிரவல ரேத்த வினவளை யார்ப்ப வியன்முழங்கப்
புரவல ரின்றுவந் தார்திரு வேதம் பொருண்முடித்தே. ௫௱௫௬

## கடிதின் வந்தீரெனு மின்றோட்குத் தலைவன் கூறல்.

கருங்குல வெற்புங் கடும்புன லாறும்வெங் கானுமெல்லாஞ்
சுருங்க விமைப்பொழு திற்கொண்டு மீண்டனந் தோகையன்னாள்
மருங்கு லெடுத்த மகவுமுள் ளாவி வருந்துயிர்ப்பு
நெருங்கும் முலைக்கையி னீவதில் லாதகண் ணீரும்வந்தே. ௫௱௫௭

### நினைத்தமைகூறல்.

எண்ணு வரும்பொரு ளேகுஞ் சுரத்தி லெனைப்பகலுங்
கண்ணார வந்துன் கவினலங் காட்டுதி கங்குலெல்லாந்
தண்ணார் மலர்ப்பள்ளி தங்கவி டாது தழுவுதிநீ
பெண்ணா ரமுதனை யாய்வினை யேனைப் பிரிந்ததின்றே. ௫௱௫௮

### காணாநிலையுரைத்தல்.

வானகத் தேநின்று வந்தனை யாயிங்க ணீவருந்த
யானகத் தேகொண்டி ராததெந் நாளுன்னை யெய்தியவெங்
கானகத் தேயுண் மறந்தனை யோவருங் கங்குலினு
மூனகத் தேகொண் டொளித்தனை யோகண் டயின்றிலவே. ௫௱௫௯

### பள்ளியிடைமகிழ்ச்சி.

முருந்தே யனைய முறுவலுஞ் செவ்வி முகமுங்கண்டு
மருந்தே யனைய மழலையுங் கேட்டு மதுகரஞ்சூழ்
செருந்தே ரலங்கற் செறிகுழன் மோந்துசித் தங்களிகூர்ந்
திருந்தே னினிவருந் தேனிள வாடை யெறிதுளிக்கே. ௫௱௬௰

### தலைவியைத்தலைவன்பிகுதிகொண்டுவியத்தல்.

வெதிரகொண்ட தோளியென் மேல்வைத்த காதல்கொல் விண்வடபாற்
கதிர்கொண்ட மீனன்ன கற்பினற் பான்மைகொல் காய்கனகப்
பிதிர்கொண்ட மென்முலை பின்முறை வேட்பப் பெறும்பையையின்
றெதிர்கொண் டதுமண மங்கல மானது மேற்றுவந்தே. ௫௱௬௧

### இல்லறம்.

வேந்தன் பொருளுக்கு வெஞ்சுரம் போய்வந்த வெம்மைமெல்லாம்
பூந்தண் பெடையமர் சேக்கையிற் போக்கினன் பூவையன்று
ளேந்தும் புதல்வனை யின்புற மார்பி லெடுத்தணைத்து
மோந்துந் தலைவருடன்முலை யாக முயங்கியுமே. ௫௱௬௨

பொருள்வயிற்பிரிவு முற்றும்.

---

### துறவறம்.

அல்லொடு நண்பக லைம்புல னுலரும் போகந்துய்த்து
வல்லியு மல்லல் வளவய லூரனு மாதருமே
சொல்லிய கேள்வித் துறைமுடி வாய்ந்து துணைவியரோ
டில்லறங் காத்துத துறவறந் தாங்க ளியைந்தனரோ. ௫௱௬௩

அம்பிகாபதிகோவை முற்றிற்று.

—:(o):—